22 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs
416.315.9397
www.mahendran.ca
Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca

நதி 22 | பாலம் 10 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 15, 2012

# மூன்றாம் ஆண்டில் முள்ளிவாய்க்கால்!

தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் ஆயுதப்போராட்டத்தை மௌனிக்க வைத்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. இலங்கை அரசு தாங்கள் புலிகளை தோற்கடித்துவிட்டதாகக்கூறி மூன்றாவது ஆண்டாக மே மாதம் முழுவதும் கொண்டாடி வருகின்றது. மே 19, 2012 இல் இலங்கை அரசு தனது இராணுவ தளபாடங்களுடனும் இராணுவ வீரர்களுடனும் கடந்த இரண்டு வருடங்கள் செய்தது போல் மிகப் பெரிய ஊர்வலம் செல்ல இருக்கிறது. ஆனால் இலங்கை ரூபாவின் பெறுமதி மிகவும் விழுந்து கொண்டு போவதாலும் இலங்கையின் எரிபொருள் விலை மிகவும் அதிகரித்து கொண்டு போவதாலும் அரசின் இவ்வருட கொண்டாட்டங்கள் கடந்த வருடங்கள் போல் பெரிய செலவினங்கள் உடையதாக இருக்க மாட்டாது என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் இலங்கை அரசை, உலகின் தற்போது இருக்கும் ஒரே ஒரு வல்லரசான அமெரிக்கா பேச அழைத்திருப்பதே மிகவும் முக்கியம் வாய்ந்த விடயமாக இலங்கை அரசும் இலங்கைப் பத்திரிகைகளும் கருதுகின்றன. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் G.L. பீரிஸ் தலைமையிலான குழுவினரும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனும் மே 18, 2012 இல் அமெரிக்காவில் பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளனர்.

இலங்கையின் இராணுவ விடயங்கள் மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமாக பேசுவதற்காக அதற்கான ஆயத்தங்களுடன் வருமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் G.L. பீரிஸ்ஸை அமெரிக்கா கேட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோறியா நூலண்ட் ஊடகவியலாளர்களை சந்தித்தபோது தெரிவித்திருந்தார். இதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சர் G.L. பீரிஸ் தலைமையிலான குழு மே 14, 2012 இல் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜத்தை மேற்கொண்டு அமெரிக்கா புறப்பட்டுள்ளது.



தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099
E-mail: paski.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
9 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
MONEY TRANSFER
3228 Eglinton Ave. E. #3 — 416.267.8221
3351 Markham Rd. #109 — 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5, Markham & Eglinton, Tel:416.264.3232
3351Markham Rd., #129, Markaham & Steeles, Tel: 416.609.2022

# மூன்றாம்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கையின் குழுவில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன, சுற்றுப்புறச்சூழல் அமைச்சர் அனுர பிரியதர்ஷன் யாப்பா ஆகியோரும் இருக்கின்றனர். இலங்கை ஜனாதிபதியின் மகன் நாமல் இராஜபக்சாவும் இந்தக்குழுவில் முதலில் சேர்க்கப்பட்டிருந்தாலும் இறுதிநேரத்தில் அவரது பெயர் அமெரிக்கா செல்லும் குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.



இப்பேச்சுவார்த்தைகள் தொடங்கமுன்னரே இலங்கைஅரசு அமெரிக்கஅரசுடன் முன்கூட்டியே பேச்சுக்களை தொடங்கியுள்ளது. வோஷிங்டனில் இலங்கை தூதுவர் ஜாலியா விக்கிரமசூரியா, அமெரிக்க மத்திய மற்றும் தெற்கு ஆசிய விடயங்களுக்கான உதவி செயலாளர் றொபர்ட் பிளேக்கை சந்தித்து கதைத்துள்ளார். அதேபோல் இலங்கையிலும் அமெரிக்க தூதுவர் பற்றீசியா பூட்ரெனிஸ் உடன் அமைச்சர் G. L. பீரிஸ் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இவ்வாறான முன்கூட்டிய பேச்சுவார்த்தைகள் மூலம் இலங்கைஅரசிற்கு தற்போது இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிண்டன் என்ன எதிர்பார்க்கிறார் என நன்றாகவே தெரியும் எனக் கூறும் இலங்கையின் சண்டே ரைம்ஸ் பத்திரிகை தனது ஊகமாக பின்வருவனவற்றை தெரிவித்துள்ளது.

அமெரிக்க அரசு இலங்கையில் இதுவரை காலமும் நடந்தவற்றை மறந்துவிட்டு இனிமேல் எடுக்கப்பட உள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையே இலங்கையிடம் இருந்து எதிர்பார்க்கிறது. அமெரிக்காவால் முன்னின்று அமல்படுத்திய மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் உள்ள ஒவ்வொரு விடயத்தையும் இலங்கை அரசு எவ்வாறு நிறைவேற்றப்போகின்றது என இலங்கை அமெரிக்காவுக்கு விளக்கமளிக்க வேண்டி வரும்.

இதற்கு முன்னோடியாக அமைச்சர் பீரிஸ் அவர்கள் ஆளும்கட்சியை கூட்டி LLRC அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள எவற்றை தற்போது நடைமுறைப் படுத்தலாம் என ஆராய்ந்துள்ளதாக சண்டே ரைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளது. இவற்றை விட இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிண்டன் இறுதிப் போரின் போது நடைபெற்ற நிகழ்வுகளுக்கான பொறுப்பு ஏற்பது பற்றியும் அமைச்சர் G.L. பீரிஸ் இடம் கேட்பார் எனவும் கூறுகிறது.

இப்போர்க்கால நிகழ்வுகளை இலங்கை இராணுவம் விசாரிப்பதில் திருப்திப்படாத அமெரிக்கா இவற்றின் மீது நடுநிலையான விசாரணை தேவை என வலியுறுத்துகிறது. அமெரிக்க அரசு எவ்வாறான நடுநிலையான விசாரணை என விளக்கமாக கூறாவிட்டாலும், அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தை சேர்ந்த உலக குற்றவியல் நீதி சம்பந்தப்பட்ட அலுவலக உத்தியோகத்தர் ஸ்ரீபன் ஜே ராப் அவர்கள் இவ்வாறான நடுநிலையான விசாரணைகள் மூலம் பாதிக்கப்பட்டோர்களுக்கு நிவாரணப்பணம் வழங்கப்படுவதை எதிர்பார்க்கிறார் என தெரிய வருவதாக மேலும் சண்டே ரைம்ஸ் தெரிவிக்கிறது.

அண்மையில் இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிண்டன் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து இலங்கை விவகாரங்கள் பற்றியும் பேசியிருந்தார். அதன்போது இலங்கையில் இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுக்களை துரிதப்படுத்துவதற்கு தமிழ் அரசியல் கட்சிகளை பேச்சு மேசைக்கு அழைத்து வருவது தொடர்பாக பொது இணக்கப்பாடு ஒன்றை இவர்கள் எடுத்தார்கள். அத்துடன் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த அந்நாட்டு அரசுக்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து அழுத்தங்களை பிரயோகிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. G.L. பீரிஸை சந்திப்பதற்கு முன்னரே இந்த சந்திப்பு இலங்கை அதிபரின் முடிவில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அரசின் இந்த நிலைப்பாட்டிற்கு இலங்கைஅரசு, தான் 13 ஆவது அரசியல் அமைப்பிற்கான திருத்தப்பிரேரணையை அமல்படுத்துவதாக இந்திய அரசிற்கு உறுதி அளித்துவிட்டு பின்னர் அவ்வாறு செய்யாமல் விட்டதுதான் காரணம் என சண்டே ரைம்ஸ் பத்திரிகை எழுதியுள்ளது.

அமைச்சர் G.L. பீரிஸ் இலங்கை அரசு தமிழ் மக்களிற்கான தீர்வை கொடுக்க முடியாமல் இருப்பதற்கு தமிழர் கூட்டமைப்பு (TNA) இலங்கை அரசு அமைத்த நாடாளுமன்ற குழுக்களில் (Parliamentory Select Committee) பங்குபற்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளை கூறாமல் பகிஸ்கரிப்பதே முக்கியகாரணம் என இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிண்டனிடம் கூறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதை எதிர்பார்த்தே தமிழ்கட்சிகளை பேச்சுவார்த்தைக்கு போக வைக்கும் விடயம் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிண்டனுடையதும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கினதும் பேச்சுவார்த்தையில் இடம் பெற்றதாக கருதப்படுகிறது.

போர் முடிந்து மூன்று ஆண்டுகள் முடிவுற்றபோதும் தமிழ் மக்கள் எதுவித தீர்வும் இல்லாமல் அவலப்பட்டுக்கொண்டு இருக்கின்றனர். மேலும் தமிழர் கூட்டமைப்பு தலைவர் திரு. சம்பந்தன் அவர்கள் சில விட்டுக்கொடுப்புகளை செய்வதனை அரசியல் ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.






விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# முள்ளிவாய்க்கால் - ஒரு முடிவே அல்ல!

இலங்கையின் தமிழ் - சிங்களத் தேசிய இனங்களுக்கிடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார முரண்பாடுகளை வன்முறையற்ற வகையில் தீர்க்க முடியவில்லை. இதனால் ராணுவத் தீர்வுகளை நோக்கிய சூழ்நிலை மேலெழுந்தது. யுத்தம் இதனுடைய தர்க்கரீதியான தொடர்ச்சிதான். எனினும் யுத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எந்த வகையிலும் நியாயம் வழங்கி விடவில்லை.

பல்வேறு இனக்குழுமங்களுக்கிடையே உருவாகும் தேசிய இனச் சிக்கல்களுக்கு வெவ்வேறு வகையான தீர்வுகளே சாத்தியம். தேசிய இனப்பிரச்சினை தொடர்பான ஆய்வுகள் இத்தகைய பிரச்சினைகள் எழுவதற்குப் பல்வேறு தர்க்க பூர்வமான காரணங்களை அடையாளம் காண்கின்றன. அந்தக் காரணங்களில் முக்கியமான ஒன்று தேசிய இனமுரண்பாடுகளை ஊக்குவிப்பதில் அரசியல், பொருளாதார மற்றும் சர்வதேச சூழல் என்பனவற்றின் வகிபாகமாகும்.

இலங்கையின் தமிழ் தேசிய இனப்பிரச்சினை, சிங்கள தேசிய மேலாதிக்க அரசியலின் ஒரு தவிர்க்க முடியாத விளைவாகும். சிங்கள ஆளும் வர்க்கங்கள், இலங்கை சுதந்திரம் பெற்ற காலப்பகுதியிலிருந்தே சிங்கள தேசிய இனத்துக்கு சாதகமானதும் அந்தத் தேசிய இனத்தை முன் நிறுத்துவதுமான கொள்கைகளைத் திட்டமிட்ட முறையில் உருவாக்கி நடைமுறைப்படுத்தி வந்துள்ளன. இன்றும் நிலைமை அப்படியேதான் உள்ளது. இலங்கையின் அரசியல் முறை நாடாளுமன்றத் தேர்தல்களை அடியொற்றிய ஜனநாயகத்தைக் கொண்டிருப்பதால் சிங்கள அரசியல்வாதிகள் தமது சிங்கள எதிரிகளை தோற்கடிக்க தமிழ் மக்களுக்கு எதிரான கொள்கைகளை முன்வைத்துத் தேர்தல்களில் வெற்றியீட்டி வருகிற மரபு ஆழமாகப் பேணப்பட்டு வந்துள்ளது.

தேர்தல்களை மையப்படுத்திய தமிழ் விரோத அரசியல், அடிப்படையிலேயே தமிழ்தேசிய இனத்தின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கியது, இலங்கையின் ஒட்டுமொத்தமான அரசியல் அமைப்பினதும் நிறுவனங்கள் மீதும் தமிழ்மக்கள் நம்பிக்கையினை இழக்கவும் வழி வகுத்தது.

தமிழ் மக்களது நீதிக்கான போராட்டம் ஒரே இரவில் ஆயுதமயமாக்கப்பட்ட ஒன்று அல்ல. தமிழ் தேசிய இனத்தினது வன்முறையற்ற போராட்டங்களை இலங்கை அரசு கோரத்தனமாக ஒடுக்கியது. தமிழ் தேசிய இனத்தினது 30 வருடகால வன்முறையற்ற போராட்டம் எந்தவிதமான முற்போக்கான தீர்வுக்கும் வழிவகுக்கவில்லை. இதற்கு முழுமையான காரணம் தமிழ்த் தலைமைகள் அல்ல. சிங்கள தேசியவாதிகளும் அவர்களது அரசியலும்தான் இதற்கும் பொறுப்பேற்க வேண்டும். இதன் தவிர்க்கமுடியாத விளைவே – தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சி ஆகும்.

விடுதலைப்புலிகளது அடிப்படை நோக்கம் தெளிவானது. சுதந்திர தமிழீழம். இந்தத் தீர்வினை அடைவதற்கு சாத்தியமான எல்லா வழிவகைகளையும் பயன்படுத்த வேண்டிய அரசியல் தேவை அவர்களுக்கு இருந்தது.



முனைவர் ஏ.ஆர்.எம்.இம்தியாஸ், அமெரிக்காவின் டெம்பில் பல்கலைக் கழகத்தின் அரசியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். தேசியவாதம், இனத்துவ முரண்பாடுகள், ஒப்பீடு அரசியல் ஆய்வுகள் என்பன அவருடைய ஆய்வுத் துறைகள். நவீன சீனா, இந்தியா பற்றியும் அவர் கற்பித்து வருகிறார். 90களில் “சரிநிகர்” வார இதழில் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர். இலங்கை முஸ்லிம்கள் பற்றிய பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர்.

விடுதலைப்புலிகளது அரசியல் இலக்கானது இலங்கையின் சிங்கள ஆளும் வர்க்கத்துக்கு மட்டுமல்லாது உலக அரசியல் ஆளும் வர்க்கங்களது அபிலாஷைகளுக்கும் எதிராகவே அமைந்திருந்து என்பதை நாம் கவனிக்க வேண்டும். விடுதலைப்புலிகளை இராணுவ வழியில் ஒடுக்க, இந்தியா உட்பட அனைத்து நாடுகளும் இலங்கை அரசாங்கத்துக்கு உதவி செய்தன. அமெரிக்கா மற்றும் சீனாவின் இராணுவ உதவிகள் இலங்கை அரசாங்கத்தின் யுத்தவெறிக்கும் வெற்றிக்கும் மேலும் துணை செய்தன.

.தேசிய இனச் சிக்கல்களுக்கு அடிப்படையிலேயே இரண்டு வகையான தீர்வுகள் உள்ளன.

1. அதிகாரப்பரவலாக்கம் (devolution of power)
2. வன்முறைப்பரவலாக்கம் மூலமான இனஅழிப்பு (Genocide)

இந்த இரண்டு தீர்வுகளுக்கு அப்பால் அரசியல் ஆய்வாளர்கள் மூன்றாவதாக ஒரு தீர்வினையும் முன்மொழிகிறார்கள்: அந்தத் தீர்வானது பிரிவினை (Partition) ஆகும். இலங்கை அரசைப் பொறுத்தவரை முதலாவது மற்றும் மூன்றாம் தீர்வினை வழங்குவதற்கு எந்தவிதமான அரசியல் விருப்பும் எப்போதுமே இருந்ததில்லை. 2009ல் முடிவடைந்த யுத்தமானது இலங்கை அரசைப் பொறுத்தவரையில் அரசியல் பூர்வமாகவும், படைத்துறை சார்ந்தும் உறுதியாகவும், எவ்விதமான சமரசமும் இல்லாதும் முடிக்கப்பட்டது. அதற்கான அரசியல் மற்றும் இராணுவ ஆதரவும் சர்வதேச அளவிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் திரட்டப்பட்டது. யுத்தம் மிகவும் மூர்க்கத்தனமாகவே நடந்தது. போரில் சம்பந்தப்பட்ட இரண்டு பிரிவினரும் அடிப்படை யுத்த விதிகளுக்கு மாறாகச் செயற்பட்டாலும் இலங்கை அரசாங்கப்படை திட்டமிடப்பட்ட முறையில் பாதுகாப்பு வலயங்களையும் மருத்துவமனைகளையும் குண்டுவீசித்தாக்கியது.

இத்தகைய தாக்குதல்களில் ஐக்கிய நாடுகள் அவையின் ஆணைக்குழுவின் மதிப்பீட்டின் படி குறைந்த பட்சம் 40,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இலங்கை அரசாங்கத்தின் தாக்குதலுக்கு உள்ளாகி மரணத்தைக் கையிலேந்திய வண்ணம் தப்பி ஓட முயன்ற மக்கள் மீது புலிகள் சுட்டார்கள். புலிகளுக்கு எதிரான யுத்தம் இலங்கையின் இனஉறவினை என்றென்றும் இல்லாதவாறு கடுமையாக பாதித்துள்ளது. பெரும்பான்மையான சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் யுத்தத்தினைத் தீவிரமாக ஆதரித்தனர். முள்ளிவாய்க்காலில் ஓடிய இரத்தம் தமிழர்களின் இன அழிப்பில் விளைந்தது என்றே தமிழ் மக்கள் கருதுகிறார்கள்.

முள்ளிவாய்க்கால் முடிவானது தமிழ்த்தேசிய இனத்தின் மிக முக்கியமான கேந்திரனலன்களை நாசமாக்கியது. ஆயினும் தேசிய இனப்பிரச்சினைக்குரிய தீர்வினை முன்மொழிவதற்கு எந்தவிதமான அரசியல் துணிவும் கடப்பாடும் இலங்கை அரசிடம் இருந்து வரவில்லை.

தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் உலக நாடுகளது அனுமதியுடனும் ஆசியுடனும்தான் நடந்தது என்பதுதான் உண்மை. ஆகவே, யுத்தத்துக்கு பிறகு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் உலக நாடுகள், குறிப்பாக மேற்கத்தைய நாடுகளும், இந்தியாவும் இலங்கைக்கு அழுத்தங்களை

**- ஏ.ஆர்.எம்.இம்தியாஸ் -**

பிரயோகிக்க வேண்டும். அரசியல் தீர்வு அதிகாரப் பரவலாக்கல் மூலமாக சாத்தியமாகாவிடின் மக்கள் வாக்கெடுப்பு (Referundum) மூலமாக தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார்களா இல்லையா என்பதனை அறிய வழி வகைகளைச் செய்தல் அவசியமானது. இந்த ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் அவையின் 19 வது அமர்வில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒரு முன்னேற்றமாகக் கருதலாம். எனினும், அந்தத் தீர்மானமானது தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு சரியானதும் தமிழ் மக்களுக்குப் பொருத்தமானதுமான தீர்வினைக் கொண்டு வருவதற்கு அதிகம் உதவாது. உலகநாடுகள் தமிழ் தேசிய இனப்பிரச்சனைக்கு சரியான தீர்வினைக் கொண்டுவருவதற்கு இலங்கையின் சிங்கள ஆளும் வர்க்கத்தின் மீது அரசியல், பொருளாதார மற்றும் சாத்தியமான எல்லா வழிமுறையிலும் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

முள்ளிவாய்க்கால் முடிவானது ஒரு வரலாற்று சோகமாகும். இரத்தமும் துயரமும் பின்னிப் பிணைந்து எழுந்த அரசியலின் முடிவாகும். அத்தோடு தேசிய முரண்பாடுகளினை மீண்டும் கூர்மையடையச் செய்த அரசியலின் தவிர்க்க முடியாத தொடர்ச்சியுமாகும்.

யுத்தமானது வெறுமனே அழிவுகளுடன் நிற்பதில்லை. அது இரத்தம் தோய்ந்த நினைவுகளை ஆறாத காயங்களாக விட்டுச் செல்லும். யுத்தத்துக்கு பிறகு தீர்வுகாண்பது

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# சோர்வும் துயரமும்



## சத்குரு வாசுதேவ்

அனைவருமே ஆனந்தமாக வாழவே விரும்புகிறோம். ஆனாலும் சில நேரங்களில் நாம் சோர்ந்து போய்விடுகிறோம். அந்த சூழ்நிலையை அத்தகைய மனநிலையை எப்படிக் கையாள்வது என்பது குறித்து நாம் பார்க்க வேண்டும்.

முதலில் உங்களுக்கு துயரம் எப்படி ஏற்படுகிறது? ஒரு விஷயம் குறிப்பிட்ட விதத்தில் நடக்க வேண்டுமென்று சில மனிதர்களையோ சில சம்பவங்களையோ ஏன் விதியையோ கூட எதிர்பார்த்திருப்பீர்கள். அது வேறு மாதிரியாக நடைபெற்று விடுகிறது. அப்படி ஒரு தனிமனிதர் அல்லது ஒரு சம்பவம், அல்லது வாழ்க்கையின் போக்கு ஏதோ ஒன்று உங்களுக்கு எதிராக இருக்கிறது என்று நீங்கள் கருதும்போது, அதற்கேற்ப உங்கள் மனச்சோர்வும் துயரமும் அதிகரிக்கிறது.

இந்தச் சோர்வும் துயரும் உலகை உருவாக்கிய ஆற்றலின் மீது நீங்கள் நிறைவேற்றுகிற ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம். யாருக்கு "தான்" என்கிற உணர்வு அதிகம் இருக்கிறதோ அவர்கள் மிக விரைவில் இதுபோன்ற மனக் காயங்களுக்கு ஆளாகிறனர். மனச் சோர்வு கொண்ட பலரின் வாழ்க்கையை ஆராய்ந்தால் அவர்கள் ஆணவம் மிகுந்தவர்களாய் இருந்தது தெரியவரும்.

இத்தகைய மனச்சோர்வு பெரிதாக வன்முறையை ஏற்படுத்தாது. ஆனால் தனக்கே ஒரு சேதத்தை ஏற்படுத்தும். பொதுவாக மனச் சோர்வு உள்ளவர்கள் கொலை செய்வதில்லை. தற்கொலை செய்து கொள்ளவே முயலுவார்கள். தங்களுக்குத் தாங்களே துன்பம் விளைவித்துக் கொள்வார்கள். இது அடுத்தவர்களின் அனுதாபத்தைப் பெறுவதற்கான முயற்சி தானே தவிர வேறல்ல.

மனம் புண்படுகிறது என்று சொல்கிறீர்களே, அதன் பொருள் என்ன? உங்களுக்குள் இருக்கிற அகங்காரம் புண்படுகிறது என்பதுதான் பொருள். வேறுவிதமாய் புண்பட முடியுமா என்ன? ஒருவர் ஆயுதம் கொண்டு தாக்கினால் உங்கள் உடல் காயப்படும். மற்றபடி உங்கள் மனம் காயமடைகிறது என்றால் அது உங்கள் அகங்காரத்தில்


Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org


ஏற்படுகிற காயத்தைத்தான் குறிக்கும். மனதில் சோர்வும் துயரமும் சூழ்ந்திருக்கிறபோது வாழ்க்கையை அதன் உண்மையான தன்மையில் உணர முடியாது. மனது சரியில்லை என்கிறபோது ஒரு மலரைப் பார்த்தால் கூட அதன் அழகை உங்களால் உணர முடியாது. வெளியில் இருக்கும் அழகை உணர உள்நிலையும் அழகாக இருக்க வேண்டியது அவசியம். துயரத்தைக் கையாளுவதற்கென்று பல முறைகள் உள்ளன. சிலருக்குத் துயரம் ஏற்பட்டால் தங்கள் வாழ்க்கையே முடிந்து விட்டதாய்க் கருதி வருத்தத்தில் ஆழ்ந்து போய் விடுகிறார்கள். சிலரோ, துயரமான மனநிலையையும், நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் எல்லாம் தங்கள் வாழ்க்கையில் மிகப் பெரிய கர்மயோகிகள் ஆகியிருக்கிறார்கள்.

மத்தியப்பிரதேசத்தில் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் இதுவரையில் தெரியவில்லை. சாகாயத்திரி மலைகளுக்கு அருகே ஒரு தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணி புரிந்து வந்தார். அவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளோடு வாழ்ந்து வந்தார். இரண்டு குழந்தைகளுமே நோய்வாய்ப்பட்டு ஒருவர் பின் ஒருவராக இறந்து போனார்கள். அதன்பிறகு தன்னுடைய மனைவி மேல் மிகுந்த அன்பு வைத்து அவரையே சார்ந்து வாழ்ந்து வந்தார். ஒரு வருடத்திற்கு பின் அவரது மனைவியும் இறந்து போனார். இந்த மனிதர் நிராதரவாக நின்றார்.

யார் யாரையெல்லாம் தன் வாழ்வின் ஆதாரங்கள் என்று கருதினாரோ அவர்களை எல்லாம் இழந்த அதிர்ச்சியில் என்ன செய்வது என்று தெரியாமல் அங்குமிங்கும் சுற்றிவந்து சாகாயத்திரி மலைகளுக்குள் சென்றுவிட்டார். குழந்தை பருவம் தொடங்கி அவர் பார்த்துக் கொண்டே இருக்கிற மலைதான் அது. அந்த நாட்களில் செழிப்பாகவும் பசுமையாகவும் இருந்த அந்த மலை இப்போது மரங்களே இல்லாமல் வறண்டு பசுமையிழந்து காணப்படுவதை உணர்ந்தார். சில நாட்கள் மலையிலேயே திரிந்து கொண்டு அங்கிருந்த காய்கனிகளை உண்டு காலம் கடத்தினார். சில நாட்கள் கழித்து அவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. இந்த மலையே வறண்டு போனதால்தான் தன் வாழ்க்கையும் வறண்டு போய்விட்டதாகக் கருதினார். இது உண்மையோ இல்லையோ அப்படியொரு எண்ணம் அவருக்குத் தோன்றிவிட்டது. அதனால் அங்குமிங்கும் விழுந்து கிடக்கிற விதைகளைப் பொறுக்கி ஆங்காங்கே நட்டுவைக்கத் தொடங்கினார்.

25 ஆண்டுகளில் ஒரு தனிமனிதராக 4 இலட்சம் மரங்களை வளர்த்தார். அந்தத் தனிமனிதரின் செயலால் இன்றும் சாகாயத்திரி மலையில் லட்சக் கணக்கான மரங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. அவருக்கு யாரும் யோகா பயிற்றுவிக்காத போதும் அவர் ஒரு யோகிதான். உங்கள் மனதில் தோன்றக்கூடிய எந்த எண்ணத்தையும் உங்களால் ஆக்கப்பூர்வமான சக்தியாய் ஆக்கிவிட இயலும். சொல்லப்போனால் எதிர்மறை என்பதாக எதுவுமே இல்லை. எதிர்மறையானதும் அடிப்படையில் நேர்மறையானதுதான்.

ஒரு பல்பு எரிவதற்கு நெகடிவ், பாசிடிவ் என்று இரு இணைப்புகளும் தேவை. எனவே எதிர்மறை சக்தி என்பது தவிர்க்கப்பட வேண்டியது அல்ல. சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டியது. துயரம் என்கிற உணர்வு ஏற்படுமேயானால் அதைப் பயன்படுத்தி அதன் மூலமாகவே இதயத்தை அன்பு மயமாக ஆக்கிக் கொள்ளவேண்டும். மாறாக துயரத்தின் விளைவாக எரிச்சலும் கோபமும் ஏற்படுகிறதென்றால் அது முட்டாள்தனம். வாழ்வில் மகிழ்ச்சியாய் இருப்பது ஒன்று மட்டுமே முக்கியமில்லை. எந்த உணர்ச்சியையும் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ளத் தெரிகிற பக்குவம்தான் முக்கியம்.

*-சத்குருவின் உரைகளிலிருந்து*

# முள்ளிவாய்க்கால்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பது அடிப்படையிலேயே மிகவும் சிரம்மான விடயமாகும். அதற்கு அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான்: யுத்தத்திற்குப் பின்பாக-அதுவும் யுத்தத்தில் ஒரு தரப்பு வெற்றியடைந்ததின் பிற்பாடு, இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது அரசியல் ரீதியாக மிகவும் கடினமான பணியாகும். யுத்தமானது போர்க் குற்றங்களையும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களையும் முன் கொண்டு வரலாம். அவ்வாறான குற்றங்கள் சமாதானத்தை அடைவதற்கு தடையாகவே அமைய வாய்ப்புக்கள் உண்டு. ஆதலால், தீர்வினை யுத்தத்துக்கு முன்பே எட்டி விடுவதுதான் தர்க்கபூர்வமானதாகும். இன்று இலங்கையின் அரசியல் ஆளும் வர்க்கத்தின் அரசியலின் முன்பாக இரண்டு தெரிவுகள் தான் உள்ளன. 1. உள்ளக சுயநிர்ணய உரிமையை (Internal self-determination) அடிப்படையாக்கிய முழுமையான என்றென்றுமே கிழித்தெறிய முடியாத அதிகாரப் பரவலாக்கல்.

2. வெளியக சுயநிர்ணய உரிமையை (External self-determination) அடிப்படையாகக் கொண்ட சுதந்திரத் தமிழ் அரசு.

இந்த இரண்டு தீர்வுகளும் இலங்கை முஸ்லிம் மக்களது நலன்களையும் அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும். தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றத் தகுதியான எந்தத் தீர்வும் முஸ்லிம் மக்களது பாதுகாப்பினையும் உரிமைகளையும் சமரசம் செய்து கொள்ளக் கூடாது. முஸ்லிம் மக்களுக்கு இருக்கும் தனித்துவமானதும் குறிப்பானதுமான பிரச்சினைகளை உள்வாங்கிய வகை யிலேயே தீர்வு வகையிலேயே அமைய வேண்டும்.



தமிழ்த் தேசியமானது முஸ்லிம்கள் விடயத்தில் செய்த அரசியல் தவறுகளை மீண்டும் ஒரு முறை செய்ய அனுமதிக்கக் கூடாது. முஸ்லிம்கள் தொடர்பான தமிழ்த் தேசியத்தின் எதிர் கால செயற்பாடுகள், கொள்கைகள் தொடர்பாக ஒரு அறிக்கையை தமிழ் தேசிய வாதிகள் முன்வைக்க வேண்டும். இவ்வாறான செயல்பாடுகள்தான் சிதைந்து போன தமிழ் முஸ்லிம் உறவினைப் பலப்படுத்த வழி வகை செய்யும்.

இலங்கைத் தமிழ் தேசியத்திற்கு முள்ளிவாய்க்கால் முடிவு ஒரு முடிவே அல்ல. அது தமிழ் மக்களின் போராட்டத்தின் அடுத்த கட்டப் பயணத்துக்கு வழி சமைத்துள்ளது.


**Computer Repair**



Computer repair, virus removal, data recovery, upgrading & any other trouble shooting. ***Home visit possible.***

***Contact: 416.894.6244***

வாங்க மோட்கேஜ் பற்றி பேசலாம் ! !

# மோட்கேஜ் கிளினிக்

5% வீதத்தோட செய்து
தாறம் எண்டு போட்டு
கடைசி நேரத்தில
கையை விட்டிட்டினம்!!

உதுக்குத்தானே இப்ப மோட்கேஜ்
கிளினிக் நடக்குது. ! அங்க
போனால்தான் உதுக்கு சரி! ! !

**சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை**

தற்பொழுது நீங்கள் வைத்திருக்கும் மோட்கேஜ்
செக்கன்ட் மோட்கேஜ் , லைன் ஒவ் கிரடிட்
எல்லாத்தையும் ஒரு பேமன்ராக மாத்தலாமா ? ?

வந்துபேசிப்பாருங்கோ!! பிடிச்சிருந்தா .......... மேல பேசுவம்

அழையுங்கள்



**416-644-3555**

22 ⟸ Ext ⟹ 28



**CENTUM Rapid Mortgages Inc.**

FSCO LIC # 10156

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. ⟹ **"Rapid Response; Rapid Results"**

# பிரீமியர் லீக் சாம்பியன் பட்டத்தை 44 ஆண்டுகளுக்கு பின்பு வென்றது மான்செஸ்டர் சிட்டி

## விளையாட்டுத்தகவல் 328



பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் மான்செஸ்டர் சிட்டி அணி 3-2 என்ற கோல் கணக்கில் குயின்ஸ்பார்க் ரேஞ்சர்ஸ் அணியை வீழ்த்தி 44 ஆண்டுகள் கழித்து பிரீமியர் லீக் பட்டத்தை வென்றது. பிரீமியர் லீக்கி போட்டியின் கடைசி நாள் ஆட்டங்கள் நடைபெற்றது. இதுவரை நடந்த 37 ஆட்டங்கள் மூலம் மான்செஸ்டர் யுனைடெட் அணியும், மான்செஸ்டர் சிட்டி அணியும் தலா 86 புள்ளிகள் பெற்றிருந்தன. எனினும் கோல் வித்தியாசத்தில் மான்செஸ்டர் சிட்டி முதலிடத்தில் இருந்தது. மேலும் சிட்டி அணி 1968ம் ஆண்டுக்கு பிறகு இங்கிலீஸ் பிரீமியர் லீக்கில் பட்டம் வென்றதில்லை. குயின்ஸ்பார்க் ரேஞ்சர்ஸ் அணிக்கெதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்றால் பிரீமியர் லீக் பட்டத்தை வெல்ல முடியும், என்ற நிலையில் சிட்டி அணி களமிறங்கியது. தொடக்கம் முதலே அதிரடியாக விளையா-டிய மான்செஸ்டர் சிட்டி 39வது நிமிடத்தில் முதல் கோல் அடித்தது. யாயா டோர் கொடுத்த பாசை மிக லாவகமாக வளைக்குள் தள்ளினார் சபலாட்டா. இந்த சீசனில் இவர் அடித்த ஒரே கோல் இதுதான். முதல் பாத-ியில் சிட்டி 1-0 என்று முன்னிலையில் இருந்தது. பிற்பாதியில் 48வது நிமிடத்தில் மான்செஸ்டர் சிட்டியின் தடுப்பாட்டக்காரர் லெஸ்காட் செய்த தவறால் குயின்ஸ்பார்க் பதில் கோல் அடித்து போட்டி 1-1 என்று சமநிலை கண்டது. இந்நேரத்தில் குயின்ஸ்பார்க் வீரர் பர்ட்டன், சிட்டி வீரர் கார்லஸ் டாவெஸை முழங்கையால் இடித்ததால் நடுவர் பர்ட்டனுக்கு சிவப்பு அட்டைக் காட்டி வெளியேற்றினார். இதை தொடர்ந்து குயின்ஸ்பார்க் 10 வீரர்களுடன் விளையாடியது. ஆனால் 10 வீரர்களுடன் விளையாடிய குயின்ஸ்பார்க் சளைக்காமல் போராடி ஆட்டத்தின் 68வது நிமிடத்தில் 2வது கோல் அடித்தது. இதன் மூலம் குயின்ஸ்பார்க் 2-1 என்று முன்னிலை பெற்றது. ஆட்டம் சமனில் முடிந்தால் கூட மான்செஸ்டர் யுனைடெட் பட்டம் வென்று விடும் என்ற நிலையில் சிட்டி வீரர்கள் போராடினார்கள். ஆனால் ஸ்டாப்பேஜ் நேரத்தில் நிலைமை மாறத்துவங்கியது. 92வது நிமிடத்தில் மான்செஸ்டர் சிட்டியின் எடின் டெசூகா தலையால் முட்டி 2வது கோலை அடித்தார். தொடர்ந்து 94வது நிமிடத்தில் பெனால்டி ஏரியாவுக்குள் பொல-ிட்டலி கொடுத்த பாஸை செர்ஜியோ அகுவாரா கோலாக மாற்ற ஈஸ்ட்லேண்ட் மைதானமே அதிர்ந்தது. தோற்கும் நிலையில் இருந்த மான்செஸ்டர் சிட்டி ஸ்டாப்பேஜ் நேரத்தில் அதிரடியாக விளையாடி 2 கோல்கள் அடித்து 3-2 என்ற கோல் கணக்கில் குயின்ஸ்பார்க்கை வீழ்த்திதோடு 3 புள்ளிகளையும் ஈட்டியது. நடப்பு சீசனில் 38 ஆட்டங்கள் முடிவில் மான்செஸ்டர் சிட்டி மான்செஸ்டர் யுனைடெட் அணிகள் தலா 89 புள்ளிகள் பெற்றிருந்தாலும் அதிக கோல்கள் அடித்த அடிப்படையில் சிட்டி பிரீமியர் லீக் பட்டத்தை தட்டி சென்றது. இதற்காக மான்செஸ்டர் சிட்டி 44 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியது இருந்தது. அதே வேளையில் சுந்தர்லேண்டுக்கு எதிரான ஆட்டத்தில் 1-0 என்று வெற்றி பெற்ற நடப்பு சாம்பியன் மான்செஸ்டர் யுனைடெட் பட்டத்தை பறிகொடுத்தது. இந்த அணி 2007 முதல் 2011 வரை தொடர்ச்சியாக 4 சீசனில் இங்கிலீஸ் பிரீமியர் லீக் பட்டத்தை தன்வசம் வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### பரபரப்பான போட்டியில் பஞ்சாப் அணி த்ரில் வெற்றி: டெக்கான் போராட்டம் வீண்

ஐ.பி.எல் பரபரப்பான லீக் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது. மொகாலியில் நடந்த ஐ.பி.எல் தொடரின் 61வது லீக் போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கான் அணித்தலைவர் சங்கக்காரா துடுப்பெடுத்தாட முடிவு செய்தார். டெக்கான் அணிக்கு ஷிகர் தவான், பார்த்திவ் படேல் சேர்ந்து நல்ல அடித்தளம் அமைத்தனர். முதல் விக்கெட்டுக்கு 47 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், பார்த்திவ்(18) வெளியேறினார். சங்கக்காரா(1) ஏமாற்றினார். பின் கேமரான் ஒயிட், தவான் இணைந்து அசத்தினர். பஞ்சாப் பந்துவீச்சை பதம் பார்த்த இவர்கள், 3வது விக்கெட்டுக்கு 96 ஓட்டங்கள் சேர்த்தனர். 36 பந்தில் அரைசதம் கடந்த தவான்( 71), பிரவீண் குமார் வேகத்தில் வீழ்ந்தார். கடைசி கட்டத்தில் கிறிஸ்டியன் மிரட்டினார். அவானா ஓவரில் வரிசையாக 2 சிக்சர் அடித்தார். இவர் 10 பந்தில் 24 ஓட்டங்கள் எடுத்தார். டெக்கான் அணி 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 190 ஓட்டங்கள் எடுத்தது. அரைசதம் கடந்த ஒயிட் 67 ஓட்டங்களுடன்(8 பவுண்டரி, 1 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தார். கடின இலக்கை விரட்டிய பஞ்சாப் அணி திணறல் துவக்கம் கண்டது. கிறிஸ்டியன் வேகத்தில் சைனி(3) காலியானார். ஜுன்ஜுன்வாலா ஓவரில் ஹாட்ரிக் பவுண்டரி அடித்த ஷான் மார்ஷ்(11) அதிக நேரம் நீடிக்கவில்லை. மன்தீப் சிங்(28) தாக்கப்பிடிக்கவில்லை. இதையடுத்து 7.2 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 56 ஓட்டங்கள் எடுத்து திணறியது. பின் அசார் முகமூது, டேவிட் ஹசி சேர்ந்து பொறுப்பாக ஆடினர். இவர்கள் அதிவிரைவராக ஓட்டங்கள் சேர்த்து நம்பிக்கை தந்தனர். அமித் மிஸ்ரா சுழலில் அசார்(31) ஆட்டமிழந்தார். தனது அபார ஆட்டத்தை தொடர்ந்த டேவிட் ஹசி, அமித் மிஸ்ரா ஓவரில் 2 சிக்சர், பவுண்டரி அடிக்க, மொத்தம் 21 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. பின் சுதிந்திரா பந்தையும் சிக்சருக்கு அனுப்பினார். ஸ்டைன் வேகத்தில் சிட்னிஸ்(11), சாவ்லா(8) வெளியேறினர். தனிநபராக போராடிய ஹசி, கிறிஸ்டியன் வீசிய அடுத்த ஓவரில் ஒரு சிக்சர் அடித்தார். பின் குர்கீரத் சிங் 2 பவுண்டரி அடிக்க, பஞ்சாப் அணிக்கு நம்பிக்கை பிறந்தது. கடைசி ஓவரில் பஞ்சாப் வெற்றிக்கு 16 ஓட்டங்கள் தேவைப்பட்டன. மன்பிரீத் கோனி சொதப்பலாக பந்துவீசினார். முதல் பந்தில் ஹசி 2 ஓட்டங்கள் எடுத்தார். இரண்டாவது பந்தில் ஒரு ஓட்டம். 3வது பந்தில் குர்கீரத் சிங் இமாலய சிக்சர் அடிக்க, டென்ஷன் எகிறியது. 4வது பந்தில் இளம் குர்கீரத் பவுண்டரி அடித்தார். 5வது பந்தில் 2 ஓட்டங்கள். 6வது பந்தில் குர்கீரத் மீண்டும் ஒரு சூப்பர் பவுண்டரி அடிக்க, பஞ்சாப் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 194 ஓட்டங்கள் எடுத்து திரில் வெற்றி பெற்றது. அரைசதம் கடந்த ஹசி 65 ஓட்டங்களுடன்(35 பந்து, 4 பவுண்டரி, 5 சிக்சர்), குர்கீரத் சிங் 29 ஓட்டங்களுடன்(12 பந்து, 4 பவுண்டரி, 1 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை டேவிட் ஹசி வென்றார்.

### மாட்ரிட் சாம்பியன் பட்டத்தை வென்று இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார் பெடரர்

மாட்ரிட் டென்னிஸ் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் முன்னணி நட்சத்திர வீரரான ரோஜர் பெடரர், செக் குடியரசு தோமஸ் பேர்டிகஸை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார். ஸ்பெயினில் நடை-பெற்று வந்த மாட்ரிட் தொடரின் இறுதிப்போட்டியில் உலகின் மூன்றாம் நிலை வீரரான ரோஜர் பெடரர், உலகின் 7ம் நிலை வீரரான செக் குடியரசின் தோமஸ் பேர்டிக்ஸுடன் மோதினார். முதலாவது செட்டை 3-6 என்ற கணக்கில் இழந்த பெடரர், கடுமையாகப் போராட வேண்டி தேவை ஏற்பட்டது. ஆனால் அடுத்த இரண்டு செட்களையும் அவர் தலா 7-5 என்ற செட் கணக்கில் வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை பெற்றார்.

இந்த சாம்பியன் பட்டம் மாட்ரிட் டென்னிஸ் தொடரில் ரோஜர் பெடரர் பெற்றுகொள்ளும் 3வது சாம்பியன் பட்டம் ஆகும். இந்த வெற்றியின் மூலம் இரண்டாமிடத்திலிருந்த ரபேல் நடாலை பின்னுக்கு தள்ளி, இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். முதலாமிடத்தில் தொடர்ந்தும் நோவக் ஜோகோவிச் நீடிக்கிறார். நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், உலகின் முதற்தர வீராங்கனையான பெலாரஸின் விக்டோரியா அஷெரன்காவை 6-1, 6-3 என்ற கணக்கில் இலகுவாக வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.



**எஸ். கணேஷ்**


## Sportsnet கிரிக்கெட் உலக மாபெரும் நட்சத்திரங்களின் சிறப்பிடம் IPL 2012

Sportsnet World உங்கள் அனைத்து கதாநாயகர்களினதும் இருப்பிடம் போட்டியாளர்கள் அவர்களின் விறுவிறுப்பான ஆட்டங்கள் அத்தனையும் HD தரத்தில். 2012 ஆம் ஆண்டின் அனைத்து போட்டிகளையும் உங்களுக்கு வழங்குகிறது. வெற்றிக்கிண்ணப் போட்டி மே 27 ஆம் திகதி.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த பருவத்துக்கான “விக்கெட்” விளையாட்டு போட்டியினை உங்களுக்கு வழங்குகிறது. இந்தியன் பிரிமியர் CIBC இன் அனுசரணையுடன் வழங்குகிறது.

Sportsnet World, கிரிக்கெட் ரசிகர்களின் இருப்பிடம். IPL 2012 இல் குழு அரங்க விளையாட்டுகள் மற்றும் பிளே ஒப்ஸ் உலகின் அதி சிறந்த விளையாட்டு வீரர்களுடன், ரவீந்திர ஜடேயா மற்றும் கிரிஷ் கஜேலின் ஆகியோர் தலைமையில்.

மே 27 மாலை 10 ET மணிக்கு / மாலை 7 ET மணிக்கு Sportsnet World வழங்குகிறது.

இத்துடன் சர்வதேச கிரிக்கெட் சங்கத்தின் மிகப்பெரிய நிகழ்வுகளை Sportsnet World வழங்குகிறது. Sportsnet World இன் தொடர்ச்சியான நான்கு வருட பல தள ஒப்பந்தங்கள் ESPN STAR Sports உடன் கடந்த வருடம் கையெழுத்திடப்பட்டது. கனடாவுக்கான தனித்துவ ஊடக ஒப்பந்தம். பெரிய சர்வதேச போட்டிகளை Sportsnet World இற்கு வழங்குகிறது. அத்துடன் உலகின் பிரிமியர் கிரிக்கெட் போட்டியான ICC கிரிக்கெட் உலகக் கிண்ணத்துக்கான 2015 போட்டிக்கும் வழிவகுக்கிறது.

Sportsnet World இன் இந்த அலைவரிசைகளை எப்படிப் பெறுவது என்பதை அறிய, தயவு செய்து www.sportsnetworld.ca என்ற இணையத்தளத்துக்கு சென்று அல்லது உங்கள் உள்ளூர் தொலைகாட்சி சேவை முகவர்களிடம் Sportsnet World பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். Sportsnet, Sportsnet World, sportsnet.ca மற்றும் OMNI ஆகியவற்றில் இந்தியன் பிரிமியர் லீக் 2012 முழு ஒலிபரப்பு அட்டவணைக்கு
பின்வரும் இணையத்தளத்தை சொடுக்குங்கள்.
http://www.sportsnet.ca/tvschedule/franchise/ipl_sked.xls
சமூக வலைத்தள ஊடக இணைப்புகள்: Twitter: @SportsnetWorld @Sportsnet @SportsnetPR
Facebook: www.facebook.com/Sportsnetworld www.Facebook.com/Sportsnet

# அதிகளவு அடுக்கு மனை!

ரொறொன்ரோ நகரத்தின் மத்திய பகுதி இலண்டன் (London), ரோக்கியோ (Tokyo), நியூயோர்க் (New York) போன்றவாறு நிறைந்த தனி வீடுகளையும் இரண்டு சேர்ந்த வீடுகளையும், தொடர்வீடுகளையும் கொண்டுள்ளது. இதுவே ரொறொன்ரோவின் வித்தியாசமானதும் கனடிய மக்களால் விரும்பத்தக்க முறையில் தனித்துவமாகவும் காணப்படுகின்றது. எனினும் ரொறொன்ரோவில் இப்பொழுது நிர்மாணம் செய்து கொண்டு இருக்கும் அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கையானது வடஅமெரிக்காவிலேயே அதிகமானதாகக் காணப்படுகின்றது. புதிதாக நிர்மாணம் செய்பவர்கள் றெக்கோட் (Record) அளவில் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். 6000 இற்கு அதிகமான கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி மனைகள், இவ்வருடத்தின் (2012) முதல் மூன்று மாதங்களில் விற்கப்பட்டுள்ளன. சரித்திரத்திலேயே இந்த முதல் மூன்று மாதங்களில் அதிகமாக விற்கப்பட்டதாக சரித்திரப்புத்தகம் இதனைப் பதிந்து வைத்துள்ளது.

அதிகமான புதிய அடுக்குமாடி மனைகள் சந்தைக்கு வருவதால் ஒவ்வொரு கட்டிடத்தொகுதியிலும் விற்கப்படும் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. இப்பொழுது ரெறொன்ரோ பெரும்பாகத்தில் 338 அடுக்குமாடிக் கட்டிடத்தொகுதிகள் நிர்மாணிக்கப்படுகின்றன. இதுவே முதல் கால்பகுதியில் அதிகமானதாகும். இதனால் விற்கப்பட இருக்கும் அலகுகளின் எண்ணிக்கை 84,698 ஆகும். விற்கப்படாமல் மனைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. 2011 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் விற்கப்படாமல் இருந்த மனைகள் 15,554 ஆகும். இந்த எண்ணிக்கை முன்னைய ஆண்டை விட அதிகமானதாகும். 2012ஆம் ஆண்டின் இரண்டாம் காலப்பகுதியில் மேலும் 40 புதிய கட்டிடத்தொகுதிகள் (11,000 அலகுகள்) சந்தைக்கு வர உள்ளது. இதனால் விற்பனையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

**1984 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்கிடையிலான மாற்றங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன**

| | 1984 | 2012 |
|---|---|---|
| பல்கலைக்கழக ரியூசன் செலவு | $1000 | $5366 |
| குடும்ப வருமான (வரியிற்கு பிற்பாடு) | $48,500 | $60,000(2009) |
| வேலையற்ற இளையோர் | 18.0% | 13.9% |
| கனடிய வீட்டின் சராசரி விலை $76,214 | $369,677 | |
| ரொறொன்ரோவில் (GTA பகுதி வீட்டின் சராசரிவிலை) | $96,078 | $504,117 |
| வன்கூவரில் வீட்டின் சராசரிவிலை | $116,444 | $761,742 |

ரொறொன்ரோ பெரும் பாகத்திற்கும் வருகின்ற புதிய வரவாளர்களை கணக்கு வைத்து பார்க்கும் போது, ஆண்டிற்கு ஆண்டு 42,000 தொடக்கம் 52,000 புதிய இருப்பிடங்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் ரொறொன்ரோ பெரும்பாகம் உள்ளது. ஆனால் கடந்த வருடம் 28,500 மனைகள், வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எனவே மேலதிக மனைகள் கட்டி முடித்து விற்க வேண்டிய நிலைமை உள்ளது. மேலதிக அலகுகள் (Condo. Unit) சந்தைக்கு வருவதால் 2012ஆம் ஆண்டின் இரண்டாம் காலப்பகுதியில் மேலதிகமாக விற்கப்படாத எண்ணிக்கைகள் அதிகரிக்கலாம். இந்த எண்ணிக்கை 17,000 வரை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 366

2008ஆம் ஆண்டின் நாலாம் காலப்பகுதியில் (Q4 - 2008) விற்கப்படாமல் இருந்த புதிய கொண்டோக்களின் எண்ணிக்கை 17,600 என்பதனை 'நாமும் நமது இல்லமும்' வாசிப்பவர்கள் அறிந்திருப்பீர்கள். 2012 இரண்டாம் (Q2 -

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

HomeLife/GTA
Realty Inc. Brokerage* *Independently Owned & Operated



Raja Mahendran, P. Eng.
Broker/Owner

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

FOR RENT
KENNEDY & FINCH
1 Bedroom condo for rent.
1 Parking.
Price$1000 +.

CONDO. FOR SALE
MCCOWAN & STEELES



2 + Den Bedroom condo for sale. 2 Washroom.
Parking . Over 1000 Sq.ft
Asking Price $219,900.




CONDO. FOR SALE
STEELES & KIPLING
2 Bedroom + 2 washroom condo for sale. Very spacious. Very convenient.

SPACE AVAIL. FOR UNISEX SALOON
In Scarborough
renovated space / Resonable rent.
Ready To Start Business.

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

# வன்னி யுத்தம் -ஓர் நேரடி அனுபவம்

இப்போது மடு முழங்காவில் ஜெயபுரம் அக்கராயன் முட்கொம்பன் பூநகரி போன்ற பரந்த பிரதேசங்களைச் சார்ந்த மக்கள் இடம் பெயர்ந்து கண்டாவளை புளியம் பொக்கனை தர்மபுரம் விசுவமடுவென செறிவாகக் குடியேறினர். கிளிநொச்சி பரந்தன் பகுதிகளை சார்ந்த மக்களும் இடம் பெயர ஆரம்பித்திருக்கின்றனர். மல்லாவி ஊடாக பழைய முறிகண்டிவரை இராணுவம் முன்னேறியிருந்தமையினாலும், ஓமந்தைப் பகுதியால் நெடுங்கேணியை நோக்கி இராணுவம் முன்னேறலாம் எனக் கருதப்பட்டமையாலும் மாங்குளத்தை விட்டு புலிகள் பின் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக மாங்குளம் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்புப் பகுதிகளில் குடியேறினர். இவர்களிற்கான நிவாரண பணிகளை புலிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் கூட்டுறவுத்துறையினரும் வழங்கிக் கொண்டு இருந்தனர். முல்லைத்தீவு பரந்தன் வீதி மக்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

விசுவமடு ஒட்டிசுட்டான் போன்ற பகுதிகளை அரசாங்கம் பாதுகாப்பு வலயங்களாய் பிரகடனப்படுத்தியது. பரந்த பிரதேசங்களில் இருந்து ஏராளமான மக்கள் இடம் பெயர்ந்திருந்தார்கள். இடம்பெயர்ந்த மக்கள் அனைவருக்கும் போதுமான இடவசதி கொண்டதாக ஒட்டிசுட்டானும், விசுவமடுவும் இருக்கவில்லை. அத்துடன் பாதுகாப்பு வலயமென அறிவித்து மக்களை அவ்விடங்களுக்கு அனுப்பிவிட்டு அதே பாதுகாப்பு வலயங்களை நோக்கியே விமானக் குண்டு வீச்சுகளையும் எறிகணைத் தாக்குதல்களையும் அரசாங்கம் செறிவாக நடத்தி வருவதால் அரசால் அறிவிக்கபடும் பாதுகாப்பு வலயங்களை தமிழ் மக்கள் நம்புவதற்கு தயாராக இல்லை. எனவே மக்கள் தமக்கு வசதியான இடங்களில் தற்காலிகமாகக் குடியேறினர். அவர்களிற்கான அடிப்படைத் தேவைகளை இயக்கம் கவனித்து வந்தது.

இடம் பெயர்ந்த மக்கள் மிகவும் குறுகிய பிரதேசங்களில் மிக நெருக்கமாக குடியேறியதால் பெரும் சுகாதாரப் பிரச்சினைகளை மக்கள் எதிர்கொண்டார்கள். உடையார் கட்டு, தேவிபுரம், வள்ளிபுரம் போன்ற பகுதிகளில் மக்கள் குடியேறக் கூடிய இடவசதிகள் போதியளவு இருந்த போதும் அங்குபோய் குடியேற மக்கள் விரும்பவில்லை. தமது சொந்த இடங்களுக்கு விரைவில் போகலாமென மக்கள் நம்பியதால் கூடியளவு தமது சொந்த இடங்களுக்கு அருகிலேயே மக்கள் பெரும்பாலும் குடியேறினர். எனவேதான் மக்கள் பயங்கரமான தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயமான சூழலில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அத்தோடு போதிய வைத்திய வசதிகளும் இல்லாத சூழலே அங்கு காணப்பட்டது. ஆனாலும் வன்னி மக்கள் மனம் தளர்ந்து போகவில்லை மக்கள் மனம் தளர்ந்து போகுமளவுக்கு விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களை விடவில்லை.



விரைவில் வெளிவர உள்ள புத்தகத்தில் இருந்து, விளம்பரம் வாசகர்களுக்காக சிறப்புக் கட்டுரையாக இதை பிரசுரிக்கின்றோம்.

விடுதலப்புலிகள் இயக்கமும் தற்போதைய சூழலில் பல நெருக்கடிகளை சந்தித்த போதும் தமிழ் மக்களை கவனிப்பாரற்ற அனாதைகளாய் கைவிட்டுவிடவில்லை. மக்களின் குடியேற்றப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, வைத்தியப் பிரச்சினையென மக்கள் எதிர்கொண்ட அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முயற்சியில் மிகவும் அர்ப்பணத்துடன் செயற்பட்டார்கள். மக்களும் அவர்களுக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கினார்கள். அத்துடன் சிறீலங்கா அரசின் விமானத் தாக்குதலாலும் எறிகணை வீச்சினாலும் காயப்படும் மக்களுக்குத் தேவையான முதலுதவிச் சிகிச்சைகளை வழங்கி அவர்களை இயங்கிக் கொண்டிருக்கும் வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லும் பணிகளையும் போராளிகள் மிகுந்த அர்ப்பணத்துடன் செய்து வந்தார்கள்.

பரந்த பிரதேசங்களிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து மிகக் குறுகிய பிரதேசங்களில் மிக நெருக்கமாக மக்கள் வாழ்ந்த போதும் தொற்று நோய்களோ, பட்டினியாலோ, மக்கள் இறந்து போகவில்லை யென்பது மிகவும் குறிப்பிடத்தக்க விடயமாகும். பங்களாதேஷ் மீது பாகிஸ்தான் தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தை திணித்த போது இடம் பெயர்ந்து அகதிகளாய் முகாம்களில் வாழ்ந்த பங்களாதேஷ் மக்கள் 1 மாதத்திற்குள் “கொலரா” என்னும் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு பலர் இறந்து போனதை நாம் அறிவோம். இத்தனைக்கும் இடம் பெயர்ந்த பங்களாதேஷ் மக்களுக்கு உலகத்தின் 4வது வல்லரசான இந்தியா உதவியது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அப்பிடியிருந்தும் பங்களாதேஷ் அகதிகள் “கொலரா” நோயால் பாதிக்கப்பட்டு பலர் இறந்து போனார்கள். ஆனால் முழு உலகத்தாலும் கைவிடப்பட்ட வன்னித் தமிழ் மக்கள் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு மேல் ஓர் குறுகிய பிரதேசத்தில் மிகவும் நெருக்கமாகத் தமது இடம் பெயர்ந்த வாழ்வை மேற்கொண்ட போதும் ஒருவர் கூட தொற்று நோய்க்கு உள்ளாகி இறந்து போகவில்லை என்பது விடுதலைப்புலிகளின் நிர்வாகத் திறனுக்கோர் எடுத்து காட்டென்றே நான் நினைக்கின்றேன்.

விடுதலப்புலிகள் இப்போது பல்வேறுப்பட்ட நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தார்கள். இடம் பெயர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுதல் காயப்படும் பொதுமக்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லல், யுத்தத்தால் அடிக்கடி இடம் மாறிக்கொண்டிருக்கும் வைத்தியசாலைகளுக்கு தேவையான சகல

**- அப்பு -**

உதவிகளையும் வழங்குதலுடன் மருத்துவத்திற்கான தேவைகளை பூர்த்தி செய்வது வைத்தியர்கள், தாதியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள வீதிப் போக்குவரத்தை ஒழுங்கு செய்வது என ஓர் தேசிய அரசுக்குரிய கடமைகள் அத்தனையும் புலிகளே செய்தார்கள். அத்தோடு இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராகவும் போராடினார்கள்.

பழைய முறுகண்டி தொடக்கம் முட்கொம்பன் வரை ஓர் அரைவட்ட வடிவில் இராணுவம் நின்று கொண்டு கிளிநொச்சியைக் கைப்பற்றக் கடும் முயற்சி மேற்கொண்டது. இந்த இராணுவ நகர்வைத் தடுத்து நிறுத்துவதில் புலிகள் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தார்கள். குறிப்பாக வழங்களுக்குரிய பாதை விடுதலைப் புலிகளுக்குப் பெரும் சிக்கல்கள் நிறைந்ததாகவே இருந்தது. தற்போது முல்லைத்தீவு பரந்தன் வீதி மட்டுமே புலிகளுக்குரிய வழங்கல் பாதையாக இருந்தது. ஆனால் இடப்பெயர்வு காரணமாக ஏற்பட்ட சன நெருக்கடியால் இப்பாதையூடாகப் போக்குவரத்து செய்வது மிகவும் கடினமான காரியமாக மாறியது. இப்பாதையால் ஒரு கிலோ மீற்றரைக் கடப்பதற்கே இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் தேவையாக இருந்தது. இதனால் புலிகளின் வழங்கல் செயற்பாடுகள் பெரும் தடைகளுக்கு உள்ளானது. இரவு நேரங்களில் சன நடமாட்டம் ஓய்ந்த பின்னரே இப்பாதையைப் புலிகள் சுதந்திரமாகப் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு பல்வேறுப்பட்ட நெருக்கடிகளுக்கு புலிகள் முகம் கொடுத்த போதும் மிகுந்த நம்பிக்கையுடனும் வீரத்துடனும் புலிகள் தமது முறியடிப்புச் சமரை மேற்கொண்டனர். பூநகரிப் பகுதியிலும் பழைய முறிகண்டிப் பகுதியிலும் யுத்தம் மிகவும் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. விமானக் குண்டு வீச்சுக்களாலும், எறிகணைத் தாக்குதல்களாலும் பரந்தன் பகுதியும், கிளிநொச்சிப் பகுதியும் இரவு பகலாக அதிர்ந்து கொண்டிருந்தது. பரந்தன் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து ஏற்கெனவே மக்கள் இடம் பெயர்ந்திருந்தமையால் மனித உயிர் இழப்புக்கள் குறைவாக இருந்த போதிலும் கட்டிடங்களும் கால்நடைகளும் பெரும் அழிவுக்கு உள்ளாகிக் கொண்டிருந்தன. பரந்தன் பகுதியில் நள்ளிரவு வேளை நடந்த விமானக் குண்டு வீச்சால் 90க்கும் மேற்பட்ட கால்நடைகள் ஒரு நொடிக்குள் அழிந்து போயின. தமிழ் மக்களது சொத்துக்களும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?

# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY

## வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை

# GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினூடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

**ARE YOU CONCERNED** ABOUT YOUR DEBTS ?
ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

## இத்துறையில் பல வருட அனுபவமிக்க ARU KRISH ஐ

## இன்றே அழையுங்கள்

**இலவச ஆலோசனைகளுக்கு**

# (416) 556-9287

**Credit Revolving Center**
**(GTA Square )**

PEACE OF MIND
CREDIT REVOLVING CENTRE

5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# வீட்டுப் பிரதிநிதி தப்பவும் முடியாது! வீட்டுப் பிரதிநிதியிடமிருந்து தப்பிக்கவும் முடியாது!

## நீதிமன்ற தீர்ப்புகளின் அனுபவங்கள்

வீடு பேரம் பேசி வாங்கிக் கொடுக்கும் தொழிலை மட்டும் செய்துவிட்டு முகவர் ஒருவர் தப்பிக்கவும் முடியாது. ஏனெனில் அந்த நடவடிக்கையில் அவருடன் சேர்ந்து செயல்படும் இன்னொருவர் செய்யும் தவறின் ஒரு பகுதி அவரது தலையிலும் வந்து விழுந்து விடும். இதேபோல வீடுகள் பார்ப்பதற்கு மட்டும் முகவரை பயன்படுத்தி விட்டு பின்னர் அவரை விட்டுவிட்டு இன்னொரு முகவரை தமது தேவைக்கேற்ப உபயோகப்படுத்தி வீடு வாங்குபவரும் இலகுவாக தப்பிக்க முடியாது என்பதற்கு அண்மையில் ஒன்ராரியோ நீதிமன்றத்தில் நடந்த இரு வெவ்வேறு வழக்குகளின் தீர்ப்பு ஒரு நல்ல படிப்பினையாகும்.

**முகவர் தப்ப முடியாது!**

***Fox Radwell Vs Gary Lorenso***

என்னும் வழக்கின் தீர்ப்பு, சுமார் பதின்மூன்று நாட்கள் தொடர்ந்த விசாரணையின் பின் ஒன்ராரியோ நீதிமன்றத்தினால் வழங்கியிருந்தது.

இந்த தீர்ப்பினை அடிப்படையாக வைத்து கடந்த யூன் 11, 2011 இல் வெளிவந்த ‘ரொறொன்ரோ ஸ்ரார்’ பத்திரிகையில், றியல் எஸ்ரேட் பிரச்சினைகளில் நீதிமன்றத்தில் ஆஜராகும் ரொறொன்ரோவின் பிரபல்யமான வழக்கறிஞர் திரு. போப் ஆரொன் (Mr. Bob Aaron) அவர்கள் தொடர்ந்து எழுதி வரும் தமது சட்ட ஆய்வு கட்டுரை ஒன்றில் ‘றியல் எஸ்ரேட் முகவரின் பொறுப்பு வழிகாட்டலுடன் முடிவடைவதில்லை’ (Agent’s Responsibility Doesn’t end with advice) என்னும் தலைப்பில் வெளியிட்டிருந்த விடயம் ஆதனம் வாங்க விற்க முகவர்களை உபயோகப்படுத்தும் சகலரும் அறிந்து கொள்ள வேண்டிய விடயம் என்பதுடன் முகவர்களும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு எச்சரிக்கையாகும்.

**அந்த வழக்கின் சுருக்கமான விபரம் இதுவேயாகும்.**

2006 ஆம் ஆண்டு அந்த தம்பதிகள் தங்களின் நீண்ட நாள் நண்பரான ஒரு முகவரின் உதவியுடன் ரொறொன்ரோவில் பல வருட காலத்திற்குட்பட்ட ஒரு வீட்டினை வாங்கியிருந்தனர். அவரின் முகவர் ரொறொன்ரோவிலுள்ள றியல் எஸ்ரேற் கொம்பனி தொழில்புரிகின்றார்.



## கனடிய தகவல் தொடர் 172

அவரது நண்பரான றியல் எஸ்ரேட் முகவர் வீடு பரிசோதனைக்காக (Home Inspection) பரிசோதகர் ஒருவரை ஒழுங்கு செய்து கொடுத்திருந்தார். அவரும் தமது வீட்டுப் பரிசோனை அறிக்கைகளை சமர்ப்பித்து விற்பனையும் முடிந்து உரிமமும் கைமாறி விட்டது. தங்கள் கனவு இல்லத்தில் குடியிருக்க ஆரம்பித்த பின்பே பல விடயங்கள் அவர்களுக்கு தலைகீழாக தெரிந்தது.

நில அறை சுவர்களில் இருந்த வெடிப்புகள், அதனூடாக கசிந்து படிந்த நீர் ஒழுகலினூடாக ஏற்பட்டிருந்த பூஞ்ஷணங்கள், உடைவுகள், இப்படியான பல விடயங்கள் பரிசோதகரால் கண்டு பிடிக்கப்படவுமில்லை. அவரது அறிக்கைகளில் இவை பற்றி குடிப்பிடப்படவுமில்லை. றியல் எஸ்ரேட் முகவரும் நாசூக்காக நழுவிவிட்டார். சகல அனுமதி (Licence) பெற்ற தொழில்துறை சார்ந்த முகவர், முகவரின் கம்பனி, வீட்டுப் பரிசோதகர் ஆகியோரை நம்பி வீடு வாங்கியவர் ஏமாற்றபட்டதுதான் மிச்சம்! அவர்களும் அமைதியாய் இருந்து விடவில்லை.

1. வீட்டினை விற்பனை செய்தவர்
2. றியல் எஸ்ரேட் முகவர்
3. றியல் எஸ்ரேட் முகவர் பணி புரியும் கம்பனி
4. வீட்டுப் பரிசோதகர்

ஆகிய நால்வருக்கும் எதிராக தமது பாதிப்புக்கு அவர்கள் பாரிய பொறுப்பு என குறிப்பிட்டு நட்டஈடு கோரி வழக்கு தொடர்ந்திருந்தனர்.

• கட்டிட பொறியியல் துறை சாட்சிய குறிப்புகள்!(Evidence of Civil Engineering)

• வீடுகள், கட்டிடங்கள் பொறியியல் துறையின் இராசயன பகுப்பாய்வு சான்றுகள் (Forensic Engineering)

• குடியிருப்பு வீடுகளின் விஞ்ஞான பகுப்பாய்வு அறிக்கைகள் (Residential Building science Analysis)

• பிடிக்கப்பட்ட படங்கள் (Photos)

இப்படியான ஏராளமான ஆதாரங்கள், சாட்சிய அறிக்கைகள் வழக்கு தொடுநர் பிரிவினரால் சமர்ப்பிக்கப்பட்டு தொழில் துறையில் பரிசோதகரின் அசட்டையீனம் நிரூபிக்கப்பட்டு அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. இறுதியில் தீர்ப்பு எப்படி வழங்கப்பட்டது என்பது தெரியுமா?

வாங்கியவருக்கு ஏற்பட்ட இப்பாதிப்பில் வீட்டுப்பரிசோதனை செய்த கம்பனி 50% பொறுப்பு! வீடு வாங்கிக் கொடுத்த முகவர் அறிக்கைகள், நிலைமைகளை பரிசீலனை செய்து தமது வாடிக்கையாளர் பாதிப்புக்கு உள்ளாகாமல் பாதுகாக்க தவறியதற்காக 25% பொறுப்பு, மிகுதி 25% வீதத்தினை வாங்கியவர் சகித்துக்கொண்டு ஏற்று கொள்ள வேண்டும் என்ற தீர்ப்பு வழங்கப் பட்டதுடன் விற்பனை செய்தவருக்கு எதிராக எதுவித தீர்ப்பும் வழங்கப்படவில்லை. இத்தகைய ஒரு வித்தியாசமான பிரச்சினையில் தீர்ப்பு வழங்கப்பட்ட இவ்வழக்கு கனடாவின் றியல் எஸ்ரேட் வட்டங்களில் பிரபல்யமாயிருந்தது.

**அலைந்து திரிந்து வீடுகள் காட்டும் முகவருக்கு துரோகம் செய்தால்?**



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 12ஆம் பக்கம்


Sitham Sam Shanmugam (Sales Rep)
HomeLife/GTA Realty Inc.
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected

Daisy Mart
Brand New
convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

New Market
7 M/Litre New gas statiuon for sale
Ultramar 3 Acre land

For Sale
Markham & Ellesmere
3 Bedrooms Condo. for sale

0 - 5 years Newer homes in Stouffville

Renovate and Sell
Old detached bungalow near University of Toronto

# நற்பொருள் நாற்பது

கடவுள் வாழ்த்து

எல்லை கடந்துவளர் எல்லா அறிவினிலும்
வல்ல விநாயகரை வாழ்த்திடுவேன் - அல்லலற
நற்பொருளை வெண்பாக்கள் நாற்பதினால் யானுரைக்க
அற்புதமாய்ச் செய்வார் அருள்.

அவையடக்கம்

அறிவுரைகள் முன்னர் அதிமிகவே ஆன்றோர்
அறவழியிற் சொல்லி அமைந்தார் - இறையருளால்
பேழ்பொருள்கள் மேலும் பிறழ்வின்றிப் பேருலகம்
வாழ்வுறவே வைப்பேன் மகிழ்ந்து.
(பேழ் - பெருமை.)

நூல்

அன்பு குடும்பத்தை மட்டுமே ஆள்வதில்லை
அன்பால் உயிர்கள் அனைத்துக்கும் - இன்பஞ்செய்
வாழ்வை அளிப்பவரே அன்பை வளர்ப்பவராம்
தாழ்வுறுவர் மற்றையவர் தாம். (1)

நீள்நிலத்தில் எப்பொருளும் நின்று நிலைப்பதில்லை
ஏழ்பிறப்பும் எல்லோர்க்கும் ஏற்றதுணை - தாழ்வில்லாக்
கல்வியொன்றே ஆகையினால் காலமெல்லாம் கற்றிடுவீர்
பல்வகையாம் கல்விப் பயன். (2)

மோடு படுமொக்கு மூளை சிறிதுமில்லா
மாடு மடயரென மாணவரைச் - சாடும்
குருமார் குருமாரோ கோயிற் சிலைகள்
அருமை அறியா தவர். (3)

கற்றார் கருத்தூன்றிக் கல்லாக் கடையரையும்
முற்றாகத் தள்ள முனையாராம் - கற்றா
மறவாது கன்றை மறந்தாலும் கன்று
குறையாது தாய்மைக் குணம். (4)

வற்றா வளங்குன்றி னாலும் வழங்கியகை
முற்றாகச் சோர்ந்து முடங்காது - இற்றே
பனைவீழ்ந்து பட்டும் பயன்செய்யும் பண்பு
தனையாய்ந்து பார்க்கத் தகும். (5)

நடையென்ப நல்லார் ஒழுக்கநடை மற்றும்
கடையர் அதுபேணாக் கல்லார் - குடையோ
குருவுக்கு நீழல் கொடுத்தல் விடிவு
இருள்நீங்கி வாழ்வில் எழல். (6)

விடிவில்லை என்றால் மிகுதொல்லைக் கின்னும்
முடிவில்லை யென்றெண்ணி மூச்சாய் - படியேறி
முன்னேறின் வெற்றி முயலாது சோர்வாருக்(கு)
எந்நாளும் சூழும் இடர். (7)

சொன்னாலும் கேளார் சுயமாயும் சிந்திக்கார்
மன்னாதி மன்னர் மனம்போல - எந்நாளும்
செல்வத்தை வீசிச் செலவழிப்பார் சின்னாளில்
புல்லொத்து வீழ்வார் புறம். (8)

வித்தைகளைக் கற்றென்ன வீரங்கள் பேசியென்ன
சொத்துகளாற் பெற்ற சுகமென்ன - பத்தியுடன்
பெற்றவரைப் பேணும் பெருந்தன்மை யற்றவரை
உற்றவருங் காணார் உணர். (9)

பண்பில்லார் கற்றும் பயனில்லார் ஒன்றுமில்லா
மண்பானை போன்ற வறியார்கள் - பண்படுத்தி
நட்டு வளர்த்தாலும் நன்றாகா நாற்றுப்போல்
ஓட்டக் கெடுவாரும் உண்டு. (10)

கற்றவர்க்குச் சொல்லொன்று கல்லா தவருக்குப்
பற்றுடனே பத்துப் பரிந்துரைகள் - மற்றும்நல்
மாணவர்க்குப் பார்வை மனைவிக் கதுவுமில்லை
ஆணவர்க்கும் அன்பா யுதம். (11)

தொடரும்...

கவிஞர் வி. கந்தவனம்





# வன்னி யுத்தம்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

அவர்களது எதிர்கால வாழ்வும் அவர்களது கண் முன்னாலேயே எரிந்து சாம்பலாகிக் கொண்டு இருந்தன.

இப்போது முரசு மொட்டைப் பகுதி மக்களும் வேகமாக இடம் பெயர்ந்து கொண்டிருந்தார் கள். நானும் எனது துணைவியும் என்னுடன் ஒரு ஐயாவும் முரசு மொட்டைப் பகுதியில் இருந்த சிறுவர் பாடசாலைக் கட்டிடத்தில் தங்கி இருந்தோம். அச்சிறுவர் பாடசாலையை சுற்றி இருந்த அனைத்து மக்களும் அவ்விடத்தை விட்டு வெளியேறி இருந்தார் கள். எம்முடன் இரண்டே இரண்டு குடும்பங்கள் மட்டுமே அங்கிருந்தார்கள். ஒருநாள் இரவு ஒரு மணியிருக்கும் நாம் அனைவரும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தோம். திடீரென 2 கிபீர் விமானங்கள் பயங்கரமான சத்தத்துடன் எமது வதி விடத்தை வட்டமிட ஆரம்பித்தன.

எந்த ஒரு மனிதனுக்கும் அவனது உயிர் வாழ்தலுக்கான இறுதிக் கட்டம் நெருங்கும் போதுதான் கடவுள் பற்றிய நினைப்பு வருவது வழமை. அதேபோல இங்கேயும் உயிர் வாழ்தலுக்கான இறுதிக் கட்டம் தமக்கு நெருங்கி விட்டதாக என்னைச் சுற்றி இருந்தவர்கள் கருதியமையால் கடவுளே! கடவுளே! என கடவுளைத் துணைக்கு அழைத்தவாறு குப்பிறப் படுத்துக் கிடந்தார்கள். நான் கிபிர் சுற்றும் திசையை ஊகிக்க முயன்று கொண்டிருந்தேன். ஒரு சில விநாடிகளில் கிபிர் போடும் சத்தம் தூரத்தே கேட்டது. குண்டை வீசாமல் போன கிபிர் திரும்பவும் வரலாம் என்ற சந்தேகம் எம் அனைவருக்கும் இருந்ததால் எல்லோரும் ஓடிச் சென்று பக்கத்தில் இருந்த விளையாட்டு மைதான வெளியில் கொஞ்ச நேரம் இருந்தோம். எமது மண்டபத்திற்குப் பக்கத்திலே பதுங்கு குழி இருந்தபோதும் இரவு நேரங்களில் பதுங்கு குழிக்குள் போகாமல் திறந்த வெளியில் இருந்தோம்.



வழமையாகவே கிபிர் விமானங்களின் சத்தம் மிகவும் பயங்கரமானதாகவே இருக்கும். நள்ளிரவு நேரமென்பதால் கிபிர் சத்தம் இரத்தத்தையே உறைய வைத்தது. எனது துணைவி அலறியடித்துக் கொண்டு என்னை எழுப்பினாள். நான் எழுந்து என் மனைவி யின் முகத்தை பார்த்த போது அச்சத்தால் அவளது முகம் பேயறைந்தது போல் இருந்தது. எம்முடன் அந்தக் கிராமத்தில் எஞ்சியிருந்த இரு குடும்பத்தினரும் அலறி யடித்துக் கொண்டு வெளியே ஓடினர். விமானங்களின் சத்தமோ நாமிருந்த பொது மண்டபத்தை நோக்கி வருவது போல் மிகவும் சத்தமாகப் பதிந்து வந்தது. எமது மண்டபத்தின் மீதுதான் தாக்கப் போகிறார் களென நாம் எண்ணியவாறு எதுவுமே செய்ய முடியாத நிலையில் ஓடிக்கொண்டு இருந்தவர்களை நிலத்திலே படுக்கும்படி நான் கத்தியவாறு எனது மனைவியை ஓடவிடாது பிடித்தபடி நிலத்தில் வீழ்ந்து கிடந்தோம்.

கொஞ்ச நேரம் திறந்த வெளியில் இருந்த நாம் இனிக் கிபிர் வராது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு மண்டபத்திற்குப் போக எழுந்த போது பலத்த சத்தத்துடன் பல குண்டுகள் வீழ்ந்து வெடிக்கும் சத்தம் எமது செவிப்பறைகளை அதிர வைத்தது. நாம் அதே இடத்தில் திரும்பவும் வீழ்ந்து படுத்துக் கொண்டோம். சில விநாடிகள் தொடர்ந்து வெடித்த குண்டுச் சத்தம் ஓய்ந்ததும் எமக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது.

வழமையாக கிபிர் கீழே பதிந்து எழுந்ததும் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்கும். இதுவே வழமையானது. ஆனால் இதுவரை வன்னியில் மேற்கொள்ளப்பட்ட கிபிர் தாக்குதல்களிலிருந்து நாம் பெற்ற அனுபவத்திற்கு மாறாக கிபிர் பதிந்து எழுந்து சென்ற சிறிது நேரத்தின் பின் குண்டு வெடிக்கும் சத்தத்தை இப்போது தான் நாம் முதல் முதல் கேட்டோம். சர்வதேசத்தில் தடை செய்யப்பட்ட குகாத்துக் குண்டுகளை அரசு பயன்படுத்துகின்றதா? என்ற கேள்வி என் மனதில் எழுந்த போதும் அதுபற்றி அந்த நேரத்தில் நான் எதுவுமே பேசவில்லை. கிபிர் இனி வராது என்பதை எமது மனதளவில் உறுதிப்படுத்திக் கொண்டு நாம் எமது படுக்கைகளுக்குச் சென்றோம். எமது படுக்கையில் நாம் சரிந்த போதும் எம்மால் நித்திரை கொள்ள முடியவில்லை. திரும்பவும் கிபிர் வரலாம் என்ற பயமும் எமது உறவினர்களுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்ற அச்சமும் எமது எமது உள்ளத்தை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. அன்றைய இரவும் தூக்கமின்றியே எமக்குக் கழிந்தது. தூங்காமல் இரவு முழுவதும் விழித்துக் கொண்டிருப்பது எமக்கொன்றும் புதிய விடயமாக இருக்கவில்லை. யுத்தம் தொடங்கி தீவிரமடைந்த நாள் முதல் வன்னி மக்களின் வாழ்வு தூக்கமில்லாத வாழ்வாகவே போய்க் கொண்டிருந்தது.

பகலை விட இரவு நேரங்களே வன்னி மக்களுக்கு பெரும் அச்சத்தை ஊட்டுவதாக இருந்தது. பகல் நேரங்களில் கிபிர் வந்தால் அதன் சுற்று வட்டத்தை அவதானித்து கிபிர் எங்கே குண்டு போடப் போகின்றது என்பதை ஓரளவு மக்களால் ஊகிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் ஷெல் அடிக்கும் சத்தம் கேட்டதும் அது வீழ்ந்து வெடிப்பதற்குள் பதுங்கு குழிக்குள் சென்று தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடியதாய் இருந்தது. ஆனால் இரவு நேரங்களில் கிபிரின் சுற்று வட்டத்தை மக்களால் அறிய முடியாது இருந்ததுடன் நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல் பதுங்கு குழிக்குள் இரவு நேரங்களில் போவது விஷப் பாம்புகள் நிறைந்த வன்னிச் சூழலில் பாதுகாப்பனதாக இருக்கவில்லை. எனவே வன்னி மக்கள் பெரும்பாலும் இரவுப் பொழுதை தூக்கமின்றியே கழித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு பெரும் பீதியை எமக்குத் தந்த அந்தப் பயங்கரமான இரவு நித்திரை இன்றியே எமக்கு விடிந்தது மட்டுமன்றி எமக்கு பெரும் துயரமான செய்தியுடனேயே அந்த இரவு விடிந்தது.

# வீட்டுப் பிரதிநிதி...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

சில சந்தர்ப்பங்களில் வீடு வாங்க விரும்பும் வாடிக்கையாளர் ஒருவருக்கு பணி செய்த ஆரம்பிக்கும் றியல் எஸ்ரேட் முகவர் ஒருவர் உடன்படிக்கை ஒன்றினை முதலில் வீடு வாங்குவதற்கு தம்மை உபயோகப்படுத்துப வரிடமிருந்து கைச்சாத்திட்டு வாங்கிக் கொள்வார். தெரிந்தோ? தெரியாமலோ அதில் பலரும் கைச்சாத்திட்டிருப்பார்கள். அதனை ஆங்கிலத்தில் Buyer Agency Agreement என குறிப்பிடப்படுவதுண்டு. அதாவது 'வீடு வாங்குபவருக்கும் முகவரின் கொம்பனிக்கும் இடையே உள்ள உடன்படிக்கை' என தமிழில் குறிப்பிடலாம்.

இந்த உடன்படிக்கையின்படி 'குறிப்பிடப்பட்ட காலத்தினுள் இந்த முகவரை மாற்றி இன்னொரு முகவர் மூலம் வீடு வாங்கினால் அது தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டு வாங்கிய வீட்டு விலையின் குறிப்பிடப்பட்ட ஒரு வீதத்தினை நட்டஈடாக ஏற்கெனவே கைச்சாத்திட்ட முகவருக்கு வழங்கவேண்டும்' என்ற உறுதி மொழியாகும்.

ABC Realty Inc. VS Marie Smith என்னும் வழக்கின் தீர்ப்பினை அடிப்படையாக வைத்து இதே கட்டுரை ஆசிரியர் கடந்த ஏப்ரல் 19, 2008 இல் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் ஒரு செய்தியினை வரைந்திருந்தார்.

### நடந்த சம்பவம் இதுதான்!

Marie Smith என்ற பெண் 2005 ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தின் போது றியல் எஸ்ரேட் கம்பனி ஒன்றுடன் அடுத்த யூன் 30, 2006 க்கு இடையில் இவர்களின் கம்பனியின் குறப்பிட்ட ஒரு முகவர் மூலமே வீடு வாங்குவேன் என உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். இதே மாதிரியான உடன்படிக்கையினை மீறி இன்னொரு முகவர் மூலம் வீடு வாங்கினால் வாங்கிய வீட்டின் பெறுமதியில் 2½% தண்டனை பணமாக செலுத்துவேன் என ஒப்பந்தமிட்டிருந்தார். தொடர்ந்து வீடுகள் காட்டப்பட்டது. ஒரு இடத்தில் வாங்கும் நிலைமைக்கு வந்தும் அது பிழைத்து விட்டது.

இறுதியில் இந்த முகவருக்கும், அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட வாடிக்கையாளருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு அவர்களின் உறவும் முறிந்து விட்டது. அந்த பெண் இறுதியில் இன்னொரு முகவர் மூலம் குறிப்பிட்ட இக்காலத்தினுள் வீடு வாங்கி முடித்து



விட்டார். ஏற்கெனவே கைச்சாத்திட்ட உடன்படிக்கையினை ஆதாரமாக கொண்டு முன்னைய றியல் எஸ்ரேட் கம்பனியினர் இப்பெண்ணுக்கு எதிராக வழங்கு தொடர்ந்தனர். இதன் தீர்ப்பு கடந்த மார்ச், 2008 இல் வெளியிடப்பட்டது.

இறுதியில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு விட்டு முகவரினை மாற்றி வீடு வாங்கிய குற்றத்திற்காக வாங்கிய வீட்டின் பெறுமதியில் 2.5% வீதம் என்ற கணிப்பில் குறிப்பிட்ட தொகை $21,774.50 அதனுடன் சேர்ந்த வட்டியும் ஒப்பந்தத்தினை மீறிய தண்டனை பணமாக செலுத்தியேயாக வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

இறுதியாக வீடு வாங்குபவர்கள் இவ் ஒப்பந்தத்தின் ஆபத்துக்களையும், பொறுப்புகளையும் புரிந்துகொண்டு கைச்சாத்திடுங்கள். அத்துடன் ஒரு ஒப்பந்தத்தை முறையாக வாசித்து ஒப்பமிட்டபின் அதற்குரிய வலிமையையும் மறந்து விடாதீர்கள் என கட்டுரையாளர் அறிவுறுத்துகின்றார்.

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# நாணயம் - ஒரு குடும்பத் தகவல்

## ஓடும் நீர் உறைவதில்லை 143

மனிதனின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் எண்ணில் அடங்காதவை. இந்த நிகழ்வுகள் எமது உள்மனதில் அதாவது நனவிலி உள்ளத்தில் பதியப்பட்டிருப்பினும் ஒரு சில நிகழ்வுகள் எப்பொழுதும் நிகழ்கால நிகழ்வுகள் போல் தொடருகின்றன. இவ்வாறு தொடரும் நிகழ்வுகளில் அதி பெரும்பாலா னவை உறவு சார்ந்ததாகவும் நட்பு சார்ந்ததாகவும் அமைகின்றன. உறவு என்பது குடும்பம் சார்ந்ததாகவும் நட்பு என்பது குடும்ப உறவுகளுக்கு அப்பாற்பட்டது என்றும் நாம் சாதாரணமாகக் கருதுவதுண்டு. இதனால் தான் நாம் தொடர்பு கொள்பவர்களை உறவினர்கள் என்றும் நண்பர்கள் என்றும் வகைப்படுத்திக் கொள்கிறோம். ஆனால் குடும்பம் ஒன்றின் உருவாக்கத்திற்கும் அதைத் தொடர்ந்து வரும் உறவுகளுக்கும் நட்புத் தான் அடிப்படையாக அமைகின்றது. சிறப்பாகக் கூறுவதாயின் குடும்பம் ஒன்றின் ஆரம்ப அங்கத்தவர்களாக அமைகின்ற கணவன் என்ற ஆணும் மனைவி எனும் பெண்ணும் நட்பின் இணைப்பாக குடும்பம் எனும் அமைப்பை உருவாக்குகிறார்கள். இந்த அமைப்பையும் அதன் ஆரம்ப அங்கத்தவர் களாகிய கணவனையும் மனைவியையும் நாணயம் ஒன்றின் இயல்பு மூலமாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலில் நாணயம் ஒன்றின் இயல்பைப் பார்ப்போம். ஒரு நாட்டின் அடையாளச் சின்னம். உலோகம் அதன் உட்பொருள். இரண்டு பக்கங்கள். ஒவ்வொரு பக்கமும் வெவ்வேறு உருவங்களைக் கொண்டது. அந்த உருவங்கள் தமக்கென தனியான தன்மையையும் தகவல்களையும் வெளிப்படுத்துகின்றன. அளவில் இரண்டு பக்கங்களும் சமமானவை. இவை அனைத்தும் சேர்ந்ததே அதன் பெறுமதி. இப்போது இந்த விடயங்களை குடும்பத்துடன் இணைத்து முக்கியமான விடயங்களை அறிந்து கொள்வோம்.

நாணயமானது ஒரு நாட்டின் அடையாளச் சின்னமாக இருப்பது போல், அதாவது நாடு எனும் அமைப்பு (அரசு) ஒன்றின் அடையாளச் சின்னமாக இருப்பது போல் குடும்பம் என்பது கூட அது சார்ந்த சமூக அமைப்பின் அடையாளச் சின்னமாக அமைகின்றது. நாணயத்தின் அடையாளச் சின்னம் என்பது தனது சுய தன்மை இழக்கப்படாமல் தான் சார்ந்துள்ள நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அதி விசேட தன்மையாகும். குடும்பம் என்பதும் தனது சுய தன்மையை இழக்காமல் தான் சார்ந்துள்ள சமூகத்தைப் பிரதிபலிப்பதே. இங்கே நாம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் ஒரு நாணயம் எங்கு சென்றாலும், இன்னொரு தேசத்திற்குச் சென்றாலும் அது அதன் பிரதி நிதித்துவத்தை ஒரு போதும் இழப்பதில்லை. அவ்வாறே ஒரு குடும்பமும் அதன் பிரதி நிதித்துவத்தை இழக்கக்கூடாது.



ஒரு நாணயத்தின் உட்பொருள் உலோகம். இந்த உலோகமானது நாணயத்தின் உறுதித் தன்மையை வெளிப்படுத்துவது. எந்தவித அழுத்தங்கள் அதன்மீது செலுத்தப்பட்டாலும் அதன் உறுதித் தன்மையிலிருந்து விலகுவதில்லை. இன்னொரு வகையில் கூறுவதாயின் வெளிப்புற அழுத்தங்களுக்கு அடிபணியாது தன் உறுதித் தன்மையைப் பேணிக்கொள்ளும். பலருடைய கைகளூடாக நகர்த்தப்பட்டாலும் அதன் உறுதித்தன்மை இழக்கப்படுவதில்லை. நாணயத்தின் உட்பொருள் உலோகம் போல் குடும்பத்தின் உட்பொருள் நட்பு. கணவன் மனைவி இருவருக்கும் இடையிலான நட்பு. இந்த நட்பானது ஒரு குடும்பத்தின் உறுதித் தன்மையை வெளிப்படுத்துவது. எந்த விதமான இடர்களோ, அழுத்தங்களோ, எதிர்மறையான விளைவுகளோ உறுதியான நட்பை ஒன்றும் செய்து விட முடியாது. இவை அனைத்தும் உறுதியான நட்பின் முன் மண்டியிட்டுவிடும். எனவே நட்பின் உறுதி குடும்பத்தின் உறுதியாகும்.

அடுத்து நாணயம் இரண்டு பக்கங்களைக் கொண்டது என்பதாகும். இந்த இரண்டு பக்கங்களின் சிறப்பைப் பார்ப்போம். இரண்டு பக்கங்கள் என்பது இரண்டும் தனித் தனியான தன்மைகளைக் கொண்ட, ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட ஆனால் ஒன்றிலிருந்து மற்றயதைப் பிரிக்க முடியாததாக அமைந்திருப்பதாகும்.

உதாரணமாக ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் பூவாகவும் மறு பக்கம் தலையாகவும் இருக்கும். இங்கே "பூ" தனக்கான தனித்தன்மையையும் "தலை" அதற்கான தனித் தன்மையையும் கொண்டிருக்கும். இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரண் பட்டவை. ஆனாலும் ஒன்றிலிருந்து மற்றயதைப் பிரிக்க முடியாது. இதேபோன்றே குடும்பம் என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்கள் கணவன் (ஆண்) - மனைவி (பெண்). இருவரும் தனித்துவமானவர்கள். உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் முரண்பட்ட தன்மைகளை உடையவர்கள். ஆனாலும் ஒருவரிலிருந்து மற்றவர் பிரிக்கப்பட முடியாதவர். அதாவது நட்பு என்ற உலோகம் உறுதியானதாக இருந்தால் இந்த இரண்டு பக்கங்களும் பிரிக்கப்பட முடியாதவை. அதுமட்டுமல்ல, மிகவும் முக்கியமான இன்னுமொரு இரகசியமும் இங்கே புதைந்து கிடக்கின்றது. அதாவது ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களையும் ஒரே நேரத்தில் நாம் பார்க்க முடியாது. கையில் வைத்து மட்டுமல்ல, கண்ணாடியில் கூட பார்க்க முடியாது. இதன் பொருள் எந்தப் பக்கத்தைப் பார்க்கிறோமோ அந்தப் பக்கமாகிவிடு என்பது தான். அதாவது குடும்பம் என்ற நாணயத்தில் ஒருவர் மறு பக்கத்தைப் பார்க்கும் போது தனது பக்கம் முற்றாக மறைந்து விடுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உறுதியான நட்பின் அடிப்படையே தன்னை மறைத்து, மறந்து மற்றவரை முழுமையாகப் புரிந்துகொள்வது தான்.

இப்போது நாணயத்தின் பெறுமதியை நிலை நாட்டுவதற்கு இந்த இரண்டு பக்கங்களின் பங்களிப்பைப் பற்றிப் பார்ப்போம். தனித்துவம், முரண்பாடு, வெவ்வேறு பக்கங்கள் எனப் பல்வேறு இயல்புகள் இந்த இரண்டு பக்கங்களில் இருந்தாலும் நாணயத்தின் பிரதிநிதித்தவம், அதன் பெறுமதி என்பவற்றை இரண்டு பக்கங்களுமே ஒன்று சேர்ந்து நகர்த்திக்கொண்டிருக்கின்றன. எப்பொழுது நாணயத்தின் ஒரு பக்கம் தனது தனித்தன்மையை இழக்கிறதோ அல்லது மறு பக்கத்தை இழக்க அனுமதிக்கிறதோ அப்போது அதன் பெறுமதி இழக்கப்பட்டு "செல்லாக் காசாக" புறக்கணிக்கப்படுகிறது.

**KG Master-kgmaster@rogers.com**
**www.kgmaster.com**

இதேபோன்றுதான் குடும்பம் என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்களான கணவனும் மனைவியும் அந்தக் குடும்பத்தின் பெறுமதியை நிலையாக உறுதிப்படுத்து வதற்கு தமது தனித்தன்மையையும் இழக்காமல் அதே நேரத்தில் மற்றவரது தனித் தன்மைக்கும் இழப்பு ஏற்படுத்தாமல் வாழ்க்கையை நகர்த்த வேண்டும். ஏனெனில் ஒரு நாணயத்தின் எந்தப் பக்கம் பெறுமதி இழந்தாலும் அது அந்த நாணயத்தின் ஒட்டு மொத்தமான பெறுமதி இழப்பாகிவிடுகின்றது. எனவே குடும்பம் ஒன்றில் கணவன் மனைவி இருவரில் எவர் தனது பெறுமதியை இழந்தாலும் அல்லது ஒருவர் மற்றவரது பெறுமதியை இழக்கச் செய்தாலும் அது குடும்பத்தின் ஒட்டுமொத்தமான பெறுமதி இழப்பாகவே அமைந்துவிடுகின்றது.

நாணயம் - நினைவில் இருக்க வேண்டிய ஒரு குடும்பத் தகவல்.

*- நன்றியுடன் கே.ஜி. மாஸ்டர்*

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹாராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 11:00 am |
| | Rogers Cable Channel - 20 |
| (416) 431-5000<br>1 877 707 3221 | Bell Express vu<br>Channel - 219 |

# வழித்துணை

முள்ளிவாய்க்கால் படுகொலைகளுடன் யுத்தம் முடிவுற்று இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. விடுதலைப் புலிகளை முற்றாக அழித்தொழித்துவிட்ட பெருமையுடன் இலங்கை அரசு ஆண்டுதோறும் அந்த வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. யுத்தத்தின் இறுதி நாட்களில் சர்வதேச சட்டங்களுக்கும் மனித விழுமியங்களுக்கும் முரணான விதத்தில் போர்க் குற்றம் புரிந்ததாக தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை தொடர்ச்சியாக மறுத்து வரும் அரசு தன்னை நியாயப்படுத்த பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது.

புலிகளின் தோல்வி பற்றிய விவாதங்களும் தோல்வி களுக்கான காரணங்கள் பற்றிய மதிப்பீடுகளும் பரவலாக நடந்து கொண்டிருக்கின்றன. வெளிச்சக்திகளின் துரோகம் வஞ்சகம் சதி போன்ற காரணங்களாலேயே புலிகள் தோற்றடிக்கப்பட்டார்கள் என்று விவாதிப்பவர்கள் ஒருபுறமும், புலிகளின் கொலைவெறி எதேச்சாதிகாரத்தன்மை யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத பிடிவாதம் என்பவையே அவர்களது தோல்வியைத் தவிர்க்க முடியாததாக்கியது என்பவர்கள் மறுபுறமுமாக இந்த விவாதங்கள் தொடர்கின்றன.

கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளாக நமது மக்களின் வாழ்வின் ஒவ்வொரு சின்னச் சின்ன நடவடிக்கைகளிலும் கூட தவிர்க்க முடியாத ஒரு அம்சமாக பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்த இந்தப் போராட்டம் எத்தகைய ஒரு சமூக உள வியலை உருவாக்கியிருந்தது என்பது, வெறுமனே புறங்கையால் விலக்கிவிடக்கூடிய ஒரு விடயமல்ல. போரும் வாழ்வுமாக நான்கு தசாப்தத்துள் நான்கு பரம்பரைகள் தமது வாழ்வை வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களது உணர்வும் சிந்தனையும் செயலும் இந்தக் காலத்தினால் நெறிப்படுத்தப் பட்டிருக்கின்றது. இந்த உண்மை, இந்த விவாதங்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு கோணங்களில் வெளிப்படுகின்றது. ஆயினும், இது பற்றிய புறநிலையான புரிதலுடன் கூடிய பார்வையை இவ்விவாதங்கள் கொண்டிருப்பதாகவோ அல்லது அத்தகைய பார்வையின் தேவையை உணரும் உள்ளொ-ளியைக் கொண்டிருப்பதாகவோ அடையாளம் காண முடியவில்லை.

ஈழப்போராட்டம் தொடங்குவதற்கும் சரி, அது ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கும் சரி காரணமாக இருந்த காரணிகள் புலிகளின் தோல்வியுடன் இல்லாமல் ஆகிவிடவில்லை. அந்தக் காரணிகள் ஒவ்வொன்றும் தமக்கேயுரிய வளர்ச்சி பெற்று காலத்திற்கேற்ற புதிய வடிவிலும் புதிய வேகத்துடனும் செயற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. யுத்தத்தின் முடிவு புலிகளின் முடிவு என்றோ அல்லது ஆயுதப் போராட்டத்தின் நிரந்தரமான முடிவு என்றோ எந்த முடிவுக்கும் யாரும் வந்துவிட முடியாதபடிக்கு அந்தக் காரணிகள் இன்னமும் இருக்கின்றன என்பதை யுத்தத்தின் பின்பான கடந்த இரண்டாண்டு காலங்களும் தெளிவுபடக் காட்டியுள்ளன. இந்த விவாதங்கள் அறுபது ஆண்டுகளுக்கு மேலான உரிமைப் போராட்டம் 30 ஆண்டுகளுக்கு மேலான ஆயுதப் போராட்டம் என்பவற்றோடு வாழ்ந்த எமது வாழ்வின் ஆன்மாவை அடையாளம் காண்பதாக அமைய வேண்டும். தோல்வியும் வெற்றியும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையின் உரைகற்களாக அமைகின்றன என்பதில்லை. வெற்றிக்கும் தோல்விக்குமான ஆயிரம் காரணங்களை யாராலும் பட்டியலிட்டுவிட முடியும். ஆனால், அவற்றால் உண்மையை நெருங்கிவிட முடியாமல் கூட இருக்கலாம். முன்கூட்டிய முடிவுகள் சார்பு நிலைகள், உணர்வுகள் மற்றும் தேவைகளின் அடிப்படையிலான விவாதங்கள் எவையும் உண்மையை நெருங்குவதற்கு உதவப்போவதில்லை. மனித வாழ்வை நேசிக்கும் ஒருவரால் தான் மனித வாழ்வின் எல்லாப் பலம், பலவீனங்களுடன் அதன் ஆன்மாவை நெருங்க முடியும். சிலவேளைகளில் அரசியல் அறிஞர்கள், அறிவியலாளர்கள், சட்ட நிபுணர்கள் தத்துவவாதிகளால் அடையாளம் காணமுடியாத விடயங்களை ஒரு சாதாரண மனிதரால் அடையாளம் கண்டுவிட முடியும். ஒரு கலைஞரால், ஒரு கவிஞரால் இவற்றை அடையாளம் கண்டுவிட முடியுமாக இருக்கலாம். இது வாழும் வாழ்வுடன் ஒருவர் கொண்டுள்ள இரத்தமும் சதையுமான உறவுடன் சம்பந்தப்படுகிற ஒன்றாகும். சாதாரண மனிதரின் மொழியில் அது வெளிப்படும் விதம் மிகவும் எளிமையானதாக இருக்கலாம். கலைஞனின் / கலைஞியின் கருத்துத் தானா இது என்று அப்போது எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

நஷமிக்கு அது முடிந்திருக்கிறது!

ஈழப் போராட்டத்தின் இன்றைய நிலை பற்றிய அவரது உணர்வு அல்லது கருத்து மிகவும் எளிமையான வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் அவரது சொந்த வார்த்தைகளில் அல்ல, ஆரம்பப் பள்ளியில் படித்த ஒரு கதையின் தலைப்பின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது அது. ஆம் இந்த நூலின் தலைப்புத் தான் அது.

'ஈ' தன் பெயரை மறந்து போனது.

'ஒரு ஈ தன் பெயரை மறந்து போனது' என்ற அந்தக் கதையின் தலைப்பில் உள்ள 'ஒரு' வை எடுத்துவிட்டு 'ஈ' யை மேற்கோள் குறிக்குள் இட்டது மட்டுமே அவர் செய்திருக்கும் மாற்றம். மேலோட்டமாகப் பார்க்கும் ஒருவருக்கு இந்தத் தலைப்பு அத்தனை முக்கியமான ஒன்றாகப் படாமல் போகலாம். ஆனால் ஆழ்ந்து சிந்திக்கையில் பெயரை மறந்து போதல் என்பது மிகவும் ஆழமான அர்த்தத்தைத் தருகின்ற ஒரு விடயம் என்பது தெரிய வரும்.

**- எஸ்.கே. விக்கினேஸ்வரன் -**

மொழியில் அது ஒரு குறியீடாக இருக்கலாம். கவிஞனின் அல்லது கவிஞையின் மொழியில் அது ஆக்கிரோசமான குரலாகவோ, சோகமான அழுகையாகவோ அல்லது வெறும் பெருமூச்சாகவோ கூட இருக்கலாம். ஆனால், அது ஆத்மாவின் குரல். சொந்த வாழ்வனுபவத்தின் குரல். இறுகிப்போன கோட்பாடுகளின் வழிவந்த சிந்தனையின் குரல் அல்ல.

நமது மக்களின் வாழ்வின் திசையையும் போக்கையும் தீர்மானித்த ஈழப்போராட்டம் இன்று வந்துள்ள நிலையைக் குறித்து நம் ஒவ்வொருவரதும் உள்மனதில் எழுகின்ற உணர்வு அல்லது கருத்து என்ன? இந்த உணர்வு அல்லது கருத்து ஏன் இவ்வாறு அமைகிறது? ஏன் வேறொன்றாக அமைய முடியாது என்று எம்மில் எத்தனைபேர் கேள்வி எழுப்பி யோசித்திருக்கின்றோம்? அப்படி யோசித்திருந்தால் எமது உணர்வுகளும், கருத்துக்களும் எப்படி சூழவுள்ள கருத்துக்களாலும் உணர்வு களாலும் செல்வாக்குச் செலுத்தப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன என்பதை எமக்கு விளங்கிக் கொள்ள முடியும். ஒரு சமூக மனிதராக எமது மக்களது அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைந்த ஒருவராக இருந்ததன் காரணமாக எமது மனதுள் இயல்பாக எழுந்த உணர்வு அல்லது ஆம். அந்த 'ஈ' வெறும் ஈ அல்ல. அது ஈழப் போராட்டம். உண்மையில் அது தனது பெயரை மறந்து விட்டது. தான் யார் என்பதை மறந்து விட்டது. தான் என்ன செய்யவென உருவானேன் என்பதை மறந்தது. தான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதை மறந்தது. தான் தன் பெயரை மறந்ததால் தன்னை மறந்தது. இதனால் தான் யார்யாராலோவெல்லாம், எ வை யெ வை யா லோ வெ ல் லா ம் வழிநடத்தப்படுகின்றேன் என்பதை அறியாதிருந்தது. தனது போக்கு திசை தரிப்பிடம் எதையும் அது அறியாதிருந்தது. தனது பெயரை தான் மறந்து விட்டேன் என்பதையும் கூட அது அறியாதிருந்தது. இதனால் அது தன் பெயர் என்ன என்று கேட்டு யாரிடமும் போகவில்லை. அதனால்தான் அதன் பெயரை ஞாபகப்படுத்த நினைத்தவர்களை எல்லாம் கூட அது ஒதுக்கித் தள்ளியது. இற்றைவரை அது தான் யார் என்பதை நினைவுக்குக் கொண்டு வந்ததாகவும் தெரிய வில்லை.

எவ்வளவு அற்புதமான மதிப்பீடு இது!

எமது மக்களின் வாழ்வை நேசிக்கின்ற ஒரு கவிஞனின் பெருமூச்சாக வெளிப்படுகின்ற மதிப்பீடு இது.

# வெகுளாமை

15ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்து விடுகின்றது. கொலைச்சம்பவங்களில் கூட கோபம் பிரதான காரணியாகி விடுகின்றது. சமூகப் பிரச்சினைகளில் கோபம் பெரும் பங்கை வகித்து விடுகின்றது.



வேண்டாத கோபத்தை நெறிப்படுத்தி வெகுளாமை கொண்டு வாழ்வதற்கு நாங்களும் முயற்சித்து கோபத்தினால் அல்லலுறுபவர்களும் அதனின்று விடுபட எம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டியது அவசியமாகும். நாம் வாழுகின்ற சமூகத்தில் குடும்பச் சச்சரவுகள், வன்முறைகள் நீங்கவும் கோபத்தை நெறிப்படுத்தல் பற்றிய விழிப்புணர்வுகள் அதிகமாக ஏற்படல் வேண்டும் என்பதும் எனது கருத்தாகும். குடும்பங்களில் ஏற்படும் சச்சரவுகளால் அப்பாவிகளான குழந்தை களும், இளைஞர் களும் அதிகம் பாதிக்கப்படுகின் றார்கள் என்பது மிகவும் மன வேதனையைத் தருகின்றது.

அன்பான வாசகர்களே! வழமை போலாக இன்றும் வெகுளாமை கொண்டு வாழ்வுடன் தொடர்புள்ள சில விடயங்களையும், ஆய்வுத் தகவல்களையும் பற்றி உரையாடிக் கொண்டோம்.

உங்கள் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள்.

அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

தொடரும்...

# அதிகளவு...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

2012) மூன்றாம் (Q3 - 2012) காலப்பகுதி இந்த எண்ணிக்கையை எட்டினால் புதிய கொண்டோக்களின் விலையில் மாற்றம் தவிர்காமல் போகலாம் கொண்டோ அலகுகளின் Q4 - 2011 இற்கும் Q1-2012 இற்குமிடையில் சராசரி சதுரஅடி ஒன்றின் விலை 1% இனால் குறைந்துள்ளது. இதுவும் ஒரு அறிகுறியா?



# வெகுளாமை (Calm) - 14

பொதுவாக முகத்தில் ஏற்படும் தசை அசைவுகள் மூளையின் நிலைப்பாட்டை வெளிக்காட்டிச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு உடலைப் பதில் நடவடிக்கைக்காகத் தயார் செய்வதுண்டு என்ற கருத்து நிலவுகின்றது. உதாரணமாக பயம் ஏற்படும் பொழுது கண்ணை அகலமாகத் திறப்பதன் மூலம் காட்சியை மேலும் அவதானிக்க முடிகின்றது. அத்துடன் மற்றவர்களுக்கும் ஒரு ஆபத்தான விடயம் நடக்கின்றது என்பதைத் தெரிவிக்க முடிகின்றது. நோர்த் ஈஸ்ரேன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த லிசா பெல்ட்மான் பரற் அவர்கள் தமது ஆய்வின் மூலம் மேற்குறிப்பிட்ட பொது எண்ணத்தை மறுத்துக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். மனிதர்கள் தாங்கள் கவலையுடன் இருப்பதை வெளிக்காட்ட நினைக்கும் பொழுது கவலையாகத் தென்படுகின்றார்கள் என்று ஆய்வு மூலமாகக் கண்டறிந்துள்ளார் கள். (Science Daily, December 13 2011). கோபம் ஏற்படும் பொழுது ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாக வெளிப்படுத்துகின்றனர். வெளிப்படுத்தும் தன்மை இயல்பாக ஏற்படாது அவர்கள் எவ்வாறு வெளிப்படுத்த விரும்பு கின்றனர் என்பதனாலேயே நடைபெறுகின்றது என்பது இவர்களின் ஆய்வு தெரிவித்த தகவல் ஆகும். கோபம் ஏற்படும் பொழுதெல்லாம் எல்லோரும் உரக்கக் கத்துவதில்லை என்பதை நாங்கள் கவனிக்கலாம். ஒவ்வொருவரின் பழக்கங்களைப் பொறுத்தும் அவர்கள் கோபத்தை வெளிக்காட்டும் விதம் இருக்கும் என்பதை இந்தத் தொடர்கட்டுரையில் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கின்றேன்.



ஒருவர் தனது நண்பர்களாலும், கூடப் பணிபுரிபவர்களாலும் விரும்பப்படும் வகையில் பொதுவாக நடந்து கொள்வார். அவரின் குடும்பத்திலும் கணவனுடன் நல்ல உறவுமுறை இருந்தது. அப்படியிருந்தும் அவரிடம் ஒரு பொல்லாத குணம் உண்டு. அவரைச் சுற்றி எல்லாம் சரியாக இருக்கும் பொழுது எந்தப் பிரச்சினையும் இல்லை. அவரின் எதிர்பார்ப்பில் ஏதாவது குறைபாடு தென்படும் பொழுது பொங்கியெழுந்து விடுவார். மற்றவர்களுடன் ஆக்கிரமிப்பாகப் பேசுவார். இந்த நேரங்களில் அவருக்கு நெருக்கமானவருடனும் பிரச்சினை வந்துவிடும்.

இன்னொருவர் அடிக்கடி கோபம் அடைவார். கோபம் வந்ததும் ஒரு வித்தியாசமான முறையில் நடந்து கொள்வார். விதிகளை மீறினாலும் அதை ஏற்றுக்கொள்வதில்லை. கோபமான நேரத்தில் மற்றையவர்களைப் புறக்கணித்து ஒதுங்கிக் கொள்வார். வீட்டில் இவர் நேரத்திற்குப் படுக்கைக்குப் போவதை வைத்துக்கொண்டே மனைவி அவர் கோபமாக உள்ளார் என்பதை அறிந்து கொள்வார். ஆனாலும் இவரின் மறைமுகமான நடவடிக்கை மற்றையவர்களையும் நிறைய பாதிப்பதுண்டு.

மேற்குறிப்பிட்ட இருவகையினரிலும் கோபம் ஒரு சாதாரண விருந்தாளி. இவர்களிடம் கோபம் வரும்பொழுதெல்லாம் ஏதோ ஒரு வகையில் சூழவுள்ளவர்கள் பாதிக்கப்படு வார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் தமக்கு இடைக்கிடை கோபம் வருகிறது. அதில் ஒரு குறையும் இல்லை என்று அவர்கள் நினைக்கக் கூடும். ஆனால் மற்றையவர்களுக்கு இவர்களின் கோபத் தன்மை பெரும் பிரச்சினையாக இருக்கும்.

எனவே கோபத்தை நெறிப்படுத்தும் முயற்சியில் தங்களுக்கு ஏற்படும் கோபம் பற்றியும், அதனால் ஏற்படும் தீமைகளையும் கவனித்துக் குறிப்பெடுத்து வைத்து ஆராய வேண்டியது அவசியம். இவ்வாறான நேரங்களில் சூழவுள்ளவர்களுக்கு எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றது என்பதையும் அவதானிக்க வேண்டும். இந்த வகையில் கோபத்தை நெறிப்படுத்துவதற்கு ஆறு படிகளைக் குறிப்பிடலாம். அவையாவன : கோபம் ஏற்படுவதை அறிந்து அதைப்பற்றிப் புரிந்து கொள்ளுதல், கோபம் ஏற்படும் காரணிகளை அறிந்து அவற்றை எதிர்கொள்ளத் தயாராகுதல், நேரத்திற்கே ஏற்படும் கோபத்தைப் பற்றி அறிந்து கொள்ளுதல், எங்கள் எண்ணங்களை நேர்மறையான தன்மையாக மாற்றிக் கொள்ளுதல், கடினமான நிலையிலும் அமைதியாக இருத்தல், சரியான முறையில் கோபத்தைக் கையாளுதல்.

எமக்கு ஏற்படும் கோபத்தைப் பற்றி ஒரு தாளில் எழுதிக் கொள்வது நல்லது எனக் கூறப்படுகின்றது. ஒரு நாளில் பலமுறை திரும்பத் திரும்ப எழுதும் பொழுது மனதில் அமைதி ஏற்படுமாம். இந்தப் பயிற்சி கோபத்தைக் கையாளும் திறமையைக் கொடுக்கும். அடுத்து நேரான எண்ணங்களை எழுதிக் கொள்ள வேண்டும். எங்களுக்கு ஏற்படும் மோசமான நிலையைப் பற்றிச் சிந்தித்து நேரான எண்ணங்களை எழுதிவர வேண்டும். எவ்வாறு கோபத்தைக் கையாள லாம் என்பதைச் செயல்முறையில் ஒத்திகை செய்து பார்க்க வேண்டும்.

கோபத்தைக் கையாள்வதற்கு (Anger Management) See it Don't Be It என்று ஒரு முறை உள்ளது. முதலில் மனத்திரையில் எங்களுக்கு ஏற்படும் கோபம் பற்றிய படத்தைக் கற்பனை செய்ய வேண்டும். இந்தப் படம் கற்பனையில் வரும்வரை தொடர்ச்சியாக முயற்சிக்க வேண்டும். பின்பு மனதில் ஏற்படும் நேர்மறையான எண்ணங்களால் ஆரோக்கியமான கோபத்தின் படத்தை மனதில் உருவாக்க வேண்டும். இந்த உருவத்தை மனதில் பதியச் செய்ய வேண்டும். இந்த உருவம் போலாக கோபமும் ஆரோக்கியமானதாக அமைவதற்கு அந்த முறை உதவும் என்கின்றார்கள்.

கோபம் ஏற்படும் பொழுது உடலிலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. உடலில் ஏற்படும் சில அறிகுறிகளும் கோபம் ஏற்படுவதைக் காட்டிக்கொள்கின்றன. இரத்த ஓட்டம் அதி-கரித்தல், இருதயத் துடிப்பு அதிகமாதல், சுவாசம் அதிகமாதல், வயிற்று வலி ஏற்படுதல், வாந்திக்குணம், தலைச்சுற்று, சமிபாடின்மை, தசை இறுகுமாப்போல் இருத்தல், உடல் வெப்பமாதல், புலன்கள் அதிக உணர்வு கொண்டதாக இருத்தல், தலைவலி, நித்திரையின்மை போன்றவை கோபத்தினால் ஏற்படுகின்றன.

இந்த நேரத்தில் கோபம் பற்றிய ஆங்கில முதுமொழி ஒன்றினை இங்கே குறிப்பிடலா மென நினைக்கின்றேன். "Deal With It , Heal with It, Stop It from Killing you". எவ்வாறு ஒரு நோயிற்கு பலவிதமான அறிகுறிகள் உள்ளது போலாக கோபத்திற்கும் பலவிதமான அறிகுறிகள் உள்ளன. கோபத்தினையும் நேரத்திற்கே ஆபத்து இல்லாது குணமாக்கி விட வேண்டும். அன்றேல் ஒரு உயிர்க்கொல்லி நோயாக உருவெடுத்துவிடும் என்பதே உண்மையான நிலையாகும்.

பாடசாலைகளில், குடும்பங்களில், வேலைத் தளங்களில், பிரயாணங்களில் எனப் பல்வேறு இடங்களிலும் ஒருவரின் கோபம் எழுப்பும் பிரச்சினைகளை நாங்கள் எல்லோரும் முகம் கொடுக்கின்றோம். சில நேரங்களில் வன்முறையாக மாறிப் பாரிய பாதிப்பைச்



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive "No One Should Go Hungry" Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# வழக்கு எண்: 18/9 திரை விமர்சனம்

'காதல்', 'கல்லூரி' படங்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு எதார்த்த, நடைமுறை கதையோடு களம் இறங்கி இருக்கிறார் இயக்குனர் பாலாஜி சக்திவேல். முந்தைய இரு படங்களை போலவே இதுவும் ஒரு உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. இரண்டு இளம் காதல்கள். வேலு - ஜோதி, ஒரு ஜோடி மற்றொரு ஜோடி, ஆர்த்தி - தினேஷ். இதில், ஜோதி முகத்தில் தீ காயங்களுடன் மருத்துவமனையில் சேர்வதில் படம் துவங்குகிறது. அவர் முகத்தில் யாரோ ஆசிட் அடித்திருக்கிறார்கள். வழக்கு பதிவாகி, இன்ஸ்பெக்டர் குமரவேல் விசாரணையைத் தொடங்குகிறார். ஜோதியை ஒரு தலையாய் காதலித்த பிளாட் பார டீ கடை பையன் வேலு மீது சந்தேகம் வருகிறது. காவல்துறை அவனை விசாரிக்க, அவனது கதை விரிகிறது.



- ஃபிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

கந்து வட்டிக்கடனை அடைக்க சிறு வயதில் வடநாட்டுக்குச் செல்லும் வேலு, தாயும் தந்தையும் விபத்தில் சிக்கி உயிரிழந்தவுடன் ஊருக்குத் திரும்புகிறான். பின்னர் பிழைப்பு தேடிச் சென்னைக்கு வரும் வேலு பசி மயக்கத்தில் மயங்கி விழுகிறான். வேலுவை எட்டிப் பார்க்கக் கூட நாதியில்லாத சென்னையில், அரை சாண் வயிற்றுக்காக திசை மாறிப் போன விலை மாது ரோஸி, சாலையோரம் உள்ள இட்லிக் கடையில் இட்லி வாங்கிக் கொடுத்து, இட்லிக் கடையிலேயே தன் 'சிபாரிசில்' வேலைக்கும் சேர்த்து விடுகிறாள். சாலையோர இட்லிக் கடையில் வேலை பார்க்கும் வேலுவுக்கும், அந்த வழியே செல்லும் வீட்டு வேலைக்காரப் பெண் ஜோதிக்கும் அவள் மேல் வேலு எச்சித் தண்ணியை ஊற்றுவதில் ஆரம்பித்து, தண்ணீர் எடுக்கப் போகும் போது, கடையில் என எங்கு பார்த்தாலும் மோதல். மோதலில் ஆரம்பித்த தன் ஒருதலைக் காதலை சொல்லி முடிக்கிறார் வேலு.

இப்பொழுது, தன் கதையை சொல்ல ஆரம்பிக்கிறார் ஆர்த்தி. பன்னிரெண்டாம் வகுப்புப் படிக்கும் ஆர்த்தியின் வீட்டில் வேலை செய்கிறாள் ஜோதி. ஆர்த்தி வீடு இருக்கும் அடுக்கு மாடிக் குடியிருப்பில் வசித்து வருபவர் ராஜலக்ஷ்மி. பள்ளித் தாளாளரான ராஜலக்ஷ்மிக்கு ஒரே மகன் தினேஷ். அம்மா தரும் அளவற்ற பணத்தில் விலை உயர்ந்த செல்போன், மாதம் ஒரு பார்ட்டி எனச் சுற்றுகிறார். தன் குடியிருப்பில் வசிக்கும் ஆர்த்தியிடம் கெமிஸ்ட்ரியில் சந்தேகம் கேட்கச் செல்லும் தினேஷ், சந்தேகம் கேட்கும் சாக்கில் ஆர்த்தியின் தொடையை தன் கேமராவில் பதிவு செய்து எடுத்து வந்து தன் நண்பர்களிடம் காட்டி மகிழ்கிறார். ஒரு கட்டத்தில் ஆர்த்திக்கு செல்போன் பரிசளித்து அவரை அவுட்டிங் அழைத்துச் செல்கிறார். ஆர்த்தி கடலில் குளிப்பதையும் அறையில் உடைமாற்றுவதையும் அவருக்கு தெரியாமல் தன் கேமராவில் பதிவு செய்கிறார், தினேஷ். ஒரு கட்டத்தில் ஆர்த்திக்கு தினேஷுடனான நட்பு காதலாக மாறுகிறது. தினேஷை எண்ணி வியந்து தன் காதலைச் சொல்ல நினைக்கும் நேரத்தில், கார் பழுதாகி நிற்கிறது. தினேஷ் மெக்கானிக்கை தேடிச் செல்லும்போது, தினேசின் செல்போனை எடுத்துப் பார்க்கும் ஆர்த்தி அதில் தான் கடலில் குளிக்கும், உடை மாற்றும் காட்சிகளைப் பார்த்து அதிர்ச்சிக்குள்ளாகிறார். தான் சம்பந்தப்பட்ட காட்சிகளை அழித்து, செல்போனை எடுத்த இடத்திலேயே வைத்துவிட்டு இறங்கிச் செல்கிறார். அத்துடன் தினேசின் நட்புக்கும் முற்றுப்புள்ளி வைக்கிறார்.

ஆர்த்தியின் செய்கையால் கோபமடையும் தினேஷ், ஆர்த்தியின் தாய் மாடிக்குப் போன நேரம் பார்த்து, வீட்டு பெல்லை அடிக்க, கதவைத் திறப்பது ஆர்த்தி என நினைத்து, கதவு திறக்கும் ஜோதியின் முகத்தில் ஆசிட்டை ஊற்றிவிட்டு ஓடி விடுகிறார். ஆசிட் அடித்தது தினேஷ்தான் என்பதை உறுதி செய்யும் இன்ஸ்பெக்டர் குமாரவேலு, வழக்குப் பதிவு செய்து தினேஷை உள்ளே அடைக்கிறார். மந்திரி சிபாரிசு, ஜாதி அபிமானம் எல்லாம் சேர குமாரவேலு, குற்றத்தை ஒப்புக்கொள்ள சொல்லி வேலுவை நிர்வாணச் சித்ரவதை செய்கிறார். தந்திரமாகப் பேசி ஜோதியின் முகத்தை மீண்டும் சரியாக்க தான் பொறுப்பு என்று ஆசை வார்த்தைக் காட்ட, வேலு தாம் தான் ஆசிட் ஊற்றியதாக ஏற்றுக்கொள்கிறார். வேலுவுக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை கிடைக்கிறது. சிறையில் தன்னைப் பார்க்க வரும் தன் நண்பர் சின்னச்சாமியிடம் உண்மையைச் சொல்லி, ஜோதியை பார்த்துக் கொள்ளும்படி சொல்கிறார் வேலு. ஜோதியின் வீட்டுக்குச் சென்று பார்த்த சின்னச்சாமியோ, ஜோதியின் தாய் வீட்டு வாடகைக் கொடுக்கவே அல்லாடுவதைக் கண்டு ஜோதியிடம் உண்மையைச் சொல்கிறான். உண்மையை தெரிந்துகொண்ட ஜோதி இன்ஸ்பெக்டர் குமாரவேலுவின் முகத்தில் ஆசிட் அடிக்கிறார். இன்ஸ்பெக்டர் முகத்தில் ஜோதி ஆசிட் அடித்ததால் வழக்கு மறு விசாரணை செய்யப்பட்டு வேலு விடுதலை ஆகிறான். இன்ஸ்பெக்டர் மீது ஆசிட் அடித்த ஜோதி சிறையில் அடைக்கப்படுகிறாள்.

## இதுதான் கதை!

வேலுவாக வரும் ஸ்ரீ, ஜோதியாக வரும் ஊர்மிளா, ஆர்த்தியாக வரும் மனிஷா, தினேஷாக வரும் மிதுன், குமாரவேலுவாக வரும் முத்துராமன் என எல்லாருமே போட்டி போட்டு நடித்துள்ளனர். இதில் ஜோதிக்கு நான்காவது இடம் என்றாலும் சிறப்பாக செய்து இருக்கிறார். வேலு அசல் தெருவோர பையனாகவே தெரிகிறார். பசியால் கீழே கிடக்கும் போதும், சிறையில் அழும் போதும், பொய் பேச தெரியாமல் இருப்பதும் இது போல கூறிக்கொண்டே போகலாம். கிடைத்த இடத்தில் எல்லாம் சிக்சர் அடித்து இருக்கிறார். தினேஷும் ஆர்த்தியும் இந்தக்கால இளசுகளை அப்படியே கண் முன் நிறுத்துகிறார்கள். அதிலும் தினேஷ், ஆர்த்தியை மடக்க செய்யும் செயல்கள், அதை தெரிந்தும் தெரியாதது போல காட்டி ரசிக்கும் ஆர்த்தி என்று நடைமுறை எதார்த்தத்தை அப்படியே பிரதிபலித்து இருக்கிறார்கள்.

இவர்கள் தவிர மனதில் நிற்கும் பாத்திரங்கள் வேலுவின் நண்பனாக வரும் கூத்துப்பட்டறை பையன், பாலியல் தொழிலாளி, வேலு வேலை செய்யும் பிளாட்பார கடை முதலாளி என்று மற்றவர்களும்கூட மிக மிகச் சிறப்பாக நடித்து இருக்கிறார்கள். இதில் அந்த கூத்துச் சிறுவன் பேசும் பேச்சுக்கு திரையரங்கில் பலத்த கைதட்டல். குமாரவேல் அப்படியே நிஜ காவல்துறை அதிகாரி போலவே பேசுகிறார். பிரசன்னாவின் இசை, கதைக்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் மென்மையாய் இருக்கிறது. பாடல்கள் இரண்டுதான். 'ஒரு குரல் கேட்குதே' பாடலுக்கு இவரின் உழைப்பு ஆச்சரியம் கொள்ள வைக்கிறது. படத்தின் மிகப்பெரிய பலம் கேமராதான். கேமராவின் அந்த அசைவுகள், அட அட விஜய் மில்டன் உண்மையிலேயே அசத்தி விட்டார். மிக அருமையாக எடிட்டிங் செய்து இருக்கிறார் கோபி கிருஷ்ணா.

இவை எல்லாவற்றுக்கும் காரணமானவர், பாலாஜி சக்திவேல். முதலாவதில் விளிம்பு நிலை மனிதர்களின் பரிவு, நேர்மை, மானம் குறித்து பேசும் படம், இரண்டாம் பகுதியில் பணக்கார மனிதர்களின் அலட்டல், குழந்தைகள் மீது கவனமின்மை, அதிகார துஸ்பிரயோகம், காமம் என்று விரிகிறது. நமது தெருமுனையில் இத்தனை காலமும் நமக்கு தெரிந்தோ தெரியாமலோ வாழுகிற ஏழைகளின் வாழ்க்கையை நன்றாக படம் பிடித்திருக்கிறார் பாலாஜி சக்திவேல். அரசி

தொடர்ச்சி 39ஆம் பக்கம்


சுயாதீன கலை திரைப்பட மையம் ரொரண்ரோ

**10th ITaFF - 2011**

INDEPENDENT ART FILM SOCIETY

June 23, 2012 நடைபெறவுள்ளது

பத்தாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால் கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் ஆங்கில துணைத்தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான பணப் பரிசுகள் வழங்கப்படும்.

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

'படைப்புக்கள் June 01, 2012க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

'படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

'படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.

'படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள் நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.

'படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.

'தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

'படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

Tam Sivathasan
Exceutive Director - IAFS
1345 Morningside Ave., Unit # 8
Toronto, ON. Canada, M1B 5K3
மேலதிக தொடர்புகளுக்கு:: 1-416.450.6833 / 1-416.804.3443
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com

# பெண்களின் பெரும் சிக்கலுக்கு நிரந்தர நிவாரணம் யோகா!

## சமூகத்தில் பெண்களின் பங்கு

### நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

ஆண், பெண், இருவர் சேர்ந்ததே சமுதாயம். இந்த இருபாலாரும் இணைந்து தான் அடுத்த சமுதாயத்தை உருவாக்க முடியும். அவ்வாறு இவர்களால் விருத்தி யாகும் அடுத்த சந்ததியின் தனித்துவம் இவர்களின் மனோபலம், திடஆரோக்கியம் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. அதிலும் உயிரின் உருவாக்கும் தர்மத்தைப் பெண்கள்தான் ஏற்றுக்கொள்கின்றனர். இதனால் பெண்கள் திடகாத்திரமாக, மன உறுதிமிக்கவர்களானால் குழந்தையும் அவ்வாறே அமையும். இதனால் பெண்களின் உடல் நிலையில் தனிப்பட்ட மாறுதல்களும் அவற்றின் உபாதைகளும் உள்ளன. அவை

1. மாதவிடாய் சம்பந்தமான கோளாறு
2. கருச்சிதைவு
3. சிரமமான பிரசவம்
4. பருவமடைதலில் கோளாறு என நான்கு வகைகள்.

### 1. பருவமடைதலில் கோளாறு

பெண்களுக்கு சாதாரணமாக 11 வயது முதல் 14 வயதிற்குள் பருவமடைதல் நிலை ஏற்படுகிறது. அதாவது முதல்முதலாக மாதவிலக்கு ஏற்படும் நிகழ்வைக் குறிக்கும். அதாவது சில பெண்களுக்கு பருவமடைத லில் தாமதம் அல்லது பருவமடைந்தாலும் மாதத் தீட்டு வருவதில் தாமதம், ஒழுங்கற்ற முறையில் இருத்தல், அதிக உதரப்போக்கு,



மாதவிலக்கு காலங்களில் உடல், மனச்சோர்வு என்பன ஏற்படுகின்றன. அதற்கு பலகாரணங்கள் இருப்பினும் முக்கியமாக நாளமில்லா சுரப்பிகளான தைராய்டு (Thyroid), அட்ரினல் (Adrenal), பிற்றியூரிற்றி (pituitary), ஓவரிஸ் (Ovares) போன்றவற்றின் செயல்களால்தான் மாதத் தீட்டு ஏற்படுகிறது. இவற்றின் செயல்களில் எவையேனும் ஒன்று பாதிக்கப்பட்டாலும் மற்றையதின் இயக்கம் பழுதடையும். அடுத்து கருப்பை வளர்ச்சி யின்றி இருந்தாலும் சில கோளாறுகள் ஏற்படும். இதற்கு சர்வாங்காசனம் (Sholder stand), பாதஹஸ்தாசனம் (Head to feet pose) செய்து வருவதன் மூலம் தீர்வு காணலாம்.

### 2. கருச்சிதைவு

கருச்சிதைவுக்கு முக்கிய காரணம் வயிற்றுப்புச்சதைகளும், கருப்பை பலவீனமாக இருப்பதுமாகும். இவற்றை இயக்கும் நரம்புகளும் நரம்புக் கோளங்களும் சக்தியிழந்து காணப்பட்டாலும் கருச்சிதைவு ஏற்படும். அடுத்து கருப்பை தனது நிலையை விட்டு மாறியிருந்தாலும் கருச்சிதைவு ஏற்பட



வாய்ப்புண்டு.

### 3. சுகப்பிரசவம்

இடுப்பு, இடுப்புச் சதைகள், அடிவயிற்றுச் சதைகள் பலத்துடன் இருந்தால்தான் சுகப்பிரசவம் ஏற்படும். பலவீனமுள்ள அநேக பெண்கள் பிரசவ நேரத்தில் தனது உயிரோ அல்லது சிசுவின் உயிரோ இழப்புக்குக் காரணமாகிவிடுகின்றனர். பிரசவம் எளிதாக இருப்பதற்கு ஹலாசனம் (Plough) பச்சிமொத்தாசனம் (Head Knee Pose) என்பன சிறந்த வழிமுறையாகும்.

யோகாசனங்கள் ஒவ்வொரு உறுப்பிற்கும் புத்துயிரளிக்கின்றது. சமூகத்தை உருவாக்குவதில் பெண்கள் பெரும்பங்கு வகிப்பதால் அவர்கள் நல்ல ஆரோக்கியமும் மனோபலமும் இருக்கப் பெற்றால்தான் இளம் சந்ததியினரை நன்கு உருவாக்க முடியும். இவற்றைப் பெறுவதற்கு யோகாசனம் ஒன்றைத் தவிர மற்ற எந்த வைத்திய முறையிலும் எவ்வளவு பணத்தைக் கொட்டிக் கொடுத்தாலும் பெறமுடியாது.

### பெண்களின் உடலமைப்பும் அவற்றின் குறைகளும்.

இயற்கையாகவே இறைவன் பெண்களுக்கு மிகமென்மையான உடலமைப்பைத் தந்திருக்கிறார். பெண்களுக்கு ஏற்படக்கூடிய பருவ மாறுதலுக்கு இந்த மென்மையான உடலமைப்பு மிக அவசியம். ஏனெனில் அவர்கள் பருவமடைதல் போன்ற நிலைகளில் இது மிக உதவியாக உள்ளது. அதேபோல சில குறைகளும் இருக்கின்றன. பெண்கள் பூப்படையும் காலத்தில் உடலில் பலவிதமான மாறுதல்கள் ஏற்படுகின்றன. குழந்தைகளைப் பெறும் பொறுப்பினை பெண்களே ஏற்றுக்கொள்வதால் அவர்களது உடலமைப்பில் தனிப்பட்ட வேறுபாடுகளும் மாதவிடாய் கருச்சிதைவு போன்ற கோளாறுகளும் ஏற்படுகின்றன.

அடுத்து உடல் நீண்டு வளர்ச்சியடைந்தும், கால்கள் குறுகுவதும், தொடைகளில் சதைகள் அதிகமாவதும், மார்பகங்கள் வளர்ச்சியடைவதும், சுவாசக் கொள்ளளவு அதிகமாவதும் காணப்படுகின்றன. மேலும் எலும்புகள் மிக லேசாகவும் சதைகளின் எடை குறைந்தும் காணப்படுவதால் அவர்களின் புவியீர்ப்புத்தானம் மிகவும் குறைவாகவே உள்ளது. இவையே குறைகள். அதுமட்டுமன்றி அவர்கள் தாய்மையடைந்திருக்கும் இரு உயிர்களுக்காக சுவாசிக்க வேண்டும். தாயின் சுவாசநிலையில் ஏதேனும் குறைபாடு ஏற்படுமாயின் அது வளரும் சிசுவையும் பாதிக்கின்றது. எனவே இந்த சமயத்தில் அவர்களின் மனோநிலை பாதிக்கப்பட்டு நிதானம், பொறுமை உணர்வு என்பன சமநிலையை இழக்கின்றன.

### இக்குறைகளை போக்கும் வழிகள்

மேற்கண்ட இயற்கையாகவே ஏற்படும் பெண்களின் குறைபாடுகளை வேறு தேகப்பயிற்சி மூலமாகவோ, உடற்பயிற்சி மையங்களுக்குச் (gym) செல்வதன் மூலமாகவோ சரி செய்துவிடமுடியாது. இதை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் யோகா முறையில் மன இறுக்கம், படபடப்பு என்பன சீராகி மனோபலம் வளர்ந்து ஒவ்வொரு உறுப்புகளுக்கும் போதுமான இரத்த ஓட்டம் கிடைக்கச் செய்து, உடலில் ஏற்படும் எந்தவிதமான கோளாறுகளையும் (Disorders) சமநிலைப்படுத்தி பெண்களின் முழுமையான ஆரோக்கியத்திற்கு வழிகிடைக்கிறது.

இதில் ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் கீழக்கண்ட இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# இருகை கூப்பிக் கேட்கின்றோம்!



அள்ளி வீசிய குண்டுகளால்
ஆயிர மாயிர மாய்மடிந்த
முள்ளி வாய்க்கால் அவலத்தை
முட்டி மோதும் கருப்பொருளாய்க்
கொள்ள வேண்டாம் உறவுகளே!
கொச்சைப் படுத்தி எம்மினத்தை
எள்ளி நகைக்க வைக்காதீர்!
இருகை கூப்பிக் கேட்கின்றோம்!!

நச்சுக் குண்டைப் போட்டவனும்,
நரபலி யெடுத்த அயலவனும்,
அச்ச மின்றி எம்மினத்தை
அழித்த கோடரிக் காம்புகளும்,
உச்சிச் செய்மதி ஊடாக
உண்மை அறிந்து இருந்தவனும்,
மெச்சி மகிழ வேண்டுமென்றா
மீண்டும் பிரிந்து நலிகின்றோம்?

விட்டுக் கொடுக்க மனமில்லை!
வீம்புப் பேச்சிற் குறைவில்லை!!
கொட்ட மடித்து உடன்பிறப்பைக்
கொச்சைப் படுத்தி வசைபாடும்
கெட்ட மதியேன் மாறுதில்லை?
கேவல புத்தியேன் போகுதில்லை?
பட்டும் அறிவு பெறாவிட்டால்
பாதகம் யார்க்கு நமக்கன்றோ!

'எத்தனை சோதனை வந்தாலும்
இவர்கள் திருந்தார்' எனக்கூறி
மொத்த உலகும் எமைப்பார்த்து
முணுமுணுக் கிறது தெரிகிறதா'?
செத்து மடிந்த உறவுகளின்
தியாகம் தன்னை மதிப்பதெனில்
ஒத்த கருத்தை உருவாக்கி
ஒற்றுமைப் பட்டுச் செயற்படுவோம்!

நாக்கில் மட்டும் ஒற்றுமையா?
நடையில் மட்டும் வேற்றுமையா?

தீக்குள் இருந்து துடிப்பவர்போல்
சேர்ந்த உறவுகள் ஈழத்தில்
போக்கில் லாமல் தவிக்கின்றார்
புலம்பெயர் மண்ணில் வாழும்நாம்
யார்க்குத் தலையில் முடிசூட்ட
நமக்குள் நாமே மோதுகிறோம்?

'புலத்தில் இருக்கும் தமிழர்கள்
புதுவாழ் வளிப்பர்' எனநம்பி
நிலத்தில் அசையா நம்பிக்கை
நெஞ்சிற் சுமந்து வாழ்வோரின்
நலத்தில் அக்கறை மெய்யாக
நமக்கு இருக்கு மென்றால்நாம்
'பலத்தைக்' காட்ட முயற்சிக்கும்
பைத்தியச் செயலை நிறுத்திடுவோம்!

எமக்குள் பேசி ஒருமுடிவை
எடுக்கத் தெரியா நாங்கள்போய்
'எமக்குச் சுதந்திரம் தா'வென்றால்
எவர்தான் ஏற்பர்' நகையாரோ'?
'உமக்குள் ஒற்றுமைப் படத்தெரியா
உங்களுக் கெதற்குச் சுதந்திரம்,போய்
சுமப்பீர் பட்டம் பதவிகளைத்
தூக்கிப் பிடிப்பீர் புதுக்கொடியை!'

உரிமை யோடு உங்களிடம்
ஒன்றை மட்டும் கேட்கின்றோம்!
பெரிய இழப்பைச் சந்தித்தோம்!
பெரிய விலையை நாம்தந்தோம்!!
உரிமைக் காக உயிர்தந்த
உறவுகள் சாந்தி பெறச்செய்வோம்!
அரிய அவர்கள் தியாகத்தை
அவமரி யாதை செய்யாதீர்!!

'அருள்மணி'
சபா. அருள்சுப்பிரமணியம்.
905-479-5375

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

# எதிர்ப்பு அரசியலின் எதிர்காலம்

## கலந்துரையாடல் குறித்த குறிப்புகள்

கடந்த 13.05.2012 மாலை தொறான்ரொ ஐயப்பன் ஆலய மண்டபத்தில் எழுத்தாளர் யமுனா ராஜேந்திரனுடனான கலந்துரையாடல் ஒன்றினை தொறான்றோ நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்ச்சிக்கு அரசியலில் தேடல் கொண்டவர்கள், கனடாவின் கலை, இலக்கியவாதிகள் என 75 பேர் வரை கலந்து கொண்டிருந்தனர். நிகழ்ச்சி 5.30 மணிக்குத் துவங்கியது. அரசியல் செயல்பாட்டாளர் நடராஜா முரளீதரன் யமுனா ராஜேந்திரன் குறித்த அறிமுகக் குறிப்புடன் நிகழ்ச்சியைத் துவங்கிவைத்தார். எதிர்ப்பு அரசியலின் எதிர்காலம் எனும் தலைப்பில் 45 நிமிட ஆரம்ப உரையை யமுனா ராஜேந்திரன் வழங்கினார். அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் இரவு 09.15 மணிவரை தொடர்ந்தது.

யமுனா ராஜேந்திரன் தனது உரையில் இன்றைய சர்வதேசீய அரசியல் பின்னணியில் வைத்து ஈழவிடுதலைப் போராட்டத்தின் பிரச்சினைகள் குறித்தும் முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின்னான ஈழத்தமிழர் அரசியல் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் தனது மதிப்பீட்டினை முன்வைத்தார்.

அவர் தனது உரையில் குறிப்பிடும்போது முள்ளிவாய்க்கால் மரணங்கள் மட்டுமல்ல, ஈழ விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு அனுபவங்கள் நாம் வாழும் உலக நிலைமையில் தனித்த நிகழ்வுகள் அல்ல. குர்திஸ் விடுதலை இயக்கத்தின் தலைவர் அப்துல்லா ஒச்சலான் இம்ராலியில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். பெரு சைனிங்பாத் இயக்கத் தலைவர் அர்மல் குஸ்மான் தனிமைச் சிறையில் இருக்கிறார். கொலம்பிய பார்க் விடுதலை இயக்கத்தலைவர் அல்பான்சோ கெனோ சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இந்திய நக்ஸலைட் இயக்கத் தலைவர் கிஸன்ஜி சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதனைச் சுட்டிக்காட்டினார். சோவியத் யூனியனின் வீழ்ச்சி, நியூயார்க் தாக்குதலின் பின்னான உலக நிலைமை என மாற்றப்பட்ட உலக அரசியல் வரைபடத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு ஈழவிடுதலைப் போராட்டத்தை நாம் அணுகவேண்டும் என்றார்.

இன்றைய ஈழநிலைமைகள் பற்றிப் பேசுகிறபோது, ஈழநிலத்தில் யதார்த்த அரசியல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயல்பாடுகளில்தான் தங்கியிருக்கிறது. புகலிடத்தில் சாத்தியமான அரசியல் மனித உரிமை அரசியல்தான். இது அழுத்த அரசியலாக மட்டும்தான் இருக்க முடியும். நாடு கடந்த தமிழீழ அரசு அதனைத்தான் இங்கு செய்ய முடியும். அதனை அவர்கள் செய்கிறார்கள். ஒரு ஜனநாயக அரசியலில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் அரசியல் ஒரு முனை எனில், அதனது மறுமுனைதான் நாடு கடந்த தமிழீழ அரசியல் எனவே நான் கருதுகிறேன் என்றார். தொடர்ந்து பேசும் போது உண்மையில் தமிழர்கள் இன்று தேட வேண்டிய அரசியல், பிறரது அரசியல் உரிமைகளை அங்கீகரித்துக் கொண்டு, சதா பிறரை விமர்சித்துக் கொண்டிருக்காமல், அவரவர் அரசியலை முழுமையாகக் கண்டடைய முயற்சிப்பதுதான். முள்ளிவாய்க் காலின் பின்னான கால அரசியல் பிறரைக் குற்றம் சுமத்திக் கொண்டிருப்பதில் மட்டும் முழுமைபெற்றுவிட முடியாது என்று குறிப்பிட்டார்.

வெளிச்சக்திகளின் தலையீடு பற்றிய மதிப்பீட்டில். எந்த வெளிச் சக்திகளும் முறையானது முறையற்றது எனும் அடிப்படையில் ஈடுபடுவது இல்லை. அமெரிக்கா, சீனா, ரஸ்யா, இந்தியா, மேற்கத்திய நாடுகள், கியூபா என அனைத்து நாடுகளுக்கும் இது பொருந்தும். தத்தமது நாடுகளின் புவியியல், பிராந்திய, பொருளியல் நலன்களின் அடிப்படையில்தான் உலகின் பிரச்சினைகளை எந்த நாடும் அணுகும் என்பதனைச் சுட்டிக்காட்டினார்.

மார்க்சீயம் முன்வைத்த புரட்சிகர ஸ்தாபனப் பிரச்சினைகளுக்கும் ஈழ விடுதலைப் போராட்டம் சந்தித்த பிரச்சினைகளுக்கும் இருக்கும் இடையறாத வரலாற்றுத் தொடர்ச்சியைக் குறித்து யமுனா ராஜேந்திரன் விரிவாகப் பேசினார். லெனின் தோற்றுவித்த சோவியத் யூனியன் இன்று இல்லை. அதனது அரசியல்-பொருளியல் மாதிரிகளாக கிழக்கு ஐரோப்பாவில் நிலவிய சோசலிச நாடுகள் இன்று இல்லை. மாவோ கனவு கண்ட சீனம் அல்ல இன்று மூலதனத்தை ஆப்ரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் வட்டிக்கு ஏற்றுமதி செய்யும் சீனா. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற லெனினியக் கோட்பாட்டையும், நாடுவிட்டு நாடுகடக்கும் மூலதனம் பற்றிய ரோஸா லக்சம்பர்க்கின் பார்வையையும் இன்று நாம் சீனாவுக்கும் பொருத்திப் பார்க்கவேண்டும். சோசலிசம் முதலாளித்துவம் என இரண்டிலும் இருக்கிற நல்லதை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம் என்கிறார் வியட்நாமிய மக்கள் யுத்தக் கோட்பாட்டின் பிதாமகர் ஜெனரல் கியாப். தனியார் தொழில், சொத்து மற்றும் நிலம் வாங்குதல் என்பதனை கியூபக் கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரஸ் அங்கீகரித்திருக்கிறது.

தொடர்ச்சி 23ஆம் பக்கம்

TRIDEL® BUILT FOR LIFE

# நிறுவனத்தின் புதிய வரவு

# 10 YORK STREET - TORONTO



SPECIAL DISCOUNT PRICE/UNITS

இன்றே HomeLife GTA நிறுவன முகவர்களை தொடர்பு கொள்ளுங்கள்

TRIDEL BUILT FOR LIFE இன் அனுமதி பெற்ற நிறுவனம்

## HomeLife / GTA Realty Inc. Brokerage*

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969

145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

*Independently owned & operated


IDEAL
Flooring Centre
Kitchens & Baths
Total Kitchen Renovations With New Cabinets And Granite Quartz Counter Top
Total Bathroom And Basement Renovation
Visit Our Showroom
(Kingston Rd / Westney Rd)
IDEAL FLOORING CENTRE
TEL 905-239 7841 FAX 905-239 7852
362 Kingston Road Unit 6. Ajax
(Kingston Rd/westney Rd)

# "உலகின் ஒடுக்கப்பட்ட மக்களது போராட்டத்தின் பகுதியாகவே நான் ஈழ விடுதலைப் போராட்டத்தினைப் பார்த்தேன்."

## யமுனா ராஜேந்திரனுடன் ரதன் உரையாடல்



கடந்த பல வருடங்களாக ஈழத் தமிழருக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றீர்கள். ஒரு சக தமிழன் என்பதற்கு அப்பால் உங்களைத் தூண்டியவை என்ன?

குழந்தைப் பருவத்திலிருந்தே எனது வாழ்க்கைப் பின்னணி என்பது பல்கலாச்சார-பல்மத-பல்சாதியச் சூழலால் ஆட்கொள்ளப்பட்டிருந்தது. எனது தந்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியர். எனது தாய் ஒரு பஞ்சாலைத் தொழிலாளி. எனது தாய்தான் எமது குடும்பத்தின் ஆதாரம். ஒரு குடும்பமாக நாங்கள் தெருவுக்கு வராமல் இருந்ததற்கு அவரது கடுமையான உழைப்பே ஆதாரம். அவரது உழைப்பில்தான் எங்களுக்கென எமது வளர்ந்த பருவத்தில் வாழ்வதெற்கென ஒரு சொந்த வீடு அமைந்தது. எனது தந்தை குழந்தைகளாக எங்களுக்குத் தீபாவளிக்கு புதுத்துணி எடுத்துத் தந்தது ஞாபகம் இருக்கிற அளவு, அவர் வெளியூர் சென்று திரும்பவரும்போது கொண்டுவரும் புத்தகங்கள் எனக்கு ஞாபகம் இருக்கிறது. நாங்கள் மூன்று சகோதரர்கள், இரு சகோதரியர். ஒரு சகோதரி குழந்தைப் பருவத்திலேயே நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். மிக எளிமையான வாழ்வு. வறுமை, பட்டினி, அன்றாட வாழ்வுப் போராட்டம் இவற்றுக்கிடையிலும் பாசமும் அன்பும் கொண்டு எம்மை எமது பெற்றோர் வளர்த்தனர்.

தனது 83 வது வயதில் மரணமுற்ற எனது தந்தை உணர்ச்சிவசமான மனிதர். சமூகக் கொடுமைகள் மீதான அதிகமான தார்மீகக் கோபம் அவரது இயல்பாக இருந்தது. அவரது தலைமுறையைச் சார்ந்த பொதுவுடமை இலட்சியவாதிகள் இன்று அருகிவிட்ட உயிரினங்களாகிவ-ிட்டவர்கள். குடும்பத்தில் கல்லூரிப் படிப்புப் படித்தது நான் ஒருவன்தான். கம்யூனிஸ்ட் கட்சி முழு நேர ஊழியராக, வருமான நிரந்தரமற்ற எனது தந்தையால் எனது இரு மூத்த சகோதரர்களதும் படிப்பை பள்ளிக் கல்விக்கு அப்பால் நகர்த்த முடியவில்லை. எனது இரு சகோதரர்களும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஆனார்கள். அவர்களால்தான் நான் படிக்க முடிந்தது. என்னைத் தவிர வீட்டில் அனைவரும் அதிகாலை 5 மணிக்கு பஞ்சாலைத் தொழிலுக்குப் புறப்படுபவர்கள் ஆனதால் எனது சகோதரி அவர்களுக்குச் சமைத்துக் கொடுக்கவென பள்ளிப் படிப்போடு நிறுத்திக் கொண்டார். அமையப்போகும் கம்யூனிச சமுதாயம் சமூகத்துக்கும் எமக்கும் சேர்த்து சுபிட்சத்தையும் விடுதலையையும் கொண்டுவரும் என்கிற நம்பிக்கையில் எனது தந்தை ஆத்மார்த்தமான ஈடுபாடு கொண்டவராக இருந்தார். கடப்பாடு கொண்ட கம்யூனிஸ்ட்டுகளான கே.பாலதண்டாயுதம், ப.விருத்தகிரி போன்றவர்களை, கலைஞர்களான இளையராஜா, அறந்தை நாராணயணன் போன்றவர்களை, மிகப் பெரும் படிப்பாளிகளான எஸ்என்.நாகராசன், எல்.ஜி.கீதானந்தன் போன்றவர்களை அருகிருந்து பார்க்கிற வாய்ப்பு எனது வளர்பருத்திலேயே எனக்கு வாய்த்தது. எனது தந்தையே எனது முதல் ஆதர்ஷம்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் ஈழவிடுதலைப் போராளிகள் தமிழகம் வந்தபோது இயல்பாகவே என்போன்ற இடதுசாரிப் பின்புலம் கொண்ட இளைஞர்கள் ஈழவிடுதலையின்பால் ஈரக்கப்பட்டார்கள். வானம்பாடிக் கவிஞர் புவியரசுவின் வார்த்தைகளில் சொல்வதானால், தமிழர்கள் ஆயுதம் ஏந்தி விட்டார்கள், தமிழர்கள் ஆயுதம் ஏந்தி விட்டார்கள், தமிழர்கள் ஆயுதம் ஏந்தி விட்டார்கள் (இப்படித்தான் அதனை அவர் மூன்று முறை திருப்பித் திருப்பிச் சொல்வார்) என்பது எமக்கெல்லாம் சிலிர்ப்பூட்டக் கூடிய விடயமாக இருந்தது.

**தொடர்ச்சி 29ஆம் பக்கம்**



# ஒப்புவமை இல்லா இயற்கை செழுமை! -தேக்கடி

தமிழ்நாடு - கேரளா எல்லையில், தேனி - குமுளியையொட்டி, கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் அமைந்துள்ள எழில் கொஞ்சும் நகரம் தேக்கடி. மலைகள், காடுகள், நீர்த் தேக்கங்கள், அருவிகள் நிறைந்த ஒப்புவமை இல்லாத இயற்கைச் செழுமை கொண்ட ஒரு அழகிய இடம். இயற்கையுடன் கொஞ்சம் பழகிட்டு வரலாமே என நினைப்பவர்களுக்கு சிறப்பான தேர்வு. தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும் இடையே இன்று பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள பெரியாறு அணையின் எட்டு ஆயிரம் ஏக்கர் நீர்தேக்க பரப்பின் வனப்பும் குளுமையும்தான், தேக்கடியின் சிறப்புக்கு முதல் காரணம். ஆனால், இப்பொழுது நாம் தேக்கடி செல்வது சுற்றுலாவுக்கு என்பதால், அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு இயற்கை அழகை அனுபவிப்போம்! முல்லைப் பெரியாறு அணை ஆங்கிலேயரால் 1895ஆம் ஆண்டில் பெரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டது. (அணை வரலாறு ஏற்கெனவே நமக்கு தெரிந்ததுதான். எனவே, மீண்டும் இங்கே சொல்ல வேண்டாம் என நினைக்கிறேன்.)



## கேரளா சுற்றுலா இடங்கள் - 10

இந்த முல்லைப் பெரியாறு அணை அமைந்துள்ள, கேரளத்தின் பெரியாறு தேசியப் பூங்காவின் ஒரு பகுதிதான் தேக்கடி. பசுமைமாறாக் காடுகளுக்காகவும் சவான்னாப் புல்வெளிகளுக்காகவும் மிகவும் புகழ் பெற்றது. தேக்கடி என்றாலே அனைவரின் நினைவிற்கும் வருவது படகு சவாரிதான். இங்கு சுற்றுலா வருபவர்கள் 14 கிலோ மீட்டர் நீளமுள்ள ஏரியில் படகில் சென்று வனத்தின் அழகை கண்டு ரசிக்கலாம். இப்பகுதியில் யானைகள், புலிகள், சோலை மந்திகள், காட்டெருது, சாம்பர் மான், குரங்குகள், காட்டுக் கரடி முதலான பல காட்டுயிர்கள் வாழ்கின்றன. பெரியாறு அணையில் தேங்கி நிற்கும் நீர்ப் பரப்பில், வனங்களில் வாழும் இந்த விலங்குகளை ரசித்தபடியே படகு சவாரி செய்வது பேரானந்தம் தருவது. படகு சவாரி தவிர இங்குள்ள வனப்பகுதியில் நேச்சர்வாக், யானை சவாரி, டைகர் வியூ என பல சிறப்பு அம்சங்களும் உண்டு.

தேக்கடி படகுத்துறைக்குள் செல்வதற்கு முன், வழியில் உள்ள பகுதியில் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக சிறு பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவின் நடுப்பகுதியில் மரக்கிளைகளின் மேல் புலி நிற்பது போன்ற சிலை அமைக்கப்பட்டுள்ளது. பூங்காவின் சுற்றுப் பகுதியில் பயணிகள் அமர்வதற்கான இருக்கைகள் அமைக்கப் பட்டுள்ளன. தேக்கடி நீர்த் தேக்கத்தைப் போலவே, அதனை ஒட்டி யிருக்கும் பெரியார் வனவிலங்கு சரணாலயமும் பிரசித்தி பெற்றது. உலகின் பிரமிக்கவைக்கும் இயற்கை வனவிலங்குச் சரணாலயங்களில் ஒன்று இது என்று சொல்கிறார்கள். 673 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட இந்த சரணாலயம் கடல் மட்டத்தில் இருந்து 1800 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. யானைகள், மான்கள், குரங்குகள், பைசன்கள் என இந்த சரணாலயத்தில் ஏராளமான விலங்குகள் கூட்டம் கூட்டமாக காணப்படுகின்றன. இங்கு ஓடும் பெரியாற்றில் வனவிலங்குகள் தண்ணீர் அருந்துவதைக் காண்பது கண்கொள்ளா காட்சியாகும். படகில் பாதுகாப்பாக இருந்து கொண்டு காட்டு யானைகளை நெருக்கத்தில் சென்று புகைப்படம் எடுக்க முடிந்த சரணாலயம் இந்தியாவிலேயே இது ஒன்றுதான். புலிகள் உலவுவதைக்கூட காண முடியும். காட்டெருதுகள் மூர்க்கமானவை. ஆகவே, அவற்றைப் பார்த்தால் மறந்தும் அதன் அருகே போய்விட வேண்டாம்.

தொடர்ச்சி 30ஆம் பக்கம்




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



# எதிர்ப்பு அரசியலின்...

இலத்தீனமெரிக்காவில் இனி ஆயுதப் போராட்டத்திற்கு இடமில்லை, அது கடந்த காலம் என்கிறார் கொலம்பிய ஜனாதிபதி சேவாஸ். கியூபப் புரட்சியின் தலைவர் பிடல் காஸ்ட்ரோ அதனை மௌனமாக அங்கீகரிக்கிறார். நாம் வாழும் உலகு அமெரிக்கா-சோவியத் யூனியன் என இருந்த இரட்டைத்துருவ உலகு அல்ல. அமெரிக்கா

**- செல்வம் அருளானந்தம் -**

மட்டுமே அனைத்தும் என ஆகின ஒற்றைத் துருவ உலகும் அல்ல. அமெரிக்கா-ரஸ்யா-சீனா-ஐரோப்பா-இந்தியா எனும் சக்திகளால் பங்குபோடப்படும் பல்துருவ உலகு இது என்பதனைத் தெளிவுபட எடுத்துக் காட்டினார்.

அரபுப் புரட்சி என்பது தத்தமது சமூகங்களை ஜனநாயகப்படுத்துவதற்காக எழுந்த எழுச்சி. அதனது கோரிக்கைகள் முடிவற்றவை. அரபு சர்வாதிகாரிகளை எதிர்த்து, முடிமன்னர்களை எதிர்த்து, தீர்மானமான போராட்டத்தினை அவர்கள் முன்னெடுத்தார்கள். இந்தப் போராட்டங்களில் எகிப்து, துனீசியா போன்ற நாடுகளில் இஸ்லாமியவாதிகள் முதலில் பங்கெடுக்கவில்லை. போராட்டங்களில் இருந்து விலகி நின்றார்கள். போராட்டம் வெகுஜனமயப்பட்டபோது அதனது பெறுபேறுகளை அவர்கள் ஸ்வீகரிக்க முயன்றார்கள். எகிப்தில் ராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை மதச்சார்பற்ற இடதுசாரிகளும் தாராளவாதிகளும் இளைஞர்களும் இன்றுவரையிலும் தொடர்ந்து முன்னெடுக்கிறார்கள். இஸ்லாமியவாதிகளான சகோதரத்துவ இஸ்லாம் இயக்கத்தவர்கள் எகிப்திய ராணுவத்துடன் சமரசம் செய்து கொண்டு ஆட்சிய-திகாரத்தைக் கைப்பற்ற நினைக்கிறார்கள். அரபுப்புரட்சியின் முதல் கட்டம் இப்போது முடிந்திருக்கிறது. இடதுசாரிகள்-தாராளவாதிகள்-இளைஞர்கள் ஒரு புறமும், ராணுவ இயந்திரமும் இஸ்லாமியவாதிகளும் சேர்ந்து பிறிதொரு புறமும் இருக்க இரண்டாம் கட்டப் போராட்டம் இந்த நாடுகளில் தொடர்ந்து நடக்கத்தான் போகிறது. எகிப்தில் அது ஏற்கெனவே துவங்கிவிட்டது என்று அரபுப்புரட்சியின் சமகால நிலை குறித்து விளக்கினார்.

முள்ளிவாய்க்கால் பேரழிவு என்பதன் பின் பிறரை மட்டுமே விமர்சித்துக் கொண்டிருப்பது எனும் அரசியல் முடிவுக்கு வந்துவிட்டது என்றும், அவரவர் தத்துமது அரசியலைத் தெளிவுபடுத்த வேண்டிய காலம் இது எனவும் அவர் இறுதியாகக் குறிப்பிட்டார்.

யமுனா ராஜேந்திரனது உரையைத் தொடர்ந்து மார்க், ரகுமான் ஜான், பரதன், ரட்ணம், ஆதவன், மகாலிங்கம், ஜெயகரன், சுமதி, கற்சுரா, செல்வம், சுல்பிகா. திருமாவளவன், மூர்த்தி போன்றவர்கள் முன்னெடுத்த கலந்துரையாடல் துவங்கியது. உரையாடலில் இருவிதமான கருத்துக்கள் மேலோங்கி இருந்தன. சிங்களப் பெரும்பான்மைக்கு எதிரான விரோத அரசியல் என்பது இனிமேலும் தமிழர்களால் முன்னெடுக்கப்படக் கூடாது என ஒரு பகுதியினரும், சிங்களப் பெரும்பான்மை இனவாத அரசியல் என்பது ஒரு விஷம்போல வரலாற்றில் உறைந்து போயிருப்பதால், தமிழர்கள் இலங்கையினுள்ளும், இலங்கைக்கு வெளியிலும் இலங்கை அரசுக்கு ஜனநாயகபூர்வமான எதிர்ப்பு அரசியலையே தேர்வு செய்யவேண்டும் எனப் பிறிதொரு பகுதியினரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

ஜனநாயகபூர்வமான, அமைதியான சூழலில், மிகுந்த நட்புணர்வுடன், ஆரோக்கியமாக நடைபெற்ற அரசியல் கலந்துரையாடலாக இந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது. நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான அறிமுகவுரையாற்றிய முரளி நன்றியுரை ஆற்ற கலந்துரையாடல் இரவு 09.15 மணிக்கு நிவைபெற்றது.

50 PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE
AVAILABLE FOR RENT
Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.
GTA Square Mall (FINCH & MIDDLEFIELD
தொடர்புகளுக்கு: 416.917.6883

Train to be a ...
Community Service Worker With CO-OP
Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome
Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA
OACC PROUD MEMBER ontario association of career colleges
citiCOLLEGE
You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179
www.CitiCollege.ca
Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
Financial Assistance may be available to those who qualify



# BASEMENT RENT

### MIDDLEFIELD & DENISON
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. All utilities, parking. Close to TTC, plaza & school. Avail. June 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.817.9994

### KENNEDY & FINCH
2 Bedroom bsmt apt. for rent with all facilities. Sep. entrance. Close to TTC, mall, etc. Avail. July 01, 2012.
தொடர்புகளுக்கு: 647.779.3411

### MORNINGSIDE & SHEPPARD
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to bus (24 hrs), Sobey's, Wal-mart. Avail. July 01, 2012.
416.724.9125/647.895.4336

### NEILSON & FINCH
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.282.7436

### SCAR.GOLF CLUB & ELLESMERE
1 Bedroom bsmt for rent. Close to TTC, mall, bank, school. Avail. immediately. Students or முதியவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.303.0832

### MCCOWAN & STEELES
சகல வசதிகளுடன் கூடிய 2 Bedroom bsmt வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to TTC, school. தொடர்புகளுக்கு: 416.919.6196

### MCLEVIN & MORNINGSIDE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.504.5566

### BELLAMY & ELLESMERE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.920.2185

### BIRCHMOUNT & ELLESMERE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to all facilities. Asking $1100. Avail. immediately.
647.716.2951 / 416.754.6713

### MORNINGSIDE & SHEPPARD
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, school, mall, tamil stores. Avail. immediately.
416.724.9125 / 647.895.4336

### MCCOWAN & ELLESMERE
2 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry. Minutes to Scarborough Town Centre, Hwy 401, 2 - 24-hour bus routes. Please no smoking or pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.264.9918

### MARKHAM & LAWRENCE
### MARKHAM & ELLESMERE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.509.5664

### MORNINGSIDE & LAWRENCE
1 Large Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. June 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.994.7849

### BIRCHMOUNT & MCNICOLL
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.783.4850 / 905.294.2674 416.293.6211

### WESTNEY & ROSELAND
2 Bedroom walk-out bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2012.
647.898.6474 / 647.889.3217

### MARKHAM & 14TH AVE.
1 Bedroom bsmt for rent. Sep.entrance. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.894.9122
201 - 1 East Vale Dr.

### SHEPPARD & NEILSON
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2012.
647.857.8011 / 416.284.4717

### MIDDLEFIELD & DENISON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. TTC. Avail. July 01, 2012.
தொடர்புகளுக்கு: 905.201.9901

### MARKHAM & STEELES
1 Bedroom bsmt for rent. Close to all facilities. TTC, YRT. Avail. immediately. No pets. தொடர்புகளுக்கு: 647.701.3316 / 905.472.1370

### MARKHAM & HIGHGLEN
Newly finished bsmt at Middlefield & Highglen. 2 Bedrooms, 1 washroom, kitchen, laundry, Sep. entrance. All necessities within walking distance: high school, public school, mall, banks.
647.287.2807 / 905.554.1931

### MARKHAM & GOLDEN
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. 2 Bedrooms also avail. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.989.6064

### BELLAMY & EGLINTON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.269.0545

### 9TH LINE & 14TH AVE.
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to YRT, mall, bank. Avail. June 01, 2012.
416.305.0264 / 416.613.2754

### NEILSON & MORNINGSIDE
2 அறைகள் கொண்ட Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, laundry. Close to all facilities. விரும்பினால் உணவும் கொடுக்கப்படும். Boys preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.9913

### WARDEN & ST.CLAIR
2 Bedroom, 3 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.693.3107

### LAWRENCE & PHARMACY
Newly renovated 2 bedrooms raised bsmt for rent. Ample sunlight & ventilation throw large windows. Sep. entrance. Big living room, full kitchen & washroom. Close to TTC, school, malls, temples, etc. Affordable rent. Cable with TVI, Tamil one free.
தொடர்புகளுக்கு: 416.285.0428

### MCCOWAN & 14 AVE.
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Closet to YRT, mall. Avail. June 01, 2012. One Room also avail.
தொடர்புகளுக்கு: 416.845.4568

### MIDDLEFIELD & DENISON
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus, YRT, mall, tamil stores. Girls or small family preferred. Avail. immediately.
905.910.9926 / 647.885.1429

### BELLAMY & LAWRENCE
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close TTC, mall. Small family preferred. Avail. Anytime.
416.464.4207 / 416.431.6349

### WARDEN & FINCH
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, hospital. Avail. immediately. Working people or small family preferred.
647.770.9180 / 416.509.5484

### MARKHAM & DENISON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2012.
416.587.2704 / 905. 472.0179

### MEADOWVALE & KINGSTON
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

### MARKHAM & DENISON
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.829.3212 / 416.879.9603

### MORNINGSIDE & MORNINGVIEW
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.648.0257

### MARKHAM & LAWRENCE
2 Bedroom bsmt for rent. Close t TTC, mall, school. Small family preferred. Avail. Anytime.
416.439.1507 / 647.774.5667

### 9TH LINE & 14TH AVE.
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, bank, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.560.4152

### KENNEDY & LAWRENCE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, living room, kitchen. Close to TTC, shopping, winston churchill. Avail. Anytime.
416.551.4419 / 289.244.8555

### MARKHAM & HIGHGLEN
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.939.1529

### SCAR.GOLF CLUB & ELLESMERE
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Utilities included. Close to Centennial College, school, TTC. Rent $700 per Month. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.5078

### McCOWAN & ELSON
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school, mall & Tamil stores. Avail. immediately.
905.471.8615 / 416.951.3457

### NEILSON & FINCH
1 Bedroom bsmt for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.557.5780

### MCCOWAN & ELLESMERE
1 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. 3 bedroom apt. for rent - upper level. Close to TTC, mall. Avail. immediately.
647.706.4922 / 416.522.3314

### MARKHAM & DENISON
2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately. 2 or 3 people preferred.
905.599.1622 / 647.986.8622

### STEELES & 9TH LINE
2 Bedroom bsmt for rent. Available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.931.3444

### MCCOWAN & EGLINTON
2 Bedroom bsmt for rent. Parking, laundry, internet, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.830.7823

### MIDLAND & EGLINTON
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

### FINCH & BIRCHMOUNT
1 Bedroom for rent. Close to all facilities. No Smoking & No pets. Avail. immediately. Another 1 room available. Rent. $325.
தொடர்புகளுக்கு: 416.890.5267

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

## ROOM RENT

**MCCOWAN & FINCH**
1 Room for rent. Close to TTC, mall. Avail. immediately. Students or வயதானவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.929.0539

**MIDDLEFIELD & DENISON**
Rooms for rent. Parking, internet. விரும்பினால் உணவும் கொடுக்கப்படும். Furniture also. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 905.201.9901

**MORNINGSIDE & NEILSON**
1 Master room for rent. Washroom. Close to all facilities. Avail. immediately.
416.267.0072 / 647.210.4292

**KEELE & FINCH**
Furnished room for rent in condo. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.648.1679

**MARKHAM & LAWRENCE**
3 bedrooms for rent. Large living room & kitchen. Close to TTC at door step, shopping, Cederbrea mall, school.
647.706.4881 / 416.439.4076

**WARDEN & FINCH**
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking avail. Close to TTC, shopping, etc. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.495.9775

**KEELE & RUTHERFORD**
One Master bedroom with washroom. 1 Bedroom also avail. Close to all facilities. Avail. immediately. Ladies or young couple preferred.
647.389.9193 / 905.832.2203

**WARDEN & HWY 401**
2 Single rooms in bsmt for rent. Single people preferred. Close to all facilities. Located off Warden Ave. South of Sheppard north of Ellesmere.
தொடர்புகளுக்கு: 416.391.3589

**MARKHAM & ELLESMERE**
One Room for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.566.1918

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.209.8999

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent. Parking, internet, cable உட்பட சகலவசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Avail. immediately.
416.431.9950 / 416.557.7241

**FINCH & WARDEN**
1 Room for rent. Laundry, internet. Close to TTC, shopping mall. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

## ROOM RENT

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**BRIMLEY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Shared kitchen and washroom, sep.entrance, laundry, parking, hydro and cable included. No smoking. Working single male only. Convenient location. Very clean. Rent $350.
தொடர்புகளுக்கு: 416.268.5014

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

## CONDO. FOR RENT

**MCLEVIN & NEILSON**
2 bedroom Condo.வில் 1 bedroom வாடகைக்கு உண்டு. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.896.8388

## CONDO. FOR SALE

**WARDEN & FINCH**
2 Bedroom condo. for sale. Close to all facilities. Avail. August 31, 2012.
647.856.7248 / 416.871.5260

2 Bedroom + 1 washoorm condo. for sale. Less than One year old. Low maintenance. Laminate floor. Asking Price $235,000
தொடர்புகளுக்கு: 647.286.1074

**KENNEDY & EGLINTON**
2 Bedroom + den. condo. for sale. Close to all facilities. Avail. August 01, 2012.
289.232.3119 / 647.201.3924

## HOUSE FOR SALE

**MORNINGSIDE & SHEPPARD**
3 bedroom + 1 Bedroom house for sale. 2 Parking. Close to all facilities. Avail. 60 - 90 days. Price $318, 900. 1200 Sq.ft.
MLS - E2320979
தொடர்புகளுக்கு: 416.970.5533

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் 3 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உள்ளது. நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
தொடர்புகளுக்கு: 416.267.5825

மேலும் பக்கங்கள் 25, 26

## HOUSE FOR RENT

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom main floor for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
416.291.1752 / 416.460.2549

கொழும்பில் New luxury apt. for sale. 3 Bedroom apartment. Mount lavinia beach view. சிறந்த முதலீடு, சிறந்த பாவனைக்கு.
தொடர்புகளுக்கு: 647.880.1416

**MCCOWAN & SHEPPARD**
3 Bedroom house for rent. Close to all facilities. Avail. July 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.554.7114

**MARKHAM & SHEPPARD** சந்திப்புக்கு அருகாமையில் New 3 bedroom town house for rent. Close to school, mall, HWY 401, etc. Avail. June 01, 2012.
தொடர்புகளுக்கு: 647.897.6421

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
3 Bedroom bungalow main floor for rent. $1250 + 65% utilities. Close to all facilities.
**MORNINGSIDE & OLDFINCH**
Bachelor apartment ($550) & 2 bedroom ($900) bsmt for rent. Close to all facilities. No Smoking & No pets. Min. 1 year lease.
தொடர்புகளுக்கு: 416.722.3450

**NEILSON & SHEPPARD**
3 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.282.1095

**SHEPPARD & MORNINGSIDE**
3 Bedroom town house for rent. Close to all facilities. Avail. immediately. Working people preferred.
தொடர்புகளுக்கு: 416.697.2611

**MCCOWAN & ELSON**
4 bedroom House for rent. parking, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.209.0876

## HOUSE SALE BY OWNER

**PICKERING / HWY 401 & BROCK ROAD NORTH**
Brand new3 bedroom + 3 washroom house for sale. Close to all facilities. 1450 - 2000 Sq.ft. Immediate sale.
தொடர்புகளுக்கு: 416.823.3552

## காணி விற்பனைக்கு

வெள்ளவத்தையில் 131/2 perchase காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
416.716.6422 / 647.427.5469

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

## JOB JOB JOB

**வேலைக்கு ஆள் தேவை**
தையல் வேலை தெரிந்த பெண்கள் வேலைக்கு தேவை.
தொடர்புகளுக்கு: 416.751.1337

**MORNINGSIDE & OLD FINCH**
Saree Blouse உட்பட அனைத்து தையல் வேலைகளுக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 647.317.4540

**FINCH & MIDDLEFIELD**
GTA Square இல் அமைந்துள்ள Restaurant ஒன்றுக்கு Cook, Cashier வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.318.9866

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
மேலதிக
தொடர்புகளுக்கு: 647.430.8238

**QUEEN STREET E. & WOODBINE**
Delivery driver & kitchen helper wanted.
தொடர்புகளுக்கு: 647.863.4345

**YOUNG & STEELES**
Pizza Pizza நிறுவனத்திற்கு Delivery driver, Cook, Counter helper ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.457.8263

## HELP WANTED

Kitchen installation, cabinet making ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.297.7800

**FURNITURE விற்பனைக்கு உண்டு.**
3 Sofa, 1 seat sofa, dining table & chairs, double bed, mirror, 3 seat sofa with bed & mattress.
தொடர்புகளுக்கு: 647.346.5584

## SPACE FOR SALE

**ST.CLAIR & VICTORIA PARK**
Restaurant, stores, classes, போன்றவை நடத்தக்கூடிய இடம் விற்பனைக்கு உண்டு.
Price $289,000.
தொடர்புகளுக்கு: 416.454.4466

## RESTAURANT FOR SALE IN AJAX

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Restaurant ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.230.5535
(Leave Message)

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**WARDEN & FINCH**
Condo. வில் சகலவசதிகளுடன் கூடிய ஒரு அறை வாடகைக்கு உண்டு. அருகாமையில் பஸ் வசதியுடன் June 01, 2012 இருந்து வாடகைக்கு விடப்படும்.
**தொடர்புகளுக்கு: 647.402.9490**

# கனடாவில் வாழும் தமிழ் மக்களுக்கு ஓர் முதியோர் இல்லம்

முதியோர் இல்லம் பற்றி சிந்திக்க வேண்டிய காலம் கடந்து போய்விட்டது. 25 வருடங்களாக மாநில நாடாளுமன்ற அங்கத்தவர்களாக வரக்கூடிய சிறுபான்மை யினராகி விட்டோம். கனடாவில் வாழும் ஏனைய சமூகத்தினர் தத்தமது முதியோர் களுக்கென முதியோர் இல்லங்கள் அமைத்து தமது கல்வி கலாச்சாரம் மொழி என்பவற்றை அனுபவிக்க வழி வகுத்துள்ளனர். ஆனால் தமிழர்கள் அரசாங்கத்தால் அல்லது பிரத்தியேகமாக கட்டப்பட்ட இல்லங்களில் பல சமூகத்தினருடனும் ஒன்றாக வாழ்கிறார்கள்.

இலங்கைத் தமிழருக்கு சமூக உணர்வு இல்லையோ சுயநலமிகளாகத் தத்தம் பெயரையும், புகழையும் வளர்த்துக் கொள்வதில் தான் தம் சிந்தனையை வளர்க்கிறார்களோ எனும் ஐயம் எழுகிறது. தாரளமாக நன்கொடை செய்கிறார்கள். சில நிறுவனங்களுக்கோ தனிநபர் ஸ்தாபனங் களுக்கோ அள்ளியள்ளி வழங்குகிறார்களே தவிர சமூகத்தேவைகளைப் பொறுப்பெ டுத்துச் செய்ய உத்வேகம் கொள்வாரிலர்.

இதற்கு மாறலாக ஒரு பெண் ஒன்பது வருடங்களுக்கு முன்பே சிந்தித்து, துணிச்சலோடு தமிழ் பெண்களுக்கான ஒரு முதியோர் இல்லத்தை ஆரம்பித்து இருந்தார். இந்திராணி நாகேந்திரா எனும் அந்த சமூகசேவகி 'வில்லா கருணா' எனும் முதியோர் இல்லம் ஒன்றை நடத்தி வருகிறார். கருணை மிக்க ஸ்தாபனங்களின் நன்கொடைகளால் மட்டுமே அவ்வில்லம் நடைபெற்று வருகிறது. அரச உதவியோ அறக்கட்டளை மூலமோ எதுவித உதவியும் கிடைப்பதில்லை.



'வில்லா கருணா' எனும் இந்திராணியின் ஒன்பதாவது வருடாந்த விழா சென்ற மே மாதம் 5ஆம் திகதி சித்திராபௌர்ண மியன்று வின்சன்ட்சேர்ச்சில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் தாய்மார் களுக்கான பிதிர் கடன் செய்ய உகந்த தினம். ஆகையால் இந்துக்களின் (Mother's Day) அன்னையர் தினம் என நாம் கருதலாம்.

அன்னையர் தினம் எனக் கூறப்படும் அந்த நன்னாளில் இந்திராணி எனும் தாயாரால் அமைக்கப்பட்ட முதிய தாய்மார்களுக்கான இல்லத்தின் வருடாந்த சந்திப்பு நடந்தது மிகமிகப்பொருத்தமானதாகும். பிரதம விருந்தினராக 80 வயதான ஒரு மூதாட்டி யும் கௌரவவிருந்தினராக இரு பெண்களும், சாமி அப்பாத்துரை அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். நன் கொடை வழங்குபவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கும் முகமாகவே இசையரங்கு ஒன்று நட்சத்திர அரங்காக பரிணமித்துக் கொண்டிருந்தது.

இந்திராணி அவர்களின் தீர்க்க தரிசனம் போல் யாருமே சிந்திக்காத வகையில் முதியோர் இல்லத்தை ஆரம்பித்தது வியப்புக்குரியது. இந்தவகையில் ஆண் களுக்கான ஒருதனி இல்லம் தமிழருக்கென அமையாதது விசனத்தைத் தருகிறது. தேவையானது பணம் மாத்திரமல்ல. சமூகசேவையுணர்வும் அபரிமிதமாகத் தேவைப்படும். ஆனால் ஆண்களுக்கே பொறுப்பெடுக்கத் தயக்கமோ?

என்ன செய்வது சிவன் கண்மூடிமௌனமாக இருக்க, வல்லமை பொருந்திய சக்தியே உலகத்தை ஆள்கிறாள் அல்லவா? இந்திராணி அவர்கள், நான்கு பேரோடு மட்டும் தொடங்கிய 'வில்லா கருணா' வின் அதிபதி ஆவார். அங்கே வேலை செய்யும் ஆட்களுக்கு வேதனம் கொடுக்கும் நிலையில் வளம் போதாத காரணத்தால் தம் குடும்பத்தவருக்கே தேவையான பயிற்சி கொடுத்துத் தாதிமார் தகுதியைக் கொடுப்பித்தார். அவரது சகோதரிகள், மகன்மார் மூவர், தாயார் அவர்கள் ஏற்ற பயிற்சிகள் பெற்று மிகக்குறைந்த வேதன



**- குறமகள்-**

தொடர்ச்சி 37ஆம் பக்கம்


# BRIMLEY PLAZA

(BRIMLEY & SHEPPARD)

**SPACES FOR RENT**

*Retails And Offices*




300sq.ft To 4000sq.ft

Units are Available

**Contact**

K. Ganesh: 647.998.9467

K.Peran : 647.405.9900

E - Mail: ganeshmail@hotmail.com

2101 Brimley Road # 207, Scarborough, ON, M1S 2B4.

(BRIMLEY & SHEPPARD)

## MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at *Scarborough & Stouffville*

***Contact: 647.340.9490 / 647.831.0363***

## TUTORING

By tutor experienced at colombo schools, university & technical college.

- Math 6 - 12, • Physics, Data Management
- Computer Training
- Web Design & Development

Use computer program to manage bills, payments, reminders, birthdays etc.

Contact: 416.706.1654

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**ProWin Computers.**
2383 Eglinton Ave. East
(Wind Mobile Store) Kennedy & Eglinton
416 - 879 7489 / 647 - 340 5568

## MATH, SCIENCE & PHYSICS TUTORING

**Dedicated and excellent Classes for following Courses**

- **Math (G8-G11), Science (G9- G10), IB Maths**
- **Adcanced Function, Calculus and Vectors,**
- **Data Management, Physics (11,12)**
- **University Courses**

**Contact : Indran Master M.Sc , PhD 416 289 9359**

## திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
416.992.8782 / 905.472.8533

## BUSINESS FOR SALE

***MCCOWAN & EGLINTON***

Grocery Store ஒன்று விற்பனைக்கு உள்ளது. 1160 Sq.ft. Avail. immediately.
416.438.6959 / 416.278.5334

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட விவாகரத்தான 36 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.831.4772

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 28, 30 வயது மணமகன்களுக்கு கனடாவில் Sponser செய்யக்கூடிய மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.894.6244

## HAND CAR WASH

Professional Auto detailing, interior / exterior, wash & vacuum, interior shampoo, detailing, etc.15 Years experience.
416.757.8200 / 647.831.2709
WebSite: www.grandcarwash.ca

## CK TUTORS

**Reach For The Top!**

Tutoring available for any Subject, for any grade.

- *Functions*
- *Advance Functions*
- *Calculus & Vectors*
- *Data Management*
- *University (1*year) and College Math*



**Contact:**
**647.628.6494**
**647.350.3956**

**Tutoring Locations:** ***McCOWAN & SHEPPARD***
***BRIMLEY & EGLINTON***

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து Toronto வில் வேலை பார்க்கும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.918.5520

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 416.832.1359


மேலும் பக்கங்கள் 24, 25


வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும்.
Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

## மணமகன் தேவை

கனடாவில் அரசாங்கத் தாபனம் ஒன்றில் நிரந்தர பணியாற்றும், விவாகமாகி குறுகிய காலத்தில் விவகாரத்து பெற்ற 30 வயது பிராமணப்பெண்ணுக்கு கனடாவிலோ, அமெரிக்காவிலோ பொருத்திமான மாப்பிள்ளை தேவை.
தொடர்புகளுக்கு: maha78@live.com


## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழகாட்டும் பரிசுத்த ஆவியே. உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதிற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெறவேண்டுகின்றேன். உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்து மூன்று நாட்களுக்கு இச் ஜெபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும் இச் ஜெபத்தை பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும். **"ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி"**

**ஆமென்**


## மணமகன் தேவை

1985 இல் பிறந்த பல்கலைக்கழகப் பட்டதாரியான 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு ரொரன்ரோவில் படித்த வேலை புரியும் நற்குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புகளுக்கு: விளம்பரம்
***5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA***

## மணமகள் தேவை

வன்கூவரில் அரசாங்க நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பிராமண குல 33 வயது ரேவதி நட்சத்திரம் சாதகத்தில் பாவம் குறைந்த மணமகனுக்கு நல்ல மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: விளம்பரம்
***5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA***

**BUY, SELL or LEASE**

**Dinesh Jeganathan**
**Sales Representative**



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
**31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6**
**each office independently owned and operated*
*** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.*

# டிசெம்பர் 21, 2012 இல் உலகம் அழியாது!

டிசெம்பர் 21, 2012ல் உலகம் அழியும் என்றொரு புரளியைச் சிலர் ஏற்படுத்தியுள்ளனர். ஏறக்குறைய புவியின் மாந்தர் அனைவருமே இப்புரளியால் ஏதோவொரு வகையில் கிலி கொண்டுள்ளனர் என்பது உண்மை. நாள் நெருங்க நெருங்க அதன் வீரியம் கூடிக் கொண்டே போகின்றது. விஞ்ஞான விளக்கங்கள், ஞானிகளின் தரிசனவெதிர்வு கூறல்கள், மதங்களின் வழியேயான விளக்கங்கள. என்பனவற்றை ஆதாரம் காட்டி உலக மக்களைத் தேவையில்லாப் பயத்துள்தள்ளி விட்டார்கள். அப்பயமுறுத்தல்களில் உள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டி, தேவையில்லாப் பயத்தினை அகற்றுவதே இக்கட்டுரையின் நோக்கம். மத்திய, தென் அமெரிக்க பகுதிகளில் வாழ்ந்த 'மாயன்' என்ற இனத்தவர்களின் நாட்காட்டி, அக்குறிப்பிட்ட நாளுடன் முடிவடைகிறது என்பதை யாரோ அறிந்து அதனை வெளியிற் கூற அதுவே இப்பயப்பிராந்தியை ஏற்படுத்தியுள்ளது. மாயன் இனத்தினர் ஒருவருமே இன்று இல்லை. மாயன் இனத்தவர்கள் திரிபடைந்த நிலையில் இன்றும் வாழுகின்றார்கள் எனச்சிலர் கூறினாலும் அது முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படாதது. கி.பி. 9ம் நூற்றாண்டின் பின்னர் அவர்கள் பூவுலகில் வாழ்ந்ததாக அடையாளம் ஏதும் இல்லை. அவர்களது மொழியை அறிந்தவர்கள் எவருமே இல்லை. எப்படித்தான் அவர்களது நாட்காட்டியை வாசித்து விளங்கப்படுத்தினாலும் அதன் உண்மைத் தன்மை எவ்வளவுக்கு இருக்கும் என்பது கேள்விக்குறியே!

கி.மு. 3114 ஆகஸ்து 11ல் ஆரம்பித்த நாட்காட்டியில் முடிவடையும் நாளாக டிசெம்பர் 21, 2012 உள்ளது. உண்மையில் மாயன் நாட்காட்டியில் காட்டப்பட்டிருக்கும் இறுதிநாளான டிசெம்பர் 21, 2012, ஒரு சுழற்சி முற்றுப் பெறும் நாள். அதன் பின்னர் இன்னொரு சுழற்சி ஆரம்பமாகும். இது எப்படியெனில் கிட்டத்தட்ட எம்மவர்கள் கூறும் யுகங்களை ஒத்தது. மாயன்களின் அடுத்தயுகம் அதன் பின்னர் ஆரம்பமாகலாம். சில ஆய்வாளர்கள் மாயன் யுகம் கூட, அன்று முடிவடையவில்லை. அதன் பின்னரும் தொடரும் என்கிறார்கள். ஏனோ பலர் இதனைக் கவனிக்கவில்லை. இதில் எம்மவர்களுடன் ஒன்றிக்கக் கூடிய ஒரு விடயமும் உள்ளது. இந்த மாயன் நாட்காட்டியின் ஆரம்பம் கிட்டத்தட்ட இந்துக்களின் கலியுகத்தின் ஆரம்பத்துடன் ஒத்துள்ளது. இந்துக்களின கலியுகத்தினது காலம் 432,000 ஆண்டு என்கிறார்கள் அப்படியாயின் கலியுகம் முடிவதற்கு இன்னமும் எவ்வளவு காலம் உள்ளது? இதன்படி, டிசெம்பர் 21, 2012க்கும் உலக அழிவிற்கும் சம்பந்தமே இல்லை. ஏனெனில் கலியுக முடிவில், அதுவும் கண்ணனின் வருகையுடன்தான் உலகம் அழியும் என்கிறார்கள். கண்ணனும் வந்ததாகத் தகவல் இல்லை. பின்னர் ஏன் பயப்பட வேண்டும்? கதிரவன், சந்திரன், வெள்ளி என்பவற்றின் சுழற்சிகளை மையப்படுத்தி அமைக்கப்பட்ட நேர்த்தியான வானியல் விபரங்களைக் கூறுவது, மாயன் நாட்காட்டி என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. மாயன் நாட்காட்டியில் காட்டப்பட்டுள்ள சூரிய, சந்திர கிரகண நாட்கள் அச்சொட்டாகச் சரியாக இருப்பதால் இந்த மாயை தோன்றியதோ என்னவோ! ஆனால் மாயன்கள் இதனை உலக முடிவுநாளாக எந்த இடத்திலும், எந்த வகையிலும் குறிப்பிடவில்லை. அப்படியிருக்க நாம் தேவையில்லாது பயப்படலாமா?




கிறிஸ்தவர்களின் விவிலியத்தில் வெளிப் படுத்திய சுவிசேசத்தின்படி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் பின்னர்தான் உலகம் அழியும். அதிலும், இயேசு வருவதற்கு முன்னராக அந்திக் கிறிஸ்து எனும் ஒருவனின் கொடூர ஆட்சி உலகில் இருக்கும். ஆனால் அந்திக் கிறிஸ்து என்பவன் இப்போது உலகினரை ஆளுவதாக எனக்குத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரிகிறதா? அல்லாமலும் வெளிப்படுத்திய சுவிசேசத்தின்படி, இயேசுவின் இரண்டாம் வருகையின் பின்னர் 1000 ஆண்டு கால நல்லாட்சி உலகில் நடைபெற வேண்டும். இப்படியிருக்கையில் எப்படி இந்த டிசெம்பர் 21. வேண்டாம் யோசிக்கவே தேவையில்லை.

நியூட்டன் என்றொரு பெரிய விஞ்ஞானி, நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர்கள் 17ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். (புவி) ஈர்ப்பினைக் கண்டுபிடித்தவர், வெள்ளொளியின் ஏழு நிறக் கலப்பினை அம்பலப்படுத்தியவர். ஆழமான கணக்கர். தூயகணிதத்தை உலகிற்குத் தந்தவர். கட்டைப் பிரமச்சாரியான அவர் விவிலியத்தை ஆய்வு செய்து பல விடயங்களைக் கூறியவர். எடுத்துக் காட்டாக, இஸ்ரவேலர் எப்போது இஸ்ரவேலுக்குத் திரும்புவார்கள், எப்போது அவர்களுக்கு அவர்களது நாடு கிடைக்கும், எப்படிக் கிடைக்கும் என்பதெல்லாவற்றையும் துல்லிய மாக 17ம் நூற்றாண்டிலேயே கூறியவர், அவரும் உலக முடிவுநாளை கணித்துப் பார்த்திருக்கின்றார். அவரின் கணிப்பின்படி, உலக அழிவானது... டிசெம்பர் 21, 2012 க்குக் கிட்டவாகக் கூடக் காட்டவில்லை. அப்ப எப்ப எனக் கேட்கிறீர்களா? நான் அதைக் கூறமாட்டேன். அறிவியல் விபரங்கள் சில கூறப் போகையில், ஒருமுறை இப்படிக் கூறுகிறாகள், அப்படிக் கூறுகிறார்கள், ஆனால் பயப்படவேண்டாம் எனக் கூறியும் பட்டபாடு! போதுமடா சாமி.

ஏட்கர் கேசி, நொம்ஸ்ரடாம் போன்ற ஞானிகளின் எதிர்வு கூறல்களில் உள்ள சிக்கல் என்னவெனில், இவர்கள் இப்படிக் கூறினார்கள். அப்படியே நடந்தது எனச் சம்பவங்கள் முடிந்ததின் பின்னர்தான் குறிப்பிடுகிறார்கள். ஏட்கர் கேசி அப்படி யொன்றும் நாள் குறிப்பிட்டு உலக அழிவி னைக் கூறவில்லை. உலக அழிவின்போது என்ன என்ன நடக்கும் எனத் தனது உறக்க நிலைக் கூற்றுக்களாகக் கூறியிருக்கிறார். விளம்பரம் பத்திரிகை இந்த ஆண்டின் முதலாவது இதழில் துறையூரானின் அழகான உலக அழிவுதினம் பற்றிய கட்டுரையில் நொம்ஸ்ரடமின் கூற்றுக்கள் பற்றிய விளக்கத்தினை அழகாகக் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, நொம்ஸ்ரடமின் பாடல்களின் தெளிவின்மை, பொழிப்புரைகள் பற்றிய சிக்கல்கள். இன்னொன்று விசமிகளின் இடைச்செருகல்கள். ஹிட்லர் கூட, முழு உலகையும் ஹிட்லர் என்பவன் ஆளுவான் என நொம்ஸ்ரடாம் கூறியிருப்பது போன்ற கவிதைகளை, நொம்ஸ்ரடாம் எழுதிய மாதிரியே எழுதிப் புகுத்தியதாக கூறுகின்றார்கள். எனவே எதிர்கால எதிர்வுகூறலாளர்களின் கூற்றுக்கள் கூட எப்படி நம்பக் கூடியதாக இருக்கும்? பொதுவாக, எல்லாச் சமயங்களுமே உலக அழிவினைக் கூறுவதாகத் தெரிகிறது. ஆனாலும் அதனைத் தேவ இரகசியமாகவே குறிப்பிடுகிறார்கள். அப்படியிருக்க, இந்த மாயன்கள் மட்டும் எப்படி சரியாக உலக அழிவு நாளினை அறிந்திருப்பார்கள்? அதிலும் அத்தினத்தில் அவர்களே இல்லாதிருக்கும் போது? உலக அழிவினைத் தெரிந்த மாயன்கள், தமது அழிவினைக் கூட அறிந்திருப்பார்களே! அப்படியாயின் அவர்களுக்கு அதில் ஏன் அதிக அக்கறை? எனவே, உலக அழிவுநாள் டிசெம்பர் 21, 2012 என்பதில் எங்கேயோ இடிக்கிறதல்லவா? உலகியல் வாழ்வில் இரண்டு பக்கங்கள் உண்டு. மெய்ஞ்ஞானப் பக்கமாய் உலக அழிவில் இருந்து தப்பினாலும், விஞ்ஞானம் கூறுகிறதே டிசெம்பர் 21, 2012ல் உலகம் அழியப் போகிது என்று! அதற்கு என்ன கூறுகிறாய் எனச் சிலர் கேட்பதும் எனக்குத் தெரிகிறது. விஞ்ஞானிகள் கூறுகின்ற விளக்கத்தின்படியும் இதனைக் கொஞ்சம் அலசிப் பார்ப்போமே! அடுத்த தடவையில் பார்ப்போமா? சரி, அடுத்த தடவையில் பாத்தால் போச்சு. எப்படியாயினும் பாதிக் கவலை தீர்ந்திருக்கும், அடுத்த தடவை இன்னமும் நல்ல சேதிகளுடன் வருகிறேன்.

தொடரும்...



– கனி –
416.261.1348
leptons@hotmail.ca

## நூல்கள் இங்கே கிடைக்கும்

- **எம்மை நாம் பாதுகாப்பது எப்படி** - மருத்துவ கைநூல் - Dr. கோபால்
- **நினைவாற்றல்** - அகணி
- **கூதிர்காலக் குலாவல்கள்** - குறமகள்
- **ஆளுமை வளர்ச்சிக்கு பிரார்த்தனைகள்** - லலிதா புரூடி
- **வேற்றுக்கிரக மனிதர்கள்** - கனி விமலநாதன்
- **புவி ஈர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள்** - கனி விமலநாதன்



கிடைக்கும் இடம்: விளம்பரம் பப்ளிகேஷன் இங்.
5215 Finch Ave, E, #201
Scarborough, ON M1S 0C2
தொடர்புகளுக்கு : 416.282.8059



YARL WINDOW
BLINDS & DRAPERY
Since 1991
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORMWOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
CALL: N. SELVAM
We have experience to make your home more beautiful
Tel: 416.806.5397
905.201.7733



# உலகின் ஒடுக்கப்பட்ட...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

நான் மட்டுமல்ல எனது தலைமுறை இளைஞர்கள் அனைவரும் கட்சி பேதமற்று ஈழவிடுதலையின்பால் ஈர்க்கப்பட்டோம். ஈழவிடுதலையோடுதான் தமிழகத்திற்கு சே குவேரா, ஜெனரல் கியாப் போன்றவர்கள் அறிமுகமானார்கள். ஆயுதவிடுதலைப் போராட்டம் என்பது புரட்சிகரப் போராட்டத்தின் உச்சபட்ட வடிவம் அல்லவா? தமிழன் என்கிற இனம் சார்ந்த அடையாளத்திற்கும் முதலாக உலகின் ஒடுக்கப்பட்ட மக்களது போராட்டத்தின் பகுதியாகவே நான் ஈழ விடுதலைப் போராட்டத்தினைப் பார்த்தேன். அன்றும் இன்றும் இதுவே எனது நிலைபாடு.



தமிழன் என்பதற்கு இன்று நிறைய வரையறைகள் முன்வைக்கப்படுகின்றன. இப்படியான வரையறைகளின்படி தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் பிறிதொருவரை தமிழன் இல்லை என்று சொல்லிவிட முடியும். வை.கோபாலசாமி ஆதாரத்தில் தெலுங்கு மொழி பேசுபவர். நான் வாழ்ந்த கோவை மண்ணிலும் கணிசமானவர்கள் தெலுங்கு மொழி பேசுபவர்கள். நானும் இந்த வேரிலிருந்து வந்தவன்தான். தமிழகத்தில் இன்று நாற்பது இலட்சம் மக்கள் ஆதாரத்தில் தெலுங்கு மொழி பேசுபவர்கள். இவர்களுக்கு தெலுங்கு எழுதவோ படிக்கவோ தெரியாது. வீட்டில் மட்டும் நெருங்கிய உறவுகள், உறவினர்க்கிடையில் தெலுங்கு பேசிக் கொள்வார்கள். எனது அடுத்த தலைமுறையினர் அநேகமாக தெலுங்கைப் பேசுவது கூட இல்லை. எனது துணைவியாருக்கு தெலுங்கு பேச மட்டுமே தெரியும். என்னால் ஆற்றொழுக்காகத் தெலுங்கு பேசமுடியாது. மேற்கில் வாழும் எனது ஏழு வயது மகளுக்கும் நான்கு வயது மகனுக்கும் தெலுங்கு தெரியாது. நான் கற்பிக்கவும் முயற்சி செய்யவில்லை. தமிழ் கற்பிக்கவே முயற்சி செய்கிறேன். கல்வி, வாசிப்பு, எழுதுதல், வாழும் சூழல், சிந்தனை, பண்பாடு அனைத்திலும் தமிழகத்தில் வாழும் ஆதாரமான தெலுங்குமொழி பேசுபவர்கள் தமிழர்கள்தான். தமிழ் வாழ்வுதான் அவர்களது வாழ்வு. தமிழகத்தில் வாழும் தெலுங்குமொழி பேசுவோர் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு தெலுங்குமொழி மண்ணோடு தொடர்பு கொண்டிருந்தவர்கள்தான் என்றாலும், இன்றைய நிலையில் ஆந்திராவுக்கும் தமிழகத்தில் வாழும் தெலுங்குமொழி பேசுகிற மக்களுக்கும் எந்தவிதமான ஒட்டுமில்லை உறவுமில்லை. தமிழை பூர்வீக மொழியாகக் கொண்டிராத வை.கோபாலசாமி, கி.ராஜநாராயணன், ஈ.வே.ரா.பெரியார், சுப்ரபாரதி மணியன், விட்டல்ராவ் போன்றவர்களது மரபில் வந்த தமிழன் நான். ஒருவர் வாழும் சூழலும் அவன் சிந்திக்கும் மொழியும்தான் அவனது அடையாளம். தமிழ் எனது இருத்தலுடனும் சிந்தனையோடும் உடலோடும் கலந்தது. எனக்கு மிக அத்யந்தமான தமிழன் எனும் இந்த உணர்வு என்பது, ஈழப் போராட்டத்தின் பாலான எனது ஈடுபாடு என்பது, ஈழ தேசியத்தை சோசலிச சமூகம்நோக்கி நகர்த்தும் எனும் அந்த மனிதவிமோசனம் சார்ந்த நம்பிக்கையில் இருந்தே தோன்றுகிறது.

முள்ளிவாய்க்கால் மரணங்கள்.. இதனைத் தொடர்ந்து வரும் சம்பவங்கள். உங்கள் பார்வை என்ன? இலங்கைத் தமிழ் மக்களுக்கு உரிய நியாயம் கிடைக்குமா? நாடு கடந்த தமிழீழம் போன்ற முயற்சிகள் சாத்தியாமானவையா?

முள்ளிவாய்க்கால் மரணங்கள் மட்டுமல்ல, ஈழ விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு அனுபவங்கள் நாம் வாழும் உலக நிலைமையில் தனித்த நிகழ்வுகள் அல்ல. குர்திஸ் விடுதலை இயக்கத்தின் தலைவர் அப்துல்லா ஒச்சலான் இம்ராலியில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். பெரு சைனிங்பாத் இயக்கத் தலைவர் தனிமைச் சிறையில் இருக்கிறார். கொலம்பிய பார்க் விடுதலை இயக்கத்தலைவர் அல்பான்சோ கெனோ சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இந்திய நக்ஸலைட் இயக்கத் தலைவர் கிஸன்ஜி சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இவர்கள் அனைவரும் ஆயுதப் போராட்டங்களின் தலைவர்கள். இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டதிலும் சிலர் கொல்லப்பட்டதிலும் இவர்களது தந்திரோபாயத் தவறுகள் மட்டும் இல்லை. மாறிவரும் உலகத்தில் இவர்களது தந்திரோபாயத்தின் செயல் எல்லைகள் வளர்ந்து செல்வது சாத்தியம்தானா என்ற கேள்வியோடு சம்பந்தப்பட்ட பிரச்சினை இது. ஈழவிடுதலையின் எதிர்கால திசைவழி குறித்து நிதானமாக சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டிய தருணம் இது. இதுவரை உலக விடுதலைப் போராட்ட அனுபவங்கள், 1989 மற்றும் 2001 என மாற்றப்பட்ட உலக அரசியல் வரைபடம் என இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டு ஈழவிடுதலைப் போராட்டத்தை நாம் அணுகவேண்டும். துரதிருஷ்டவசமாக நான் கடவுள், மற்றவன் சாத்தான் என நிலைநாட்டுவதும், பகடிப் பின்னூட்டங்களும்தான் இங்கு விமர்சன மரபாக இருக்கிறது. சுயவிமர்சனம் எனும் கருத்தாக்கமே இங்கு கொச்சையாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

யமுனா ராஜேந்திரன் சுமார் 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். உலக அரசியல், லத்தீன் அமெரிக்கா, சினிமா, மார்க்சிய விமர்சனம் போன்ற துறைகளில் இவரது நூல்கள் வெளிவந்துள்ளன. புலம் பெயர் தமிழராக இலண்டனில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றார். கோயம்புத்தூர் இவரது பிறப்பிடம். அண்மையில் ரொரண்ரோவில் நடைபெற்ற தமிழியல் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த இவர் விளம்பரத்துக்காக பிரத்தியேகமாக அளித்த பேட்டி இது.

அரசியல் என்பது இயற்கை விஞ்ஞானம்போன்று சூத்திரங்களால் ஆனது அல்ல. இது சாத்தியங்களின் கலை. தமிழர்களுக்கு எது உரிமை, எது நியாயமான தீர்வு என்பதற்கே கூட தமிழ்சமூகத்தின் உள்ளேயே ஜனநாயக மரபு வளர்த்தெடுக்கப்பட வேண்டி இருக்கிறது. தனிநபர்களால் தலைமை தாங்கப்படுகிற ஆயுத இயக்க அரசியலாயினும் சரி, ஆயுதமற்ற கட்சி அரசியலாயினும் சரி, கூட்டு முடிவு, வெகுமக்களினுடனான ஊடாட்டம் என்பது அல்லாமல் ஒரு சமூகம் ஜனநாயகப்படுதல் என்பது முடியாது. இலங்கைத் தமிழ் மக்கள் ஒரு மக்கள் கூட்டமாக ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள், ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு நூறு நூறு வரலாற்றுச் சான்றுகள் குவிந்து கிடக்கின்றன. இதிலிருந்து மீட்சி கிடைக்குமா என சந்தேகம் எழுப்புவதனைவிட, மீட்சி கிடைப்பதற்கு என்ன வழியைத் தேர்வது என்பதுதான் இன்று முக்கியம்.

வேறுபட்ட பார்வைகள் இருப்பினும் இன்று ஈழநிலத்தில் யதார்த்த அரசியல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயல்பாடுகளில்தான் தங்கியிருக்கிறது. புகலிடத்தில் சாத்தியமான அரசியல் மனித உரிமை அரசியல்தான். இது அழுத்த அரசியலாக மட்டும்தான் இருக்க முடியும். நாடு கடந்த தமிழீழ அரசு அதனைத்தான் இங்கு செய்ய முடியும். அதனை அவர்கள் செய்கிறார்கள். ஒரு ஜனநாயக அரசியலில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் அரசியல் ஒரு முனை எனில், அதனது மறுமுனைதான் நாடு கடந்த தமிழீழ அரசியல் எனவே நான் கருதுகிறேன். உண்மையில் தமிழர்கள் இன்று தேடவேண்டிய அரசியல், பிறரது அரசியல் உரிமைகளை அங்கீகரித்துக் கொண்டு, சதா பிறரை விமர்சித்துக் கொண்டிருக்காமல், அவரவர் அரசியலை முழுமையாகக் கண்டடைய முயற்சிப்பதுதான். முள்ளிவாய்க்காலின் பின்னான கால அரசியல் பிறரைக் குற்றம் சுமத்திக் கொண்டிருப்பதில் மட்டும் முழுமைபெற்றுவிட முடியாது.

**தொடரும்...**


## தமிழ்-ஆங்கில நாவல்களில் ஈழ அரசியல்

**யமுனா ராஜேந்திரனின் ஆய்வுரை**

சனிக்கிழமை 19-05-2012, மாலை 3:00-6:00
**May 19th, 2012 - 3:00 P.M to 6:00 P.M**

**Scarborough Civic Centre**
150 Borough Drive
(North-west corner of McCowan Road and Ellesmere Road)
Toronto, ON M1P 4N7

அனைவரையும் தோழமையோடு அழைக்கின்றோம்!

TAMIL RESOURCE CENTRE
தமிழர் வகைதுறைவள நிலையம்
www.trcto.org thedakam@gmail.com facebook/trc thedakam

**Professional Pest Control**
Elimination of Roaches & Mice
Call Kanthan :
416-895-4283 / 416-291-3997



- Cockroaches
- Rats & Mice
- Wasps & bees
- Birds
- Ants & Spiders

**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***

# ஒப்புவமை இல்லா...

22ஆம் பக்கத்தொடர்ச்சி



- வழிப்போக்கன் -

அதற்கு பிடிக்காது. அதேசமயம் எந்திரப் படகின் சப்தம் கேட்டால் அவை மிரண்டு ஓடிவிடும். எடப்பாளையம் மற்றும் மணக் காவலா ஆகிய இரண்டு இடங்களையும் சேர்த்து இந்த வன விலங்கு சரணாலயத்தில் இரண்டு காட்சிக் கோபுரங்கள் உள்ளன. இப்பகுதியில் வனத்துறையால் நடத்தப்படும் டிரெக்கிங்கும் பிரசித்தி பெற்றது. பெரியாறு பிராந்தியத்தில் ஐந்து வகை தொல்குடிகள் வாழ்கிறார்கள். நீங்கள் காணச் சுற்றுலா செல்லும்போது தொல்குடி அருங்காட்சியகத்தில் மரபான தொல்குடி மீன்பிடிப்பு உபகரணங்கள், வேட்டைக்கருவிகள் மற்றும் அவர்கள் பயன்படுத்தும் மூலிகைகள், போன்றவற்றைக் கட்டாயம் பாருங்கள். அதோடு சுமார் 2 மணி நேரம் நடக்கும் தொல்குடி பரம்பரையினரின் கலை நிகழ்ச்சிகளையும் கண்டு களிக்கலாம்.

(நுழைவுக் கட்டணம்: ரூ.100. நேரம்: காலை 9 மணி முதல் மாலை 5 வரை.)

தேக்கடி பகுதியை ஒட்டியிருக்கும் நகரமான குமுளி சந்தைக்கு மிக பிரசித்தி பெற்றது. தேக்கடி வனப்பகுதியில் கிடைக்கும் வாசனைப் பொருட்கள் எல்லாம் இங்கேதான் விற்பனை செய்யப்படுகின்றன. தேக்கடியில் இருந்து 4 கி.மீ. தூரத்தில் இருக்கிறது குமுளி. குமுளியில் இருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ளது செல்லார் கோயில் என்ற அமைதியான கிராமம். இங்கே இருந்து கீழே பார்த்தால் நாட்டுப்புறக் காட்சிகளின் அழகு தெரியும். அலை அலையாகக் கொட்டும் அருவிகள், நமது கண்களுக்கு விருந்து. இந்தக் கிராமத்தின் கீழ் புறத்தில்தான் தமிழ்நாட்டைச் சேர்ந்த தென்னந் தோப்புகளுக்குப் புகழ் பெற்ற கம்பம் இருக்கிறது. குமுளியில் இருந்து 5 கி.மீ. தொலைவு சென்றால் போதும், ஓவிய வண்ணமாய் தோற்றம் தரும் பாண்டிக்குழி வரும். இங்கு, பூக்களும் கனிகளும் பொங்கிப் பூரித்துக் கிடக்கும். இவைகளோடு சோலாறு கோயிலுக்கும் தமிழக எல்லைக்கும் இடையே சலசலத்து ஓடும் நீரோடைகளும் சேர்ந்து பாண்டிக்குழியை பிரபலமான சுற்றுலா இடமாக ஆக்கியுள்ளன. புகைப்படக்காரர்கள் இந்த இடத்தைக் கண்டால் திரும்பி வர விரும்ப மாட்டார்கள். இங்கும் மலை ஏற்றம் செய்யலாம்.

காடுகள், மலைகளில் நடந்து ரொம்பக் களைத்திருப்பீர்கள். கொஞ்சம் இளைப்பாறலாம். இளைப்பாறும் நேரத்தில் உங்கள் மூளைக்கு ஒரு சின்ன வேலை. முல்லைப் பெரியாறு அணை போலவே, தமிழகத்துக்கும் கேரளத்துக்கும் இடையே தீராத பிரச்னையாக இருக்கும், இன்னொரு அழகிய இடமும் தேக்கடியில் உள்ளது. அந்த இடம் எதுவாக இருக்கும் என கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

அடுத்த இதழில் அந்த இடத்துக்குப் போவோம்....

## எப்படி போவது, எங்கே தங்குவது?

தமிழகத்தில் தேனியில் இருந்து 64 கி.மீ. தூரத்தில், தமிழக - கேரள எல்லை நகரமான குமுளி அமைந்துள்ளது. இங்கிருந்து 4 கி.மீ. தொலைவில் தேக்கடி உள்ளது. மதுரை, கம்பம் பகுதிகளில் இருந்து நேரடியாகவே தேக்கடிக்கு பஸ் வசதி உள்ளது. குமுளியில் இருந்து ஆட்டோ மற்றும் ஜீப்புகளும் செல்கின்றன. இயற்கை எழிலை ரசிக்க விரும்பும் சுற்றுலாப் பயணிகள், குமுளி - தேக்கடி இடையேயான 4 கி.மீ. தூரத்தை வனப்பகுதி வழியே நடந்தே செல்கின்றனர். கேரளத்தில் இருந்து வருபவர்கள் திருவனந்தபுரத்தில் இருந்து பேருந்தில் வரலாம். குமுளியில் நல்ல தங்கும் விடுதிகளும் உணவகங்களும் உள்ளன.

## பாக்ஸ்

கேரளா பெயர்க் காரணம்! கடவுளின் அவதாரமான பரசுராமன் தனது மழுவை விசி எறிந்து உண்டாக்கிய நாடு கேரளம் என்று புராணம் கூறுகிறது. ஆகவேதான், இதைக் 'கடவுளின் நாடு' என்று அழைப்பது மரபு. இருந்த போதிலும் தென்னை மரங்கள் நிறைந்த நாடு என்பதை அடிப்படையாகக் கொண்டே கேரளம் என்ற பெயர் வந்துள்ளது என்றும் சொல்கிறார்கள். வரலாற்று முறையாகப் பார்த்தால், மூவேந்தர்கள் என்று குறிக்கப்படும் தமிழ் வேந்தர் மரபில் முதலிடத்தை வகிக்கும் சேரர் பிரிவினர் ஆண்ட பூமி கேரளா என்கிறது ஆய்வு முடிவுகள். கேரள மொழியான மலையாளம், தமிழில் இருந்து வந்த மொழிதான். மேற்குப் பக்கம் அரபிக் கடலும், கிழக்குப் பக்கம் 500 மீட்டர் முதல் 2700 மீ. வரை உயர்ந்து நீளும் மேற்குத் தொடர்ச்சி மலையும், வலைகள் விரித்த மாதிரி 44 ஆறுகளும் சேர்ந்து அற்புதமான பருவ நிலை நீடிக்கும் மாநிலம் கேரளா. ஒன்றிப்பான புவியியல் நிலையும் பருவ நிலையும் ஒன்று கூடி, ஆசியாவின் தலை சிறந்த சுற்றுலா பிரதேசமாக கேரளாவை உயர்த்தியுள்ளன. அழகான கடற்கரைகளைக் கொண்ட கடலோரம். நகரங்களுக் குள்ளேயே பயணிக்கும் உப்பங்கழிகள், மலை வாசஸ்தலங்கள், வன விலங்குகள், அருவிகள், காபி, மிளகு, தேயிலை தோட்டங்கள், தென்னை, பலா, பாக்கு மரங்கள், மலை இடுக்குகளில் கூட பிதுங்கும் நெல்வயல்கள், ஆயுர்வேத ஆரோக்கிய மருத்துவமனைகள், விந்தையான வண்ணத் திருவிழாக்கள், படகுப் பந்தயம், வரலாறு மற்றும் பண்பாட்டுச் சின்னங்கள் என்று சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாகவே திகழ்கிறது கேரளா.

கல்வி அறிவில் இந்தியாவிலேயே முதலிடத்தையும் இலக்கியத்தில் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளது கேரளா. மகாகவி வள்ளத்தோள், தகழி சிவசங்கரப்பிள்ளை, வைக்கம் முகம்மது பஷீர், ஓ.வி.விஜயன், பால் சக்கரியா, அடூர் கோபாலகிருஷ்ணன் போன்ற கேரள படைப்பாளிகள் உலக அளவில் அறியப்பட்டவர்கள். ஆன்மீகத்தில் அன்று அத்துவைதம் கண்ட ஆதிசங்கரரும், நேற்று தோள்சீலை போராட்டம் நடத்தி பெண்ணினத்தின் பெருமை காத்த மகான் நாராயண குருவும், சிந்தனையாளர் இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட்டும் பிறந்த மண். ஏசு பிறப்பதற்கு முன்பே கேரளத்தின் மிளகும் வாசனைத் திரவியங்களும், கிரேக்கத்தில் மணம் வீசின என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

# டைனோசர் முட்டைகளை அடைகாத்த பாம்புகள்

சௌரோபொட் என்பது டைனோசர் வகைகளில் ஒன்று. நீண்ட கழுத்துடைய மிகப்பெரிய இந்த டைனோசர்களே குழந்தைகளின் மனங்கவர் டைனோசர். எவரும் அணுகமுடியா இந்தப் பாரிய விலங்கின் முட்டைகளைத்தான் 12' நீளமான ஆனைகொண்டான் (அனக்கொண்டா) வகைப்பாம்புகள் அடைகாத்தன என்கிறனர் ஆய்வாளர்கள். எதற்காக, எப்படி என்ற கேள்விகள் எழுவது உண்மைதான். பதிலும் வருகிறது. 'தென்னிந்தியாவில் டைனோசர்கள்' என்ற கட்டுரை விளம்பரத்தில் வந்ததை அறிவீர்கள். அரியலூரில் 140 முட்டைகளைச் சுருட்டிக் கொண்டு காணப்பட்டதால் அவர்கள் அது பற்றிய கருதுகோள் ஒன்றினைக் கொடுத்தார்கள்.

ஆனைகொண்டான் வகைப்பாம்புகள் சௌரோபொட் டைனோசர்களின் முட்டைகளை அவற்றின் கூடுகளில் இருந்து அப்படியே தரைக்கு இழுத்து வந்து அடைகாத்து, முட்டைகள் பொரித்து இளம் சௌரோபோட் டைனோசர்கள் முட்டையில் இருந்து வெளிவர, அவற்றை விழுங்கி இருக்க வேண்டும். இப்படியாக, 60 மில்லியன் ஆண்டு முன்னராக, கிட்டத்தட்ட 145



கோடி ஆண்டு பழமையான டைனோசர் முட்டைகள் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டு வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட விபரம் அதில் வந்திருந்தது. மெச்சிக்கன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள்தான் இந்தத் தகவலைத் தந்துள்ளனர். சௌரோபொட்டின் பெரிய முட்டைகளைச் சுற்றி மலைப்பாம்புகளின் உயிர்ப் படிமங்கள் காணப்பட்டிருந்தனவாம். அதில் ஒன்றில் முட்டையில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த சௌரோபொட் ஆனைகொண்டானால் விழுங்கப்பட்டுக் கொண்டு இருந்ததற்கான படிமம் இருந்ததாம். பாம்புகளின் படிமங்கள் பல, டைனோசர் மில்லியன் ஆண்டு காலம் புத்திசாலிப் பாம்புகளின் திருவிளையாடல் நடத்திருக்கின்றது என மெச்சிக்கன் பல்கலைக்கழக ஆய்வாளர் ஜெவ்ரி வில்சன் என்பவரும் அவரது குழுவினரும் 2010ம் ஆண்டில் ஒரு கருதுகோளினைக் கூறியிருக்கிறார்கள். அதுசரி, அனை கொண்டானில் இருந்து அனுக்கொண்டாவா அல்லது அனுக்கொண்டாவில் இருந்து அனைகொண்டானா என்றொரு சர்ச்சை இருக்கிறதாமே! இதில் இருந்து அதுவா, இல்லை அதிலிருந்து இதுவா? நான் முதலாவதின் பக்கமே நீங்கள் எப்பக்கம் என்பதும் எனக்குத் தெரியும்.

# குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 34

முதலில் லூயிஸ் டி புரொக்லியைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம். இவர் பிரான்ஸ் நாட்டின் அரச பரம்பரையில் வந்த விஞ்ஞானி என்பார்கள். ஆனால், இவரது முன்னவர்கள் பிரான்சின் அரச குடும்பத்தினருக்கு மிகவும் விசுவாசமானவர்களாக இருந்தபடியால், இவர்கள் குடும்பத்தில் பிறப்பவர்களுக்கு இளவரசர் அல்லது இளவரசி என்ற பட்டப்பெயர் சூட்டப்படலாம் என அப்போது இருந்த அரசர் உரிமை வழங்கியிருந்தார், அதனால்தான் இவரது பெருடன் இளவரசர் என்ற பெரும் சேர்ந்திருந்தது, என்கிறார்கள். இவரது பெயர் இப்போது முக்கியமானதல்ல. குவாண்ரம் உலகினுக்கு இவர் வழங்கிய கருத்துத்தான் முக்கியமானதாக, முக்கிய திருப்பத்தைக் கொடுத்ததாக அமைந்தது. அதனைத்தான் இனிப் பார்க்கப் போகிறோம்.

## லூயிஸ் டி புரோக்லி

நீல்ஸ் போரின் அணுக் கொள்கையானது, உறுதியான அணுவிற்கு மிகப் பொருத்தமான ஒன்றாக இருந்தது. எல்லா இயற்பியல் வாதிகளுமே ஏற்றுக் கொண்டார்கள். ஆனாலும் கூடவே ஒரு பிரச்சனையும் வந்தது. சிக்கல்கள் இல்லாதுவிடில் விஞ்ஞானமே இல்லைத்தானே! அணுவில் உள்ள வெவ்வேறு சக்தி ஒழுக்குகளில்தான் இலத்திரன்கள் அணுக்கருவை வலம் வருகின்றன. அது சரிதான், ஆனால் எவ்விதம் இது பொருத்தப்பாடாக இருக்கும் என்பதைத் தெளிவுபடுத்த முடியவில்லை. இந்த நிலையில்தான் இளவரசர் டி புரோக்லி தனது கருத்தை முன்வைத்தார். அதற்கு ஆதாரமாக ஒளியின் இருமைக் கொள்கையை எடுத்துக் கொண்டார். ஒளியானது (அதாவது சக்தியானது) துணிக்கையாகவும், அலையாகவும் இருமைத் தன்மையைக் காட்டினால், சடங்களும் அவ்விதம் இருமை நிலையில் இருக்கலாம் தானே என்ற எண்ணம் டி புரோக்லியின் மனதில் தோன்றியது. இதனை அவரது உள்ளுணர்வின் உறுத்தல் எனக் கூறலாம். ஒளியானது தனது நிலைமைக்கு ஏற்ப துணிக்கையாகவோ அல்லது அலையாகவோ பச்சோந்தித் தன்மையைக் காட்டுவதுபோல, அணுக்களில், அணுக்கருவினை வேகமாகச் சுற்றிக் கொண்டிருக்கும் இலத்திரன்களும், இருமைத் தன்மையை காட்டுகின்றன. அதாவது அணுவில் இலத்திரன்கள் துணிக்கைகள் ஆகவும் அலைகளாகவும் இரண்டு இயல்புகளையும் கொண்டு இயங்குகின்றன என்றார், இளவரசர். அதனால்தான் அணுக்கருவினைச் சுற்றி வருகிற இலத்திரன்களில் மைய நோக்க விசை இல்லாது இருக்கின்றது. இம் மையநோக்கு விசை இல்லாததினால்தான் இலத்திரன்கள், சக்தியை இழக்காது, எப்போதும் ஒரே சக்தியை உடையனவாக அணுவில் அணுக்கருவைச் சுற்றி வருகின்றன என்ற விளக்கத்தினைக் கொடுத்தார். அது என்ன மைய நோக்கு விசை என நீங்கள் கேட்பீர்கள் என எனக்குத் தெரியும். ஒரு திணிவு அல்லது பொருள் வட்டப்பாதையில் இயங்கினால், அப்பொருளுக்கு அவ்வட்டத்தின் மையம் நோக்கியதாக ஒரு விசை இருக்கும். இதனைத்தான் மைய நோக்கு விசை என்பார்கள். நியூட்டனின் செம்மைப் பொறிமுறையில் மைய நோக்கு விசையானது மிகவும் முக்கியமான ஒன்று. புவியை சந்திரன் வட்டப் பாதையில் வலம் வருவதற்கான மைய நோக்கு விசையானது சந்திரனை புவி கவரும் ஈர்ப்பு விசையாகும். புவி கதிரவனைச் சுற்றி வருவதும், கதிரவன் புவியைக் கவரும் ஈர்ப்பு வியைானது மைய நோக்கு விசையாகத் தொழிற்படுவதாலேயே வானில் எண்ணற்ற செய்மதிகள் வலம் வருகின்றனவே. அவற்றிக்கெல்லாம் இந்த மைய நோக்கு விசையானது சரியானதாக அதாவது பொருத்தமானதாக இருப்பதனால் தான் அவை தமது பாதைகளில் நின்று புவியை வலம் வருகின்றன.



இலத்திரன் போன்ற சிறிய துணிக்கைகள், அலைகளுக்கான இயல்புகளான, அதிர் வெண், அலைநீளம் போன்றவற்றைக் கொண்டிருப்பதுடன், தலையீடு, முறிவு போன்ற இயல்புகளையும் நிச்சயமாகக் காட்ட வேண்டும் என டி புரோக்லீ கூறினார். இவரது கூற்றுக்கள் உண்மை எனப் பின்னர் காட்டப்பட்டன. நவீன பரிசோதனைகள், இலத்திரன் போன்ற சிறிய துணிக்கை களுக்கு மாத்திரமல்லாது, அணுக்கள், மூலக்கூறுகளுக்கும் இவற்றினை இப்போது காட்டப்பட்டுள்ளன. இலத்திரனின், துணிக்கை - அலை இருமை நிலையில் ஒன்றான அலைவடிவம், அணுவில் அமைந்த 'போரின்' இலத்திரன் ஒழுக்குகளை அழகாக விளங்கப்படுத்தியது. அணுக்களில் இலத்திரன்கள் 'நிலையான அலைகள்' என்ற வடிவில் இயங்குகின்றன. இதனால் குறிப்பிட்ட அலைவடிவங்களே அணுவினுள் பொருத்தமானவையாக இருக்கின்றன. அதனால் இலத்திரன் அலைகளின் சில அலைநீளங்களும், அதிர்வெண்களும் உள்ள இலத்திரனை அலைவடிவங்களே அணுக்களின் உள்ளே அமைய முடியும். இப்படியான நிலையில், இலத்திரன்கள் அணுவினுள் எழுந்தமாறாக ஓடித் திரிய முடியாத நிலையில், 'போர்' குறிப்பிட்டு இருந்தபடி, வெவ்வேறு ஒழுக்குகளில் சுற்ற வேண்டிய கட்டாயத்துக்குள் உள்ளாகின. இதுதான் அணுவிற்குச் சிறப்பான வடி வினைத் தந்தது. இங்கு நிலையான அலைகள் என்றால் என்னவென்று எங்களுக்குத் தெரிய வேண்டும். காற்றிலே ஒலி செல்வது, விண்மீன்களில் இருந்து ஒளி வருவது, நீர்த் தேக்கங்களில் நீரலைகள் செல்வது எல்லாம் அலைச் செலுத்துகை ஆகும். இங்கு அலைகள் தொடர்ந்து முன்நோக்கிச் செல்கின்றன. இனி, கிட்டார், போன்ற தந்தி வாத்தியங்களை பார்ப்போம். இங்கு ஒலி எழுப்பப்படும்போது, இந்தத் தந்திகள் அதிரவிடப்படு கின்றன. இத்தந்திகள் இரண்டு முனைகளுக்கு இடையில் உறுதியாகப் பேணப்படுவது உங்களுக்குத் தெரியும். வாத்தியம் இசைக்கப்படும்போது, இத்தந்தி களில் ஒரு அலை செல்லும். அவ்வலை யானது, தந்தியின் இரு முனைவுகளுக்கும் இடையிலேயே இருப்பதால், அத்தந்தியில் ஒரு நிலையான அலைவடிவம் தோன்றும். அதனால்தான் அத்தந்தியில் பிறப்பிக்கப்படும் ஒலியானது ஒரே சுரத்தினை உடையதாக இருக்கிறது. இங்கு அலையின் வடிவினைப் பார்த்தால், அவை ஒரு முனையில் ஆரம்பமாகி, மறுமுனையில் முடிவடையும். இடையில் எத்தனை தடங்கள் தோன்றினாலும், அலைவடிவமானது ஒரு முழுமையானதாக இருக்கும். ஒரு குறையான அலைவடிவத்தினைப் பார்க்க முடியாது. இதனைத்தான் நிலையான அலைகள் என்கிறார்கள், விஞ்ஞானிகள்.

இதுபோன்ற ஒரு அமைப்பில்தான் அணுவில் இலத்திரன்களும் தமது அலைவடிவினை காட்டுகின்றன. ஒரு ஒழுக்கில் உள்ள இலத்திரன்கள் நிலையான எண்ணிக்கை யிலான தடங்களை அமைத்துக் கொண்டு இயங்குகின்றன. அதனால்தான் ஒரு ஒழுக்கில் குறிப்பிட்ட எண்ணிக்கையான இலத்திரன்கள் இருக்க முடிகிறது. மேலதிகமாக இலத்திரன்கள் இருந்தால், அவை வெவ்வேறு ஒழுக்குகளை அமைத்து நிலையான அலைவடிவில் இயங்குகின்றன. அதனால் வெவ்வேறு ஒழுக்குகள் காணப்படுகின்றன. இரண்டு ஒழுக்குகளுக்கு இடையில் இலத்திரன்கள் நிலையான அலைவடிவத்தினை உண்டாக்க முடியாது போவதாலேயே இலத்திரன்கள் அணுவினுள் எழுந்தமாறாக, அணுக்கருவைச் சுற்றுவதில்லை. லூயிஸ் டி புரோக்லியின் இந்தச் சிந்தனைதான் குவாண்ரம் பொறிமுறைக்கு உண்மையில் கதவைத் திறந்து விட்டது. இங்குதான் உண்மையில் குவாண்ரம் முழுமையாகப் பிறந்தது எனலாம்.



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பேரண்டம் - 108

காலம்
இலக்கிய இரவு




அறிமுகமும் வெளியீடும்

என். கே. மகாலிங்கம் அவர்களின்
மொழிபெயர்ப்பில்

ஆடும் குதிரை
(உலகச் செவ்விலக்கியச் சிறுகதைகள்)

விலங்குகளின் வாழ்வு
(நாவல்)

சிறப்பு உரை-சமகால தமிழ்ச் சினிமா

ஜமுனா ராஜேந்திரன் (இங்கிலாந்து)
(எழுத்தாளர், விமர்சகர்)

ஞாயிற்றுக்கிழமை 20.05.2012 மாலை 5:30 மணி
Sunday 20.05.2012 5:30 P.M
Don Montgomery Community Recreation Centre
(formerly Mid-Scarborough C.C)
2467 Eglinton Ave. E , Scarborough, ON M1K2R1

புதிய புத்தகங்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறும்.

# அன்றும் இன்றும் என்றும்
# இல்லத்தரசிகளின் இனிய நண்பன்
# அறுசுவைகளின் அரசன்
# நிரு தயாரிப்புக்கள்.



## நிரு பிராண்ட் என கேட்டு வாங்குங்கள்

Niru Enterprises Inc
40 Minuk Acres
Scarborough, ON M1E 4Y6
Canada
Tel: 416.750.1976
Fax: 416.750.8779
www.niru.com

Niru Niru
நிரு
பிராண்ட்

# வாகை சூடவா



பழங்காலத்தில் நிகழ்கின்ற கதை இது. ஆனால் இப்படத்தில் இந்தக் காலத்திற்கும் முக்கியமான கருத்து ஒன்று இருக்கிறது. அரசாங்கத்தில் ஆசிரியர் வேலையை விரும்புகின்ற கதாநாயகன் கல்வியறிவு இல்லாதவர்கள் இருக்கும் கிராமத்தில் ஆசிரியர் வேலைக்கு செல்கிறான். அங்கு அரைமனதாக பாடம் படிப்பிக்க முயலுகிறான். செங்கட்டி செய்யும் அந்த ஊரில், ஒரு படிப்பும் நடைபெறுவதே இல்லை. ஆசிரியரை கண்டவுடனே பிள்ளைகள் ஓடுகிறார்கள். பெற்றோர்களுக்கும் ஆசிரியரை பிடிக்கவும் இல்லை. இப்படி படம் ஓடுகிறது. கதா-நாயகன் பல விதங்களில் பகிடிபண்ணப்படுகிறான். அதனால் அவன் கஷ்டப்படுகிறான். அவனைப் பின் தொடரும் ஆட்டில் தொடங்கி, கணித கேள்விகள் வரை அவன் பகிடிபண்ணப் படுகிறான். இப்படி இருக்கையில்தான், இக்கிராமத்தில் வாழுகின்றவர்கள் ஏமாற்றப்படுவதை பற்றி கதாநாயகன் அறிகிறான். கிராமத்தவர்களுக்கு படிப்பில்லை என்பதால் அவர்களின் முதலாளி சம்பளத்தை, அவர்களுக்கு தெரியாமல் குறைக்கிறான். இதை மக்களுக்கு எடுத்துச்சொல்லியவுடன் அவர்கள் மனம் மாறி பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புகிறார்கள். இதற்குப்பின் என்ன நடக்கிறது என்பதை படத்தை பார்த்து அறியலாம். ஏன் என்றால் வழமைபோல் இதில் கதையை நிறுத்தி கருத்தை பார்ப்போம். இப்படத்தின் முழுக்கருத்தும் படிப்பை பற்றியும் படிப்பின் முக்கியத்துவத்தையும் பற்றியதும் ஆகும்.

நாங்கள் படத்திலேயே படிக்காதவர்கள் படும் கஷ்டத்தை காணுகிறோம். படத்தில் செங்கல் செய்பவர்கள் படிப்பறிவு இல்லாமல் ஏமாற்றப்படுவதை பார்த்தோம். எனவே படிப்பு மிக முக்கியமானது என்று அறிகிறோம். இக்கஷ்டத்திலிருந்து விடுபட பிள்ளைகளுக்கு படிப்பிக்க, பெற்றோர்களும், ஆசிரியரும் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்றும் காணுகிறோம். அதனால் நாங்களும் எங்களது பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் மதிக்க வேண்டும். இனி நாங்கள் படத்தில் வந்த இரு விடுகதைகளை பார்ப்போம். படத்தில் ஒருவர் எப்போதும் விடுகதைகளை கேட்டுக் கொண்டிருப்பார். அதுதான் இவை.

1. சில பறவைகள் பூந்தோட்டத்தில் உள்ள பூக்களில் வந்து இருக்கின்றன. ஒரு பூவில் இரண்டு பறவைகள் என இருந்தால் ஒரு பூ மிஞ்சும். ஒரு பூவில் ஒரு பறவை என இருந்தால் ஒரு பறவை மிஞ்சும். பூக்கள் எத்தனை, பறவைகள் எத்தனை? (பதில்: 3 பூக்கள், 4 பறவைகள்)

2. யானை ஒன்று $5.00, குதிரை ஒன்று $0.75, கழுதை ஒன்று $0.25. நீங்கள் $100.00 க்கு 100 மிருகங்கள் வாங்க வேண்டும் என்றால், எத்தனை யானைகளும், எத்தனை குதிரைகளும், எத்தனை கழுதைகளும் வாங்க வேண்டும்? (பதில்: 12 யானைகள், 36 குதிரைகள், 52 கழுதைகள்)

நாம் இப்படத்தின் மூலம் கல்வியின் அருமையையும் கல்வி கற்பிக்கும் ஆசிரியத்தொழிலின் பெருமைகளையும் அறிகின்றோம். எல்லாவித தர்மங்களையும் விட கோடி புண்ணியம் தரக்கூடிய தருமம், ஒரு ஏழைக்கு படிப்பித்தலாகும் என்றார் பாரதியார்.

**நீதி: "அன்ன யாவிலும் புண்ணியம் கோடி ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்" (பாரதியார்)**



ஞா. ஆரணி

அகவை 13

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.


HomeLife / GTA Realty Inc., Brokerage*

*Independently Owned and Operated



Gulshan Sharma, B. Eng.

Broker

Cell: 416.407.5911

5215 Finch Ave. E. # 203 Toronto, ON.

Office: 416.321.6969

**MARKHAM & 14TH AVE.**
Spacious new 1220 Sq.ft Retail or Restaurant use unit. Great exposure in a new plaza (New Delhi Drive).
Available for Sale / Lease.
Immediate occupancy.

Busy supermarket Convenience. Long established and well known in Scarborough **(MIDDLEFIELD RD.) area.**
Lotto 649.
video income.
Asking only $139, 900.

**KENNEDY & FINCH**
Prime Office / Retail / Restaurant.
Can be divided into smaller units.
Lots of parking. Upto 4600 Sq.ft.
Situated on Finch Ave.

**MARKHAM & DENISON**
Busy Supermarket / Sri Lankan South Indian. Well known and long established
Very resonable price.

# சிவத்தமிழ் விழா - 2012

ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி, ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்துடன் இணைந்து நடத்திய ஆறாம் ஆண்டு சிவத்தமிழ் விழா ஏப்ரல் 28, 2012 ஆம் திகதி சனிக்கிழமை 14 th Avenue இல் அமைந்துள்ள ஆரிய சமாஜ வேத கலாசார நிலைய மண்டபத்தில் நடந்தது.




சிவத்தமிழ் விழா சரியாக மாலை 4.00 மணிக்கு மங்கல விளக்கேற்றல், விநாயகர் துதி, வேதபாராயணம், தேவாரம், தமிழ்த்தாய் வாழ்த்து, கனேடிய தேசிய கீதம், கல்லூரிக்கீதம் என்பவற்றுடன் ஆரம்பமானது. இவ்விழாவிற்கு இந்துக்கல்லூரியின் நிர்வாக செயலாளர் திருமதி. வனஜா இந்திரகுமார் தலைமை தாங்கினார். சிவத்தமிழ் விழாவிற்கு பிரதமவிருந்தினராக கனடா இந்துமாமன்ற செயலாளர் திரு. வேலுப்பிள்ளை நந்தீஸ்வரரும், கௌரவ விருந்தினர்களாக அருட்கவி திரு. தம்பிஐயா ஞானகணேசன் மற்றும் 'உதயன்' பிரதம ஆசிரியர் திரு. R.N. லோகேந்திரலிங்கமும் வந்திருந்தனர்.

சிவத்தமிழ் விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக ஒன்ராரியோ நாடாளு மன்ற உறுப்பினர்களான மதிப்பிற்குரிய Soo Wong உம் மதிப்பிற்குரிய Bas Balkisson உம் மற்றும் Councillor ஆன திரு. Mike Del Grande, கல்விச்சபை உறுப்பினரான திரு. Sam Sotiropoulas உம் வந்திருந்தனர். இவ்விழாவின் நிகழ்ச்சிகளை திருமதி. சுதாரஞ்சனி வாசுதேவகுருக்கள் தொகுத்து வழங்கினார். சிவத்தமிழ் விழாவின் முழு நிகழ்வுகளும் வரசித்தி விநாயகர் இந்ததுக்கல்லூரி மாணவர்களாலேயே நடத்தப்பட்டன. அதேபோல் இந்நிகழ்ச்சிகளை நெறியாள்கை செய்தவர்களும் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்களே.

வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரியின் அதிபர் திருமதி. பூங்கோதை அமுதன் முதலில் விழாவிற்கு வருகை தந்தவர்களை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து Councillor திரு. Mike Del Grande சிறப்புரை நிகழ்த்தினார். இவ்வுரைகளை தொடர்ந்து ஆசிரியர் திருமதி. கமலாம்பிகை சாந்தலிங்கத்தின் பயிற்சியில் 11 மாணவர்கள் சைவமும் கடவுளும் என்ற நிகழ்வில் பேசினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஐங்கரன், முருகன், சரஸ்வதி, சிவபெருமான் மற்றும் மகாலட்சுமி என்ற கடவுள்களின் தலைப்புக்களின் கீழும், கோயில், கொன்றை வேந்தன், கனம்பண்ணுவோம், சைவப்பண்புகள், சிவசின்னங்கள் மற்றும் கடவுள் என்ற தலைப்புக்களின் கீழும் பேசினார்கள். பின்னர் கலை நிகழ்ச்சிகளிற்கு இடையே 'ஆறுவது சினம்', 'குறளமுதம்' என்ற தலைப்புக்களிலும் மாணவர்களது பேச்சுக்கள் நடைபெற்றன. இவ்விரண்டு பேச்சுக்களையும் ஆசிரியர் திருமதி. திலகா சின்னப்பு பயிற்றுவித்திருந்தார். மாணவர்கள் எல்லோரும் பேச்சுக்களை மனனம் செய்தும் தெளிவான உச்சரிப்புகளுடனும் பேசியது பாராட்டத்தக்கது.

கலை நிகழ்ச்சிகள், 'மயிலேறும் பெருமானே முருகையா' என்ற பாடல் நிகழ்வுடன் ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து 'இயற்கை எழில்' என்ற நடன நிகழ்வு நடைபெற்றது. இதில் சிறுவர்கள் 'சின்ன சின்ன மழைத்துளிகள்', 'மறந்து போகுமோ இந்த மண்ணின் வாசனை' போன்ற பாடல்களுக்கு நடனமாடினர்.

நாடகங்களாக 'சிரிக்க சிந்திக்க' மற்றும் 'சொர்க்கத்திலும் சுமை' என்பன நடை பெற்றன. 'சிரிக்க சிந்திக்க' என்ற நாடகத்தில் தமிழருடன் சேர்ந்து பழகவும், வாழவும் விருப்பம் இல்லாமல் ஒரு தமிழ் குடும்பம் தனியாக இருக்க விரும்பி வீடு வாங்கிச் செல்கிறது. அக்குடும்பம் புதிதாக வீடு வாஙகிய இடத்தை சூழ உள்ளவர்கள் இவர்கள் அங்கு குடியேறியதால், நிற பேதம் காட்டி இவர்களை விட்டு விலகிச் செல்வது அக்குடும்பத்திற்கு ஒரு படிப்பினையை ஊட்டியது. 'சொர்க்கத்திலும் சுமை' என்ற நாடகத்தில் சொர்க்கத்தில் இருக்கும் கம்பர், ஔவையார், திருவள்ளுவர், நக்கீரன் மற்றும் பாரதியார் போன்றோர் பாண்டிய மன்னனின் அவையில் கூடி பூவுலகில் தற்போது தமிழர்களிடம் தமிழ்மொழி படும் பாட்டைப் பற்றி உரையாடினார்கள். தற்போது தமிழர்களிடம் தமிழ்மொழி படும் பாட்டைக் காட்ட 'வை திஸ் கொலைவெறி' பாட்டிற்கு சிறுவர்கள் நடனமாடினர். பூவுலக நிகழ்விற்கு நிகழ்ச்சித்தொகுப்பாளராக வந்த சுருதி ஸ்ரீதரன் ஆங்கிலம் கலந்த தமிழில் அழகாக பேசி தற்போதைய அறிவிப்பாளர்களில் ஒருவராகவே மாறியிருந்தார். நிகழ்ச்சிகளுக்கு இடை யிடையே நடைபெற்ற சிறப்பு விருந்தினர் உரைகளில் ஒன்ராரியோ நாடாளுமன்ற உறுப்பினர்களும் கல்விச்சபை உறுப்பினரும் உரை நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து நடன நிகழ்வுகளாக 'கணபதி ஜதி' மற்றும் 'மாதா, பிதா, குரு, தெய்வம்' நடந்தன. இவ்விழாவிற்கு ஆசி உரை களையும் வாழ்த்துரைகளையும் விழாவின் இடையிடையே ரொறொன்ரோவில் உள்ள மற்றைய தேவஸ்தானங்களை சேர்ந்தவர் கள் வழங்கினார்கள். இவ்விழாவிற்கு தலைமை வகித்த திருமதி வனஜா இந்திரகுமார் தலைவர் உரையை வழங்கினார். இந்துக்கல்லூரியின் வளர்ச்சி பற்றி சிவத்தமிழ் செல்வர் திரு. செல்லத்துரை சத்தியமூர்த்தி உரை நிகழ்த்தினார். அவர் 2006 இல் இந்துக் கல்லூரி 60 மாணவர்களுடன் ஆரம்பித்து தற்போது 200 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்பது பற்றி விளக்கினார். இவ்விழாவில் மார்ச் 2012 இல் நடைபெற்ற பொது அறிவுப்போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அத்துடன் இப்போட்டிகளுக்கு ஆலோசனை வழங்கி நடுவர்களாக இருந்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

கலை நிகழ்வுகளின் தொடர்ச்சியாக முத்தமிழ் குவியலான 'என் மகள்' நடை பெற்றது. இதில் ஒரு தாய் எவ்வாறு தனது மகளை பெற்று, சீராட்டி வளர்த்து, கல்வி புகட்டி, அன்றாட கடமைகளை செய்து வளர்க்க, மகள் கன்னியாகியதும் காதலில் விழுந்ததை கண்டு துடிப்பதும், பின்னர்



நிலைமையை உணர்ந்து அவளை அவளது காதலனுக்கு மணம் முடித்துக் கொடுப்பதும் நன்றாக நடித்துக் காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒரு ஆசிரியர் உட்பட 31 மாணவர்கள் பங்கேற்றிருந்தனர். கன்னிப் பெண்ணாக வந்த திவ்வியா மற்றும் அவவின் காதலனாக வந்த ஆரணி அவர்களுடைய 'நறுமுகையே நறுமுகையே நீ ஒரு நாழிகை நில்லாய்' என்ற பாடலுக்கான நடிப்பு மெச்சும்படியாக இருந்தது.

தொடர்ச்சி 40ஆம் பக்கம்




AYURVEDA

MASSAGE GOOD FOR HEALTH & PAINS

Back, Leg, Shoulder, Cervical, Heel, Knee and Foot Pain Stiff Neck, Severe Headacke, Migraine, Insommia Weight Problems, Sciatica, Slipped - Prolapsed Disc, Solar Piexus, Disorders Of Joints, Bones And Muscles.

Women For Women, Men For Men - 416.434.9251

யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

# இன்னொரு... அப்படியா?

பாகம் - 4
பகுதி 40

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

## ◊ சி.வி. நாதன் ◊

அந்த அறை முற்றாகவே எரிந்து காணப்பட்டது. அடுத்து இருந்த கண்காணிப்பு அறை கூட முற்றாகவே எரிந்து விட்டது. இப்பகுதிக்கு என இருந்த சிறப்பான தீ அணைக்கும் படையினர் வந்து தீயை அணைத்து விட்டிருந்தார்கள். மற்றய அறைகளுக்கு தீ பரவவில்லை. ஆனாலும் இந்த இரண்டு அறைகளும் முற்றாகச் சேதமடைந்து காணப்பட்டன. விரைந்து வந்து கொண்டிருந்த சானையும் மற்ற ஐவவரையும் நோக்கி அவ் உயர் அதிகாரி ஓடி வந்தார். சானுக்கு அருகில் வந்து விறைப்பாக நின்றவர் 'சேர்...' மற்றவர்களைப் பார்க்க'

'பரவாயில்லை! சொல்லுங்கள் கப்ரன்' எனச் சான் கூறினார். விறைப்பு மாறாமலே அந்த அதிகாரி கூறத் தொடங்கினார், 'எப்படித் தீ பற்றிக் கொண்டது என்பது தெரியவில்லை. தானியங்கித் தண்ணீர் தெளி குழாய்கள் உடனடியாகவே இயங்கத் தொடங்கினாலும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடிய வில்லை. எமது படையினர் வந்துதான் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தீயை அணைக்க முடிந்தது. ஐந்து நிமிடங்கள்தான். ஆனாலும் எல்லாமும் எரிந்து சாம்பல். நல்ல காலமாக அறைகளுக்குள் எவரும் இல்லாத தால் உயிராபத்துக்கள் ஏதும் இல்லை' 'என்ன அறைகளுக்குள் ஒருவருமில்லையா?' மணியனால் நம்பமுடியவில்லை. தன்னையும் அறியாமற் கேட்டுவிட்டான். சான் உட்பட எல்லோருமே மணியனைப் பார்க்க, அதிகாரி மணியனைப் பார்த்து 'யேஸ் சேர், அறைகளுக்குள் ஒருவருமே இருக்கவில்லை. அதனால் உயிர்ச் சேதங்கள் எதுவும் இல்லை: என்றார் மறுபடியும். 'ஆண்டவனுக்கு நன்றி' என்ற மணியன், அறைகளைப் பார்த்தான், தனிமைப்படுத்தப்பட்டிருந்த அறைகள் எரிந்து இரகசியம் ஏதுமின்றி அம்மணமாக காட்சியளித்தன.

சான் நேராக கண்காணிப்பு அறைக்குச் சென்றார். இனியனும் நாகராசனும் வைக்கப்பட்டிருந்த அறைப்பக்கம் பார்க்கக் கூட இல்லை. அறுவரும் வேறுவேறாகப் பிரிந்து அறைகளைப் பார்த்துக் கொண்டு வந்தார்கள். கட்டில்கள் கதிரைகள் எல்லாம் எரிந்து சாம்பல். உலோகத்தால் ஆன பொருட்கள் எல்லாம் உருகியிருந்தன. இரண்டு அறைகளையும் பிரித்திருந்த சுவர் பாதி எரிந்து போயிருந்ததால் ஒரு அறையில் இருந்து மற்ற அறைக்கு நேரடியாகவே போகக் கூடியதாக இருந்தது. ஒருமுகப் பார்வைக் கண்ணாடியின் முலாம் உருகி வடிந்திருந்தது. சில இடங்களில் கண்ணாடி வெடித்தும் காணப்பட்டது. இன்பனும் நாகராசனும் இருந்த அறைக்குள் மணியன் நிற்க, மற்ற அறையில் இருந்து செழியன் வந்து மணியனுடன் இணைந்து கொண்டான். 'அறைகளுக்குள் ஒருவரும் இருக்கவில்லை என்று கப்டன் சொல்லுகிறார். அப்ப இன்பனையும் நாகராசனையும் வேறு அறைக்கு மாத்தியிருப்பினமோ?' மெதுவாகத் தமிழில் கேட்டான் மணியனைச் செழியன். 'நான் அப்படி நினைக்கவில்லை' என்றான் மணியனும் தமிழில். பொதுவாகவே நாசா வினுள் இவர்கள் தமிழில் கதைப்பதில்லை. ஆனாலும் இருவரும் இன்று தமிழில் உரையாடத் தொடங்கினார்கள். 'அப்படி யென்றால்' செழியன் கேட்க, 'புதுக்கிணத்தடி யில் அந்த முதியவர் சொன்னது ஞாபகத்துக்கு வருகுது. 'அஞ்சு நிமிசத்திலை ஆச்சி வீடு முழுக்கலும் எரிஞ்சதைக் கண்ணாலை கண்டவன் நான். அப்பிடி ஒரு நெருப்பை என்ரை வாழ்க்கையிலை நான் காணேலை' எண்டவர் அவர். அதுபோலைத் தான் இந்த நெருப்பும் எனக்குத் தெரியுது, என மணியன் கூற, 'அப்பிடியென்றால்,.... இன்பனும் நாகராசனும் மீண்டும் அந்த இன்னொரு பிரபஞ்சத்துக்குள் போய் விட்டார்களோ' செழியன் கேட்க, செழியனைப் பார்த்த மணியன் 'அப்பிடித்தான் எனக்குப் படுகுது.' என்றான்.

'ஏன் ஒருவேளை சான்தான் இருவரையும் வேறு ஏதாவது இரகசிய இடத்திற்கு மாத்திப் போட்டு இப்பிடி நெருப்பை வைச்சு நாடகமாடுகிறாரோ?' செழியன் சந்தேகம் போல ஒரு கேள்வியைக் கேட்க, 'இருக்கலாம், ஆனாலும் செழியன், ஒன்றை யோசிச்சுப் பார். அதுக்கேன் இவ்வளவு செலவு செய்யவேணும்' அடுத்த அறையில் நின்று கொண்டிருந்த சான் இருவரையும் பார்த்தார். பிளந்து காணப்பட்ட அறைச் சுவரின் ஊடாகச் சான் தங்களைக் கவனிப்பதைக் கண்டாலும் இருவரும் கதைத்துக் கொண்டே இருந்தார்கள். மெதுவாகக் கதைத்துக் கொண்டிருந்ததால் இவர்கள் என்ன மொழியில் பேசுகின்றார்கள் என்பது சானுக்குத் தெரியவில்லை. ஆனாலும் இவர்கள் தமது மொழியில்தான் கதைக்கின்றார்கள் என ஊகித்துக் கொண்டார். இந்த நேரத்தில் எரிவுகளையும் அழிவுகளையும் பார்த்துக் கொண்டே கார்த்திக் சானுக்குக் கிட்டவாக வந்தான். 'எல்லாமும் எரிஞ்சு போச்சுது' கார்த்திக் 'ஓமோம். எல்லாமும் எரிஞ்சுதான் போச்சுது.' சான். குரலில் சலிப்பு இருப்பது போலத் தெரிந்தது கார்த்திக்குக்கு, கண்களை அந்த அறையைச் சுற்றி ஓடவிட்டான் ஓரளவுக்குத்

தொடர்ச்சி 37ஆம் பக்கம்



# “தமிழ்நாட்டை வெளிமாநிலத்தவர் ஆக்கிரமிப்பில் இருந்து காப்பாற்ற வேண்டும்”!

## நேர்காணல்: தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சித்தலைவர் பெ. மணியரசன்

கைது, வழக்குகள், உளவுத் துறை அச்சுறுத்தல்கள் போன்றவற்றுக்கு அஞ்சாமல், தொடர்ந்து ஈழத்துக்காக குரல் கொடுக்கும் தமிழக அரசியல்வாதிகளில் பெ.மணியரசனும் ஒருவர். ‘பாலை’ திரைப்பட இயக்குநர் செந்தமிழனின் தந்தை. தஞ்சாவூரில் உள்ள தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் அலுவலகத்தில், நேர்காணலின் பொருட்டு காலை பத்துமணி அளவில் மணியரசனை சந்தித்தோம். சிறிய எளிமையான அலுவலகம். சுவரில் கட்சியின் பொதுக் கூட்டங்கள் குறித்த சுவரொட்டிகள். அலுவலகத்தின் உள்ளே ஒரு கூடம், அதை ஒட்டிய ஓர் அலுவலக அறை. கூடத்தில் பெரிய மேசை, சுற்றிலும் நாற்காலிகள். மேசையின் மேல் சில நாளிதழ்கள். ஆறேழு கட்சித் தோழர்கள் நாளிதழ்கள் வாசித்துக் கொண்டும், தமக்குள் விவாதித்துக் கொண்டும் இருக்க, பெ.ம. அறையில் ஏதோ குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

மேசையின் மீது சிறிய அளவிலான லெனின் சிலை, ஒரு நாளிதழ், பேனாகூடு, அவரின் மூக்குக் கண்ணாடி, இரண்டு ராக்கைகளில் நிறையப் புத்தகங்கள். புன்முறுவலுடன் எழுந்து நின்று ‘வணக்கம். வாங்க’ என்றார். அமர்ந்த பிறகு அமர்ந்தார்.

இனி நேர்காணல்....

**உங்களின் அரசியல் பிரவேசம் குறித்துக் கூறுங்கள்?**

“மாணவர் பருவத்திலிருந்தே என்னுள் தமிழ் உணர்வு மேலோங்கியிருந்தது. அன்றைய அரசியல் சூழலில் தமிழ்மொழி, இனம், எனப் பேசிக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் ஈர்க்கப்பட்டேன். தி.மு.க.வில் உறுப்பினராகவும் சேர்ந்து செயலாற்றிக் கொண்டிருந்தேன். அண்ணாவின் பேச்சு, எழுத்து ஆகியவற்றின் மூலம் எனக்கு கம்யூனிசம், காரல்மார்க்சு என்ற சொற்கள் அறிமுகமாயின. நேரு ‘சனநாயக சோசலிசம்’ என்று ஒரு கருத்தை வலியுறுத்திய காலம் அது. இதனை மறுத்த அண்ணா, அதற்கு மாற்றாக, தி.மு.க. ‘விஞ்ஞான சோசலிசத்தை’ முன்வைக்கிறது என்று சொன்னார். எனக்குள் விஞ்ஞான சோசலிசம் பற்றிய தேடுதல் தீவிரப்பட்டது. 1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. அத்தேர்தலில் தி.மு.க.வுக்கு வாக்குக் கேட்டு நான் பணியாற்றினேன். 1969 பிப்ரவரியில் அண்ணா காலமானார். அவர் மறைவுக்குப் பிறகு அண்ணாவின் மீதிருந்த பக்தி மெல்ல மெல்ல குறைந்தது. தி.மு.க.வின் கொள்கைகள் சோசலிசத்தை நிறுவக்கூடியவை அல்ல என்ற புரிதல் வளர்ந்தது. அதே வேளையில் கண்ணதாசன் எழுதிய ‘வனவாசம்’ என்ற நூலைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஏற்கெனவே தி.மு.க.வின் மீதிருந்த எனது விலகல் மன நிலையை அந்நூல் அதிகப்படுத்தியது. 1964ஆம் ஆண்டிலிருந்து ‘தென்மொழி’ இதழை படித்து வந்ததால் ஏற்பட்ட உணர்வுகளும், 1968லிருந்து உலகத் தமிழ்க் கழகத்துடன் ஏற்பட்ட தொடர்புகளும் தனித்தமிழ், தனித்தமிழ்நாடு என்ற கருத்துகளை என்னுள் வளர்த்திருந்தன.

அப்போது மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜோதி பாசு துணை முதலமைச்சராகவும், பங்களா காங்கிரசைச் சேர்ந்த அஜய் முகர்ஜி என்பவர் முதலமைச்சராகவும் ஆட்சி செய்தார்கள். அவர்களது ஆட்சியும் செயல்பாடுகளும் சிபிஎம் கட்சியின் மீது எனக்கு ஈர்ப்பை உண்டாக்கின. சிபிஎம் கட்சியில் சேர்ந்தேன். 15 ஆண்டுகள் அக்கட்சியில் செயல்பட்டேன்.



**- சந்திப்பு பாண்டியன், பரிதி -**

பிற்காலத்தில் லெனின், ஸ்டாலின் வகுத்துத் தந்த தேசிய இனப் பார்வையுடன் அக்கட்சி செயல்படவில்லை என்பதும், காஷ்மீர், பஞ்சாப் போன்ற இடங்களில் தேசிய இன உரிமைப் போராட்டங்கள் நடந்த போதெல்லாம் அவற்றை சிபிஎம் கட்சி காங்கிரஸ் கட்சியைப் போலவே எதிர்த்ததும், இட ஒதுக்கீடு கோரிக்கைக்கான போராட்டங்களையும் அக்கட்சி எதிர்த்து வந்ததும், அக்கட்சியின்பால் எனக்கிருந்த பற்றைக் குறைத்தது. ஈழத் தமிழர்கள் 1983 சூலையில் இனப்படுகொலை செய்யப்பட்ட போது அக்கட்சி நடந்து கொண்ட முறையானது என் மனதில் அக்கட்சிக்கு எதிரான கொந்தளிப்பை உண்டாக்கியது. ஈழத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக ஏற்கக் கூட அக்கட்சி மறுத்தது.

நான் சீர்திருத்தத் திருமணங்களில் உரையாற்றும்போது, பிராமணியம் குறித்துப் பேசுவேன். கட்சித் தலைவர்கள் அதைக் கண்டித்தார்கள். ஒரு திருமண விழாவில் தோழர் வி.பி.சிந்தன் வாழ்த்துரை வழங்கிய போது இராசராசசோழனை மிகவும் கொச்சையாகப் பேசினார். திருமணம் முடிந்து திரும்பி வரும்போது ஒரு திறனாய்வு என்ற அடிப்படையில் இராசராசசோழனின் நிறைகுறைகளை நீங்கள் பேசலாம். ஆனால், ஒரு திருமண விழாவில் மக்களிடம் பெரு மதிப்புப் பெற்றுள்ள தமிழ் மன்னன் இராசராசன் குறித்து முற்றிலும் எதிர்மறையாகப் பேசியது சரியில்லை என்று சுட்டிக் காட்டினேன்.

கட்சியின் மாநிலத் தலைமையிலிருந்து என்னிடம் பிராமணியம் குறித்தும் இராசராசசோழன் குறித்தும் என் கருத்துகளை எழுதித் தருமாறு கேட்டார்கள். நான் எழுதி அனுப்பினேன்.

மாநிலத் தலைமையிலிருந்து தோழர்கள் சங்கரய்யா, பி.ஆர்.பரமேசுவரன், பி.இராமச்சந்திரன், போன்றோர் ஒரு குழுவாக வந்து நான் உறுப்பு வகித்த ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டச் செயற்குழுவில் என்னுடைய கடிதங்கள் பற்றி விவாதித்தார்கள். என்னுடைய பதிலுக்குப் பிறகு, ‘பிராமணியம் என்பது இந்தியாவில் இல்லை என்று கட்சி முடிவு செய்கிறது. இராசராசன் குறித்த கருத்துகளைப் பரிசீலிக்கலாம்’ என்று ‘தீர்ப்பு’ச் சொன்னார்கள்.”

**க.ப.அறவாணன் போன்ற அறிஞர்கள் இராசராசசோழன் காலத்தில் சாதி, மத பேதம் இருந்ததாகவும், ஆண்டான் - அடிமை முறை இருந்ததாகவும், செய்த வேலைக்குக் கூட சரியான கூலி கொடுக்காமல் கசையடி வழங்கியதாகவும் குறிப்பிட்டிருக்கிற நிலையில் பொதுவுடைமை என்ற பெயரில் கட்சியை நடத்தும் நீங்கள் அப்படிப்பட்ட மன்னர்களைத் தூக்கிப் பிடிப்பது சரிதானா?**

“இராசராசன் காலம் என்பது மன்னராட்சிக் காலம். அதாவது சனநாயகமோ, நாடாளு மன்ற முறையோ இல்லாத காலம். உலகெங்கும் அதுதான் நிலவியது. அப்படிப்பட்ட எதேச்சாதிகாரக் காலத்தில் ஒரு மன்னன் எந்த அளவு மக்களை மதித்தான், மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கி ஆட்சி செய்தான் என்பதைப் பார்க்க வேண்டும். சனநாயகத்தின் முதல்நிலை வடிவமாக ஒரு வகை உள்ளாட்சி முறை இராசராசன் காலத்தில் செயல்படுத்தப்பட்டது. தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டான். ஏற்கெனவே களப்பிரர், பல்லவர் ஆட்சியில் மேலாதிக்கம் பெற்று கொடிகட்டி ஆண்ட பிராமண ஆதிக்கத்தை ஒரு வரம்புக்குள் கட்டுப்படுத்தினான். நீர்ப்பாசன முறையை மேம்படுத்தினான். தமிழர் கட்டடக் கலையின் சிகரமாக தஞ்சைப் பெரிய கோயிலை எழுப்பச் செய்தான். தேவாரச் சுவடிகளை மீட்டான். கோயில்களில் தேவார ஓதுவார்களை அமர்த்தினான். இவை போன்ற நற் செயல்களுக்காக இராசராசனை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். மற்றபடி மன்னராட்சியின் இயல்பானதாகவும் முன் தொடர்ச்சி காரணமாகவும் தொடர்ந்து வந்த கெடுதல்கள் பலவும் இராசராசன் ஆட்சியிலும் இருந்திருக்கும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சோசலிசம் வரவில்லையே என்று நாம் விமர்சிக்க முடியாது. நிலவுகின்ற சமூக அமைப்பை ஒரு அங்குலம் முன்னேற்ற ஒருவர் செயல் புரிந்தால் அதை நாம் முற்போக்கு என்று ஏற்க வேண்டும். இராசராசன் வர்ணாசிரமத் தர்மத்தை ஏன் ஒழிக்கவில்லை என்று கேட்பது, இராசராசன் ஏன் பெரியாரிஸ்ட் ஆக இல்லை, கம்யூனிஸ்ட்டாக இல்லை என்று கேட்பது போல் உள்ளது. இன்னும் ஆயிரம் ஆண்டு கழித்து இப்போது நாம் கூறும் முற்போக்குக் கருத்துகள் எவ்வாறு மதிப்பிடப்படும் என்பது நமக்குத் தெரியாது.”

**தனிக்கட்சி அமைக்கும் நிலைக்கு நீங்களாக முன்வந்தீர்களா? சிபிஎம் கட்சி உங்களை அதை நோக்கித் தள்ளிவிட்டதா?**

“இருபோக்கும் ஒரே நேரத்தில் நடந்தது என்று சொல்லலாம். சாரத்தில் சிபிஎம் ஒரு தேர்தல் கட்சிதானே தவிர புரட்சிக் கட்சியல்ல என்ற முடிவுக்கு வந்தபின் தஞ்சை மாவட்டத்தில் செயல்பட்ட நானும் தோழர் கி.வெங்கட்ராமனும் சிபிஎம்-மை விட்டு வெளியேறி தமிழக அளவில் ஒரு புதிய புரட்சிகர அமைப்பைத் தொடங்குவது என்ற முடிவுக்கு வந்தோம். தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளிலுள்ள தோழர்கள் சிலருடன் இது குறித்து விவாதித்தோம். 1985 சூன் 29, 30 ஆகிய நாள்களில் சிதம்பரத்தில் கூடி எம்சிபி (மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி) என்ற பெயரில் தனிக்கட்சி தொடங்கினோம். அதன் அமைப்பாளராக நான் தேர்வு செய்யப்பட்டேன். சிபிஎம் தலைமையிலிருந்து வெளியேறி எம்சிபிஐ என்ற பெயரில் பீகாரைச் சேர்ந்த தோழர் ஸ்ரீவஸ்த்தவா தலைமையில் ஓர் இயக்கம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. சில மாதங்கள் கழித்து அவர்களோடு இணைந்தோம். ஆனால், அவர்களும் சிபிஎம் கட்சியின் மறு பதிப்பாகவே விளங்கினார்கள். ஈழ விடுதலைப் போராட்டத்தை எதிர்த்தார்கள். தமிழ்த் தேசியம் என்ற கருத்தியலை ஏற்க மறுத்தார்கள். 1990இல் எம்சிபிஐ லிருந்து வெளியேற முடிவு செய்தோம். அதன் தொடக்கமாக 1990 பிப்ரவரி 25 அன்று சென்னையில் பெரியார் திடலில் “தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாடு” நடத்தினோம். இதில் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை தமிழ்நாட்டிற்கு வேண்டும் என்றும் தமிழ்நாட்டை மாநிலம் என்று அழைக்காமல் தமிழ்த் தேசம் என்று

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

# இன்னொரு

33ஆம் பக்கத்தொடர்ச்சி

தெரிந்திருந்த அறைதான். கமராக்கள், ஒலிப்பதிவுக் கருவிகள் எல்லாம் எரிந்து உருக்குலைந்து உருகிக் காணப்பட்டன. அடுத்து சுவருடன் இருந்த இரும்பு அலுமாரியும் முற்றாகவே உருகிக் காணப்பட்டது. அதற்குக் கிட்டவாகச் சென்று பார்த்தான் கார்த்திக். அலுமாரியுடன் சேர்ந்து உள்ளே வைக்கப்பட்டிருந்த புகைப்படச் சுருள்கள், மென் தகடுள் எல்லாம் உருகி வேறு ஏதோ பொருட்கள் போல உருகிய அலுமாரியுடன் ஒட்டிக் கொண்டிருந்தன. அறை முழுவதும் ஏதோ ஒரு உலோக மணம்.

'சான்'
'என்ன'

'முந்தநாள் எடுத்த சீடி உங்களிடம் பத்திரமாக இருக்கின்றது தானே?' கேட்கக் கூடாத கேள்வி. ஏதோ ஆர்வத்தில் கேட்டுவிட்டான்.

ஏதோ சிரத்தையில்லாதவன் போல் நின்ற சான் விறைப்பானான். கார்த்திக்கின் பக்கமாகத் திருமபியவர், 'இல்லை. அதையும் இங்கேதான் வைத்திருந்தேன். எல்லாவற்றுடனும் சேர்ந்து அதுவும், மற்றய சீடிக்களும் எரிஞ்சுதான் போச்சுது' என்றவர் பழைய நிலைக்கு வந்து எரிபாடுகளைப் பார்க்கத் தொடங்கினார். கார்த்திக்குக்குத் திக் என்றது. அவனுக்கு நல்ல ஞாபகத்தில் வந்தது. அன்றைய உரையாடல்களை, மணியனின் மொழிபெயர்ப்புடன் கூடிய உரையாடல்கள் அடங்கிய மஞ்சள் நிறச் சிறிய சீடியை ஒரு மெல்லிய இளஞ் சிவப்புப் பொலித்தீன் உறைக்குள் போட்டு தனது கோட் பைக்குள் போட்டுக் கொண்டது இப்பவும் கார்த்திக்கின் கண்ணுக்குள் நிழலாடியது. ஏன் சான் பொய் சொல்லவேண்டும்? கார்த்திக்குக்கு புதிராக இருந்தது.

(இன்னமும் வரும்)

# கனடாவில்...

26ஆம் பக்கத்தொடர்ச்சி

மாகவோ அல்லது சேவையடிப்படையில் இலவசமாகவோ பணிபுரிந்து வருகின்றனர்.

'வில்லா கருணா' வின் முதியோர்களை வைத்தியசாலை போன்ற இடங்களுக்கு ஏற்றி இறக்கும் பணியை அவரது புதல்வர்கள் மூவரும் ஏற்றுக்கொண்டுள்ள னர், தாதி சேவையில் இருப்பவர்களை மேற்பார்வை செய்வதும் நள்ளிரவுப் பணியை மேற்கொள்வதும் இவரது தாயார்.



இத்தகைய பணிகளுக்கான பயிற்சிகளை தமது கல்வியோடு மேற்கொண்டு இவருக்கு உதவி செய்பவர்கள் சகோதரி குடும்பங்கள். இப்போது அங்கே பத்து முதியோர் இருக்கின்றனர். Community Care Access Centre (CCAC) இன் உதவிபெறுவோருக்கு அவர்கள் வந்து தம் சேவையை ஆற்றுகின்றனர்.

அன்று நன்கொடையாளருக்கான இசை யரங்கம் நன்கொடையாளர்களை மகிழ்விக் கவே பயன்படுத்தப்பட்டது. இசையரங்கு தகுந்த வாத்தியக்கோஷ்டி யுடன் புதிய பழைய சினிமா பாடல்களுடனும் கீழைத்தேய நடனங்கள், பிறேக் கஜல் போன்ற நடனங்களுடனும் நடைபெற பிரபுதேவாவின் நடன அமைப்பில் ஓர் இளைஞன் தம் ஆற்றலால் சபையை மகிழ்வித்து கரகோஷங்களால் உற்சாகப்படுத்தப்பட்டார்.

கௌரவவிருந்தினர்களான லலிதாபுறூடி, நிர்மலா சுரேஷ், சாமி அப்பாத்துரை முதலியோர் இந்திராணி நாகேந்திராவின் செயலைப் பாராட்டியும்
வாழ்த்தியும் தமது அனுபவங்களைக் கூறியும் மகிழ்ந்தனர். பிரதம விருந்தினரான வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) இந்திராணியின் துணிகரமான தீர்க்க தரிசனத்தைப் பாராட்டியும், முதியவர்கள் பழைய பொற்காலங்களை நினைந்து வருந்திக் கொண்டிரமால் புதிய விடயங்களை அறிந்து, மகிழ்ச்சியான மனோ நிலையை வளர்த்து உற்சாகமாக வாழ வேண்டும் எனக்கூறி இந்திராணியை முன்மாதிரியாகக் கொண்டு ஆண்களில் பணபலமும் சேவையுணர்வுமிக்கோர் இருவர் மூவர் சேர்ந்து ஒரு முதியோர் இல்லத்தை அமைத்து அரசஉதவியையும் பெறமுடியும் எனவும் ஒரு கோரிக்கை விடுத்தார்.

எமது சமூகத்தில் தாதிபயிற்சி பெற்றபலர் இருப்பதால் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். வழக்கம் போலவே தொண்டர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பெற்றன. இந்திராணி நாகேந்திராவின் நன்றியுரை உணர்ச்சிவாய்ந்ததாக மெய்சிலிர்க்க வைத்தது. சிற்றுண்டியும் தாரளமாக வழங்கப்பெற்று ஒரு ஸ்தாபனத்தின் சமூகவுணர்ச்சியில் நாமும் பங்குகொண்டோமே எனும் மன மகிழ்ச்சியும் உன்னத உற்சாகமும் பெற்ற உணர்வைத் தந்து விழா இனிது நிறைவேறியது.




நகைச்சுவைத் தொடர் 246

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





## கீதா உபதேசம்

'வரும்போது எதைக்கொண்டு வந்தாய்'

தை மாதம் தைப்பொங்கல். மாசியில் மாசிமகம், சிவராத்திரி. பங்குனியில் உத்திரம். சித்திரையில் தமிழ் புதுவருடம் என மங்கள தினங்கள் மாறி மாறி வந்து வைகாசியில் ஈழப்போரின் உச்சக்கட்டமாக உலக நாடுகள் கைகோத்து கர்ப்பிணிப்பெண்கள், கைக்குழந்தைகள், கைத்தடியூன்றும் முதியோர், காயமுற்று நகரமுடியாதவர்கள் என பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் எதுவித பேதமின்றி முள்ளிவாய்க்காலில் பாதுகாப்பு வலையமென கூறிய இடங்களில் குண்டுமழை பொழிந்தது.




தமிழரின் உரிமைக்குரல்களை அடக்கம் செய்த நாள். ஆட்டிலறி விமானக்குண்டுவீச்சு... இன்று கண்ணீர் வடிக்கும் சர்வதேசநாடுகளும் இணைந்து தமிழரை சர்வநாசம் செய்த நாள். பலர் இறந்தவர்களையே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

சர்வதேசமோ இன்றுவரை இறந்தவர்கள் எத்தனைபேர் என எண்ணி முடியவில்லை.



தமிழரின் பெரும் பொக்கிசமான யாழ் நூலகம் எரியூட்டப்பட்டு பல வருடங்களாகி விட்டன.

எங்கடை துணுக்காய் வீடு..என்ரை சீதனக்காணி கச்சேரியடியிலை என அடிக்கடி பெருமை பேசும் ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்ல்மாவும் இப்போ அதிகம் அதுபற்றிக் கதைப்பதில்லை.



வாடகைக்குக் கொடுத்த வீடு குத்தகைக்குக்கொடுத்த காணி பார்க்கப்போனவர்கள் பலர் தங்களுக்குக்கிடைத்த அனுபவங்களை துருவித் துருவி கேட்டு ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டனர். தமிழ்ப்பகுதிகளிலுள்ள இராணுவத்தினருக்கும் உறவினர்களுக்கும் வீடு கட்டவே எமது பகுதிகளில் இடம்போதாது. சொந்த வீடு வளவை பிள்ளைகளுக்குக் காட்டச்சென்று சொந்த ஊரிலேயே லொட்ஜ்ஜில் தங்கித்திரும்பியவர்கள் எத்தனைபேர்.



பெற்ற தாயும் பிறந்த நன்னாடும் நற்தவவானிலும் நனிசிறந்ததுவே.
அழகான அந்தப் பனைமரம் அடிக்கடி நினைவில் வரும்.
அன்று முற்றத்தில் அழித்து அழித்து நான் அ னா எழுதிய மண்ணல்லவா.

காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும் என பாரதி பாடலை பாடித்தான் பார்க்க முடிகிறது.
பாரதிக்கு தெரியுமா பாதுகாப்பு வலையம் என்ற போர்வையில் எமது நிலங்கள் அரச படையிடம் பாதுகாப்பாக இருப்பது.
இன்று உன்னுடையதாக இருப்பது நாளை இன்னொருவருக்கு சொந்தமாகிறது.



மே. 2012 ஞாபகம் வருகிறதா!



16. 1667 இல் யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக வாக்கிய பஞ்சாங்கம் ராமலிங்க முனிவரால் வெளியிடப்பட்டது.
17. வன்னிப்போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் இலங்கை அரசபடையால் படுகொலை செய்யப்பட்ட நாள். வில்லியம் சேக்ஸ்பியர் நினைவு தினம் (1616)
18. போர்க்குற்றநாள் (தமிழீழம்) 2009
19. 1604 மொன்றியல் நகரம் அமைக்கப்பட்டது.
20. விக்ரோறியா டே - கனடா விடுமுறை நாள்.
22. இலங்கை குடியரசு நாள் 1972
25. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பிறந்ததினம் (1878) (நாராய் நாராய் செங்கால் நாராய், ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே.)
25. 1918 ஆத்மஜோதி நா.முத்தையா (ஆத்மஜோதி இதழாசிரியர்.)
28. இலங்கை இனக்கலவரம் (1958)
28. என். டீ. ராமராவ் நடிகர் அரசியல்வாதி பிறந்தநாள் (1923-1998)
28. சிவயோக சுவாமி ஈழத்துச்சித்தர் பிறந்த தினம் (1872-1964)
29. ஜோன். எவ். கெனடி அமெரிக்க ஜனாதிபதி பிறந்த திகதி (நாடு உனக்கு என்ன செய்ததென்று கேளாதே நீ நாட்டுக்கு என்ன செய்தாய்?)
31. (1911) டைட்டானிக் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்ட நாள்.
31. (1981) யாழ். பொது நூலகம் எரியூட்டப்பட்ட நாள்.
31. புகையிலை எதிர்ப்பு நாள்.












# "தமிழ்நாட்டை...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

அழைக்க வேண்டும் என்றும் இந்தியாவைத் தேசம் என்று அழைக்காமல் ஒன்றியம் என்று அழைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தும் மாநாட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிந்தேன். ஒரு மனதாக அது ஏற்கப்பட்டது. இதற்காக என்னை 1990 திசம்பர் 25ஆம் நாள் சிதம்பரத்தில் வைத்துத் தளைப்படுத்திச் சென்னை நடுவண் சிறையில் அடைத்தார்கள். 8 ஆண்டுகள் வழக்கு நடந்தது. தீர்மானம் நிறைவேற்றியதை நாங்கள் மறுக்கவில்லை. அது சனநாயக உரிமை என்ற கோணத்தில் வழக்கறிஞர்கள் வாதிட்டார்கள். இறுதியில் வழக்கு விடுதலையானது. அம்மாநாட்டிற்குப் பிறகு எம்சிபிஐ உறவைத் துண்டித்துக் கொண்டோம். கட்சியின் பெயரை தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி என்று 1991இல் மாற்றினோம்."

தமிழ்த் தேசியம் என்ற கருத்தியலின் மீது தலித்துகள் அச்சம் கொண்டுள்ளது பற்றி உங்கள் கருத்து என்ன?

"தலித் மக்களிடையே இப்படி ஓர் அச்சம் இருப்பதாகக் கூறுவது சரியன்று. எங்கள் அமைப்பிலும் வேறு சில அமைப்புகளிலும் உறுப்பினர்களாகவும் உயர் பொறுப்பாளர்களாகவும் ஒடுக்கப்பட்ட வகுப்புகளில் பிறந்த தோழர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். தலித்தியம் என்று ஒரு தத்துவத்தை உருவாக்க முயலும் உதிரியாக உள்ள தனிநபர்கள்தான் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான கருத்துகளைக் கிளப்பி விடுகிறார்கள். அவர்கள்தான் தமிழ்த் தேசியத்தை அவ்வப்போது கொச்சைப்படுத்துகிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள், தாங்கள் தமிழர்கள்தான் என்று இன உணர்வு பெற்றுவிடக் கூடாது என்பது தலித்தியம் பேசும் உதிரித் திரிபுவாதிகளின் நோக்கமாக உள்ளது. அவர்கள்தான் தமிழ்த் தேசியத்தைக் கண்டு பீதியடைகிறார்கள்."

இந்தியர் இந்தியாவெங்கும் பணிபுரியலாம், தொழில் தொடங்கலாம் என்றிருக்கும்போது அயல் மாநிலத்தவர் என இந்தியரைப் பிரித்துப் பார்ப்பதும் வெளி மாநிலத்தவர் வெளியேற வேண்டும் என்பதும் ஏற்க முடியாததாக இருக்கிறதே! நீங்கள் எழுப்பும் வெளி மாநிலத்தவர் பிரச்சினையால் வெளி மாநிலங்களில் வேலை செய்யும் தமிழர்கள் தாக்கப்படலாம் அல்லவா?



"தமிழ்நாடு தமிழர்களுக்குரிய தாயகம். இதில் வரம்பின்றி, வரைமுறையின்றி அயல் இனத்தவர் அயல் மாநிலங்களிலிருந்து வந்து குடியேறுவது மண்ணின் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் செயலாகும். பத்து விழுக்காட்டிற்கு அதிகப்படாமல் வேற்றினத்தவர் இருக்கலாம். அதற்கும் அதிகமாக வேற்றினத்தவர் இருந்தால் அங்கு மண்ணின் மக்களுக்கு தொழில், வணிகம், வேலை, உள்ளிட்டவற்றில் பாதிப்புகளும் பண்பாட்டுச் சீர்கேடுகளும் இன அடையாள அழிப்புகளும் நடந்தே தீரும். அண்மைக் காலமாக கொள்ளை, கொலை போன்ற தீச்செயல்களில் வெளிமாநிலத்தவரே அதிகமாக ஈடுபடுகின்றனர் என்பது தெரிய வந்துள்ளது. எனவேதான், 1956 நவம்பர் 1ல் மொழிவழி மாநிலம் அமைக்கப்பட்டபின் தமிழ்நாட்டில் குடியேறிய வெளி மாநிலத்தவரை வெளியேற்ற வேண்டும் என்று தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி வலியுறுத்துகிறது.

ஒருவேளை நாம் தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலத்தவரை வெளியேற்றும்போது வெளி மாநிலங்களில் உள்ள தமிழர்களை அவர்கள் வெளியேற்றினால் இங்கு வெளிமாநிலத்தவர் விட்டுச் செல்லும் வேலைகளையும் தொழில் மற்றும் வணிகங்களையும் வெளியிலிருந்து வரும் தமிழர்களுக்கு நாம் வழங்கலாம்.

இப்பொழுது ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கில் வெளிமாநிலத்தவர்கள் தமிழ்நாட்டில் குடியேறுகின்றனர். இந்த நிலை நீடித்தால் இன்னும் பதினைந்து ஆண்டுகளில் தமிழர்களின் மக்கள் தொகைக்குச் சமமாகப் பிற இனத்தவர் பெருகிவிடுவர். அப்போது தமிழகம் தமிழர்களின் தாயகமாக இருக்காது கலப்பினத் தாயகமாக மாறிவிடும். இந்த அபாயத்தைத் தடுக்க, தமிழர் தாயகத்தைக் காக்க ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் முனைந்து செயல்பட வேண்டும்.

இந்திய அரசின் எல்லாவகை உதவிகளோடும் 2009ல் முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்தபோதும் தமிழகத் தமிழர்களால் அதைத் தடுக்க முடியவில்லை. இப்பொழுது ஈழத்தில் நடக்கும் பெரும் கொடுமைகளையும் தமிழகத் தமிழர்களால் தடுக்க முடியவில்லை. தமிழர்களுக்கு ஒரு தேச அரசு இல்லாததாலேயே உலகக் கவனத்திற்கு ஈழப் பிரச்சினையை கொண்டு போக முடியவில்லை. சிங்கள இனவெறிக்குத் துணையாகவும் தமிழ் இனத்திற்குப் பகையாகவும் இலங்கையில் தலையிடும் இந்திய அரசைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் தமிழகத் தமிழர்களுக்கு வரும்போதுதான் தமிழீழ வானத்தில் விடியலுக்கான ஒளிக் கீற்றுகள் தோன்றும். அத்தகைய ஆற்றலைத் தமிழர்கள் பெற தமிழ்த் தேசிய அடிப்படையில் இன உணர்ச்சியும் இன ஒற்றுமையும் பெற வேண்டும். அதுவரை நாம் ஓய்ந்திருக்க வேண்டியதில்லை."

*நன்றி: கருக்கல்*

# வழக்கு எண்:....

16ஆம் பக்கத்தொடர்ச்சி

யல் - காவல்துறை - முதலாளிகள் இவர்களுக்கிடையே தொடர்புக்கண்ணியாக ஜோதி முகத்தை பார்த்தும், நான் உனக்காக காத்திருப்பேன் என்று வேலு சொல்லும் காட்சியில், விழியோரம் நீர்



பணம் மட்டுமில்லை, சாதியும் இருக்கிறது என்பதை விளைவுகளை எண்ணாமல் பட்டவர்த்தனமாக போட்டு உடைத்திருக்கும் பாலாஜி சக்திவேலின் துணிச்சலை கரகோஷம் எழுப்பி வரவேற்கலாம்.

இறுதியில் ஆசிட்டால் மாற்றம் அடைந்த துளிர்க்காதவர் கல் நெஞ்சக்காரர்களாய் தான் இருக்க முடியும்!

வழக்கு எண்: 18/ 9 - கட்டாயம் பாருங்கள்!













# சிவத்தமிழ்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

தொடர்ந்து பிரதமவிருந்தினர் திரு. வேலுப்பிள்ளை நந்தீஸ்வரர் உரையாற்றி னார். விழாவிற்கு வருகைதந்த 42 ஆவது பிரிவைச் சேர்ந்த பொலீஸ் அதிகாரி Sgt. Bernard, பொலீஸ் நிர்வாகம் எவ்வாறு தமிழ் சமூகத்துடன் சேர்ந்து செயலாற்று கிறது எனக் கூறினார். அருட்கவி திரு. தம்பிஜயா ஞானகணேசன், திரு. R.N லோகேந்திரலிங்கம் அவர்கள் கௌரவ விருந்தினர் உரைநிகழ்த்தினார்கள். கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து ‘முத்தமிழில் நம் தெய்வங்கள்’, ‘நீர்க்கோலம்’ ஆகிய நாடகங்கள் மற்றும் ‘வர்ணகோலங்கள்’ கவியரங்கம் என்பன நடைபெற்றன. தமிழர் பண்பாடு தளர்ச்சியா? அல்லது வளர்ச்சியா? என்ற தலைப்பில் ஒரு பட்டிமன்றமும் நடந்தது.

பெற்றோரின் பார்வையில் உரையாற்றிய சிவ. ஞானநாயகன் வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரியின் கல்வித்திட்டம் பற்றி கூறுகையில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எப்பொழுதும் மதங்கள் உறுதுணையாக இருந்திருக்கின்றன என்றார். கிட்டத்தட்ட நூறு வருடங்களுக்கு முன்னர் இந்திய சுதந்திர போராட்டத்தை ஆதரித்த படித்த அந்தணர்களை எதிர்க்க ஆங்கில அரசு சில தமிழர்களை மதத்திற்கும், அந்தணர்களுக்கும் எதிராக தூண்டியது. அவர்களைக் கொண்டு திருவள்ளுவர் எந்த சமயமும் சார்ந்தவர் அல்ல என்றும், அவர் பிறந்தது என ஒரு கற்பனை திகதியையும் தெரிவு செய்து அதை தமிழ் வருடப்பிறப்பாக்க முயன்றனர் என்றார். அதையே தற்போது மதங்களுக்கு எதிராக தம்மை தாமே பகுத்தறிவு வாதிகள் என்போர் தமிழ் கல்வித்திட்டத்திற்குள் புகுத்த முயல்கின்றனர். இவ்வாறு சமயத்திற்கும் மற்றும் அந்தணர்களுக்கும் எதிரான பகுத்தறிவு வாதிகள் என தம்மை அழைப்பவர்களது கல்வித்



திட்டத்திற்குள் சேராமல், தமிழை சைவசமயத்துடனும், பண்ணிசையுடனும் சேர்த்து எமது பிள்ளை களுக்கு வரசித்தி விநாயர் இந்துக்கல்லூரி கற்பித்து வருவது பெருமைக்குரிய விடயம் என்றார். இதுவே தாங்கள் 200 கி.மீ தூரத்திற்கு அப்பால் இருந்து ஞாயிறு தமது மகளை வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் கற்க அழைத்து வருவதற்கான முக்கியகாரணம் என்றார்.

இந்துக்கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஜெயானந்தசர்மா தியாகராஜாஐயரின் நன்றி உரையை தொடர்ந்து விழாவின் நிறைவாக ‘அருள்பெற்ற அபிராமிப்பட்டர்’ நாடகம் நடைபெற்றது. இந்நாடகத்தில் அபிராமிப்பட்டராக வந்த அபர்ணா அரிதாஸ், அபிராமிப்பட்டராகவே மாறி உணர்ச்சி பூர்வமாக நடித்தார். நிகழ்ச்சி களின் இடையிடையே ஒலி வாங்கி சரியாக தொழிற்படாமல்விட்ட குறைபாட்டை தவிர நிகழ்வுகள் யாவும் சிறப்பாக நெறியாள்கை செய்து மேடையேற்றப்பட்டிருந்தன. சிவத்தமிழ் விழா நிகழ்வுகள் யாவும் 11.00 மணியளவில் நிறைவு பெற்றன.



அருந்ததி ஞா.



Thayalan (Thaya) Gobalakrishnan
Mortgage Development Manager
Scarborough North, Markham and Stouffville
Call me for any Mortgage Financing questions
* New Mortgages
* Refinance
* Equity take out
you're richer than you think.
Cell: 416-575-3211
Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@scotiabank.com
Scotiabank

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated

NILAVAN PAINTING
Interior & Exterior Painting
For Residential & Commercial
Free Estimate Home & Office Interior & Exterior Painting
Using High Quality Materials
Ugee: 647.456.3079 Baskar: 416.833.5620

"Let me help you make the right choice"

SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

Kantha Property Management Group Inc.
KPM Group Inc.
Personal and Business Loans
Line of Credits
Business Setup Consultancy
1st and 2nd Mortgages
Residential and Commercial Leasing
Investment Properties
Property Management Services
Bad Credit Solutions
Bankruptcy
Consumer Proposals
T: 416-214-6161
F: 416-465-3535
3015 Kennedy Road, Suite 205, Toronto, ON M1V 1E7
www.KPMInvestment.com, kantha@KPMInvestment.com

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES


Low Mortgage Rates
TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
Banking can be this comfortable
ADVICE WHEREVER WHENEVER
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolidation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute